# பெண்கள் ஜனன
# ஜாதக பலபோதினி



**கலா நிலையம்,**

1/5, செட்டியார் தெரு,

கொழும்பு.

காபி ரைட்]

[விலை ரூ1-50

# பெண்கள் ஜனன ஜாதகபல போதினி

இஃது
வடமொழி, தமிழ்மொழி நூல்களில் முக்காலமும் உணர்ந்து
உரைக்கும் முனிவர்கள் அருளிச்செய்த நாடிக்கிரந்தங்
களிலும், சோதிட நூல்களிலும் இருந்து
சேகரிக்கப்பெற்றது.

★

★

உரிமையாளர் :
**கலா நிலையம்,**
175, செட்டியார் தெரு,
கொழும்பு.

உரிமை பதிவு]

[விலை ரூபா 1-50

# உரிமை அறிக்கை

நான் இந்தப் புத்தகத்தை சென்னை ஒ. ஆதிமூலம் சன் உரிமையாளர் ஸ்ரீ ஒ. ஆ. கண்ணப்ப முதலியார் வசமிருந்து சகல உரிமைகளையும் பெற்று பிழை திருத்தி அச்சிட்டுள்ளேன்.

இதனுள் சில சொற்களையோ, அல்லது சில பகுதிகளையோ பேதப்படுத்தி அச்சிடுபவர்கள் காப்பி ரைட் சட்டப்படி நஷ்டத்திற்குப் பாத்திரர்களாவார்கள் என்று இதன் மூலமாய்த் தெரிவிக்கின்றேன்.

**சி. பத்மநாப ஐயர்,**
அதிபர்.

**கலா நிலையம்,**
175, செட்டியார் தெரு, : : : கொழும்பு

நாரதாதி மகரிஷிகளால்
திருவாய்மலர்ந்தருளிய

# பெண்கள் ஜனன
# ஜாதக பல போதினி

## காப்பு

இத்தரை றண்ணிலுள்ளோர்க் கின்பமும் பொருளுஞ்ஞானம்
சித்தமா யீந்துகாக்குஞ் சிவனிட புதல்வனுகி
யத்திமாமுகமு மைங்கை யாகுவா கனமும்பெற்ற
சத்தியின் கணைபதித்தாள் சாற்றினேன் காப்புதானே.

---

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

திருமருவுங் கார்க்குஞ்சூர் திருவடித்
துதிசெய்து திகழும் வாக்காள்
நருமலர்கள் கொண்டேத்தி நங்கையரின்
ஜாதகம் ருதுவின் வாழ்க்கை
கருமமுட னனைத்தையுங் கழலபல
நூல்களைக் கனிய நோக்கி
தருமநூல் மொழிகளையுந் தாண்டாது
யுரைசெய்ய தயைபுரிகுவா யென்னுளே.

---

## அவையடக்கம்

நான்முகன் படைப்பில்தோன்றும் நரர்களிற் புருடறின்றி
மான்விழி மங்கையர்கள் மங்கல குணங்கள் நன்மைத்
தான்யனு பவிக்கும்யோகந் தலைவனி னின்பதுன்பம்
மேன்மையா யுரைக்கயின்னூல் மொழிந்தனன் றமிழிளோரே.

## பாயிரம்

இப்பூவுலகின்கண் ணுதயமாகும் பிரசைகளில் புருட பிறப் பிற்கே பலாபலன்களைப் புகல பற்பல சோதிடநூல் பரவியுளது. அவ்வாறே அரிவையர்களுக்குப் பலன்களைக் கூறலாமென்று

யோசிக்குங்கால் சிற்சில பாவங்கள் பேதமாகவும் பொருந்தா மலுமிருக்கும் அவ்விதம் பொருந்தாத பலன்கள் வீணுகுமா யெனக் கருதாதீர்கள். ஏனெனில் பெண்கள் பிறந்தது முதல் மணமாகும் வரையில் பெற்றோர்களுக் காதீனமாகையால் அக் காலத்திலுண்டாகும் பலன்களை தாதையர்களே அனுபவிக்க வேண்டியது. கைப்பற்றலின்பின் இப்பெண்மணிகள் கணவனுக் காதீனம் அக்காலத்து பலன்களை புருஷனே அனுபவிக்கவேண் டியதென மனுபராசரர் முதலானவர்களா லியற்றிய தருமநீதி.

*இதிற்கொப்பாக நீதிசாரத்தில்*

**விருத்தம்**

மங்கையர் வாளுநாளிற் வளமொடு பிதாவேகாப்பான்
பொங்கிய யவ்வனத்தில் பொருந்து பர்த்தாவேகாப்பான்
தங்கிய மூப்பிலேதன் தநயனே காப்பாநன்றிச்
சங்கையா மெக்காலத்தும் சுதந்தர மில்லைதானே. (2)

என்று வரைந்துள நீதி ஆதலின் பெண்களுக்குச் சொல்லக் கூடியது ரூபம் குணம் தேகசௌக்கியம் செல்வம் விவாககாலம் பதியின் குணம் அழகு சுகம் மாங்கல்யம் சந்ததிவிர்த்தி ஆயுள் முதலான பலன்களும் ஜனனகால நக்ஷத்திர தோஷமும் விஷ கன்னிகை யோகமென்னும் அமங்கலியோகமும் கண்டுரைத்தல் அவசியமாம் மேலும் புருடஜாதகத்தைப்போல் பெண்களுக்கும் இராஜயோகங்க ளமைவதுண்டு அதனை எடுத்துரைக்க நூல் பெருகுமென்று அச்சமுற்று ஒருவாருக ஜனனகாலத்திலுள்ளதிதி - வார - நக்ஷத்திர - லக்னம் - நவாம்சை - திரிம்சாம்சை - பலனும் பன் னிரண்டு பாவபலாபலன்களையும் அனைவரும் கண்டு ஆமோதித்து ஆனந்தங் கொள்ளும் வண்ணம் பற்பல வடமொழித் தென் மொழி நூற்களை பரிசோதித்து இனியசொற்க ளமைக்கப்பெற்று செய்யுள் ரூபமாக பிதற்றியுள்ள இதனில் எவ்வித குற்றங்க ளிருப்பினும் சீர்திருத்தி பொறுத்தாள்வீரென கோருகின்றனன்.

## 1 - வது அத்தியாயம்

### *ஜனனகால விசேடங்களை யுணர்த்துவாம் பாவபேதங்கள்*

மங்கையர்க் கெட்டாம்ராசி மாங்கல்லியத் தானமாகும்
நங்கையர் பதியின்பாக்கியம் நற்சுகஞ் சுதருமேழாம்
பொங்கிடும் பாக்கியமொன்பாண் பொருந்திய லாபமைந்து
தங்கிடும் பதியேபொன்னேன் தனத்துளோன் வெள்ளியாமே.

(இ - ள்) பெண்கள் ஜனனமான ராசியாகிய லக்கினத்திற்கு எட்டாமிராசியானது, மாங்கல்லியத்தானம் பதியின் மரணமும் அறியக்கூடியதாம்.

ஏழாம் ராசியில் பதியின் குணவிசேஷம் பதிசௌக்கியம், சுகம் புத்திரத்தான மெனப்படும் ஒன்பதாம் ராசி தனது பாக்கியம் சந்ததி விளக்கம் முதலிய பலன்களுள்ளது.

ஐந்தாமிடம் பாக்கியலாபமெனப் பெயராம், இலக்கினம், சந்திரன் நின்றராசி இவ்விரண்டையும் பார்த்து அழகு சரீரகாந்தி சுகம் முதலான பலன்கள் உரைத்தலாம் மற்ற பாவங்கள் புருட ஜாதக பாவங்களைப்போலவே யுரைக்கலாம், பெண்களுக்கு பர்த்தாவென்னும் புருஷகாரகன் வியாழன் (குரு) தனகாரன் சுக்கிரனுமாம்.

### வேறு சிலர் கூறியவாறு

ஏழாம் ராசியினுல் பதியின் குணம் ஐஸ்வரியமும், நான்காமிராசியினுலும் மேல்கண்டபடி பலனும். ஐந்தாம் வீட்டில் புத்திர பாக்கியமென்றும், கூறியுள்ளர் இவைகளை யோசித்து பலன் சொல்லுதல் நலமாம்.

### பெண் உருவ சக்கிரம்

கன்னிபோ லுருவந்தன்னிற்
கதிரவன் நின்றநாள்தொட்
டுன்னியே சிரத்தில்மூன்று
உரைத்தனர் முகத்திலேழாம்
இன்னமுந் தனத்திலெட்டா
மிருதய குணமாமென்ருர்
நன்னய சுடராங்குய்யம்
நாபியி லுலகமானே (4)

(இ - ள்) பெண்போல உருவம் எழுதி அதில் ஜனனமான மாதத்தில் சூரியன் சஞ்சரிக்கும் நக்ஷத்திரம் முதலாக சிரசில் மூன்றும் முகத்தில் ஏழும் தனத்தில் எட்டும் மார்பில் மூன்றும் குய்யத்தில் மூன்றும் நாபியில் மூன்றுமாகப் பிரிக்க இருபத்தேழு நட்சத்திரங்களாகும் இதனில் எந்த நட்சத்திரத்தில் ஜனனமோ அந்த நட்சத்திரம் மேல்கண்ட இடங்களில் எவ்விடத்திலுள்ளதோ அதைக்கண்டு பலனைச் சொல்லவேண்டியது.

### சுக்கிர பலன்

சிரசினில் தாபமெய்யுஞ் சீர்மிகும் முகத்தினிற்ருல்
உறவுசௌ ப்ாக்கியங்க ளுகந்திடுந் தனத்துநாளில்

பெருகுமே சுகங்கள்மார்பு பேதமை பொய்யாள்துட்டி
கருவுள நாபிகுய்யங் காணும்விப சாரியாமே. (5)

(இ - ள்) சரீரத்திற்குப் பிரதானமும் உத்தமாங்கமென்றுரைக்கக்கூடிய சிரசிலிருந்தால் எப்பொழுதும் அனல்கொண்ட சரீரமும் மன விசாரமாம்.

முகத்தில் தனதான்னியவிர்த்தி அன்னதானப் பிரியம் சுகபோசனம் முகவசீகரமும் உண்டாம்.

ஸ்தனத்திலிருந்தால், பதிசௌக்கியம், ஜனப்பிரியம், காமியாயுமிருப்பாள் மார்பில் நின்றால் பேதமை பயம் சௌக்கியமுண்டாம் நாபியாகிய உந்தீகமலமென்னும் வயிற்றிருந்தால் சந்தோஷமில்லாள் பொய்யுரைக்குந் துட்டகுணங்களாம் குய்யமெனும் மறைவிடத்திருந்தால் அதிககாமியும் விபசாரபுத்தியும் வஞ்சனையுமுண்டென்றுரைத்தலாம்.

---

## 2 - வது அத்தியாயம்

### இனி பஞ்சாங்கபலனைக் கூறுவாம்

### திதி பலன் பிரதமை

ஓதியபிரதமைதன்னி லுத்தமிசனனமானல்
மாதளம்பதிக்குநல்லாள் மகிதனில்புண்ணியசாலி
தீதிலாப்பிள்ளைப்பேரன் தீங்கின்றிபெற்றெடுப்பாள்
சோதியாம்பிரமஞான சுகமதைகைக்கொள்வாளே. (6)

(இ - ள்) சந்திரனுக்கு முதல்நாளாகிய பிரதமையில் ஜனனமானல் பதிக்குப் பிரியமானவள் புண்ணியஞ் செய்தவள் புத்திர பௌத்திர விருத்தி பிரமஞான விசாரமுள்ளவளாம்.

### துதிகை

அழகியாம் துதிகைநாளி லவனியில் ராஜசௌக்கியம்
தழைத்தலாங் குழவுநெஞ்சந் தயையொடு தருமசிந்தை
கழருவேன் கண்கள்கூந்தல் கருநீல மணியென்றெக்கும்
நிழல்தரு மரத்தைப்போலே நீடூழி வாழ்வாள்தானே. (7)

(இ - ள்) துதிகையில் ஜனித்த பெண்ணானவள் அழகி தயை ராஜ சௌக்கியம் தர்மபுத்தி குழந்தை நெஞ்சம் கண்களும் தலைமயிரும் நீலமணியைப்போல் அழகுள்ளவளாம்.

### திருதியை

பொறுமையும் பாக்கியங்கூடும் போகமும் விருத்தியாகும்
அருமைசேர் நடைதான்வேழம் மாதியில் புதல்விவாய்க்குந்
துருசுடன் நீரிலாடத் துணிவுட ளுசையுள்ளாள்
கருணையாள் திரிதியைதன்னிற் காசினி யுதித்தாளுக்கே. (8)

(இ - ள்) திருதியிலுதித்த பெண் பெருமை பாக்கியம் நற்சுகம் பதிவிரதை யானையைப்போல் நடை கருணையுள்ள நெஞ்சம் நீராட்டத்தில் பிரியம் முதலில் பெண் குழந்தை வாய்க்கும்.

### சதுர்த்தி

கடினமாஞ் நெஞ்சந்தாசி கர்மகா ரியங்கள்சூது
விடகன்போல் நடிப்பாள்நித்தம் விதிதனை கேளாள்துட்டி
விடமுள பாம்புக்கேற்கும் விதுவிந்நாள் சதுர்த்திதன்னில்
திடமுட னுதித்தமங்கை தீச்செய லிதுகளாமே. (9)

(இ - ள்) சதுர்த்தி நாளிலுதித்த பெண் குரூரசுபாவம் தாசித் தொழிலிலாசை சூதாடப் பிரியம் தர்மவிவேகமில்லாள் கடினமான நெஞ்சம் செய்யத்தகாத செயல்களைச் செய்தல் வேளைக்கொரு விதமான ஆடையை அணிபவளாம்.

### பஞ்சமி

உறவினர்வாஞ்சை நல்லா ளுகந்திடும் பணிகள்செய்வாள்
தரணியி லிட்டசித்தி தகுந்தநல் லொழுக்கஞ்சீலம்
மறந்திடா ளுபகாரத்தை மாற்றியே செய்யுந்நேர்மை
வருந்துலோர்க் கண்ணில்பாராள் வளர்பஞ்சமி யிந்நாளே. (10)

(இ - ட்) பஞ்சமி திதியில் ஜனித்தமானினீ நல்ல ஆசாரமும் ஒழுக்கம், பந்துஜனப்பிரீதி இஷ்டசித்தி நற்காரியங்கள் செய்தால், சுகீபரோபகாரத்தை மறக்காள் சமயத்தை எதிர் பார்க்கும் நேர்மையாம்.

### ஷஷ்டி

சத்திய முரைப்பாள்நல்ல சச்சன ருறவுகொள்வாள்
இத்தரை யுறவினோர்க்கு இன்பமும் மேன்மையாவாள்
சித்தத்தில் கோபச்சொற்கள் சிடுசிடுப் புடனேசொல்வாள்
மெத்தவும் மெலிந்தமேனி மேதினி ஷஷ்டிநாளே. (11)

(இ - ள்) ஷஷ்டித் திதியில் ஜனித்த பெண் சத்தியவாக்குடையவள் சுகமான மெலிந்த சரீரம் நல்லோர் சினேம் பந்து சனங்களுக்கு பிரியமானவள் கோபிகுரூரமான வார்த்தை யுரைப்பவளாம்.

### சப்தமி

நீண்டநற் பார்வைநெஞ்சம் நின்மல தயையும்பத்தி
வேண்டிய தானதர்மம் விருப்பமாய் செய்வாளுற்ருர்
மீண்டுநல் லபிமானங்கள் மிகுந்திடுஞ் சப்தமிதிதியாள்
தாண்டநாள் தன்னில்வந்த தையலர் குணமிதாமே. (12)

(இ - ள்) சூரியனுக்குப் பிரியமான சப்தமி திதியில் பிறந்த பெண்ணுக்கு விசாலமான கண்கள், மனேற்சாகம், தயை குரு தேவதாபத்தீ தானதர்மபுத்தி ஜனங்களிடத்தபிமானம், உள்ளவளாம்.

### அட்டமி

மனதில் தயையில்லாதாள் மலடியா மருபிதுஷ்டை
தனமிலா தரித்திரியென்பார் தரணி யிலெதிர்மாருகும்
சினமுளா ளிறைச்சிகள்ளுஞ் சிதருமல் கொள்வாள்நித்தம்
அனங்கனே எரித்தோனுக்கு ஆவலா மட்டமிநாள். (13)

(இ - ள்) மன்மதனேயெரித்த மஹாதேவனுக்குகந்த அட்டமி திதியில் பிறந்த மங்கையர்க்கு தயை தாட்சண்ணியமின்மை மலடி ரூபமில்லாள் எதிர்மாறு நடை தரித்திரம் புலால் கள்ளு இவற்றில் பிரீதியுள்ளவளாம்.

### நவமி

அல்லல்கள் தீர்க்குந்துர்க்கைக் கதிபிரிய நவமிநாளில்
இல்லறத் துதித்தாள்கோபி இடறுகள் புரிவள்துட்டை
சொல்நய மில்லாள்வேள்விச் செய்யுமுன் சுரதங்கற்ருள்
நல்லதோர் குணமுமில்லை நாளெலாம் விசாரமாமே. (14)

(இ - ள்) துர்க்காதேவிக்குப் பிரியமான நவமி திதியில் ஜனனமான பெண்ணுக்கு முன்கோபம் கடினவாக்கு துட்டசுபாவம் கட்டங்களை வருவித்துக்கொள்வாள் விவாகத்திற்கு முன்னமே புருட சம்பந்தமுடையவள் எப்பொழுதும் விசாரமுள்ளவள் என்பதாம்.

### தசமி

தருமசிந் தனேயுந்நீண்ட தருதியாய் கழுத்துதேகம்
அருமறை தேவர்பூசை ஆசையாய் புரிவள்புத்தி
குருவென சாற்றலாகுங் குழலிக ளுண்டுமானி
வருவதை யுரைப்பாள்நித்தம் வாய்க்குமே தசமிநாளில். (15)

(இ - ள்) ஜயத்தைப்பெற்ற தசமி திதியில் ஜனித்த பெண்ணுக்கு தருமபுத்தி சற்று நீண்டகழுத்தை சரீரம் சுகம் பிரகஸ்வதிக்குச் சரியான எதிர்காலத்தை யுணர்ந்து சொல்லும் புத்தியும் ஆசார சீலமுமாம். தேவதார்ச்சனைகளில் பிரியம் கற்புடையவள் புத்திரபாக்கியமுள்ளாள்.

### ஏகாதசி

வேதியர் தேவபூசை விருப்பமாம் தருமசிந்தை
தீதிலா சாத்திரத்தால் தெளிந்துள ஞானமுள்ளாள்
கோதிலா விரதஞ்செய்வாள் குணமதாம் புண்ணிய மூர்த்தி
ஓதுமே காதசிநா ளுலகத்தி லுதித்தாள்ருனே.

(இ-ள்) உலகத்தோர் கொண்டாடும் ஏகாதசி திதியில் ஜனித்த பெண்ணுக்கு தேவப்பிராம்மணர் பூசையில் ஆசை, தானதர்மபுத்தி புண்ணியசிந்தனை,விரதங்களில்விருப்பம் அனேகசாஸ்திரவிசாரணை கேள்விகளல் உதித்த ஞானம் உள்ளவளாம்,

### துவாதசி

ஆசார சீலந்நன்னீ ராட்டமுந் தருமபுத்தி
ஈசானன் பூசைதன்னை இன்பமாய்ப் புரிவள்நித்தம்
கூசாம லில்லந்தன்னில் கொள்ளுவா ளிந்திரபோகம்
தேசாதி யோர்கள்போற்றுந் துவாதசி யுதித்தாளுக்கே [17]

(இ-ள்) தேசத்தோர்கள் துதிக்கும் துவாதசி திதியில் பிறந்த மங்கையானவள் பரிசுத்தமான ஆசாரம் நீராட்டத்தில் பிரீதி தருமத்தில் விருப்பம், ஈசுவரபக்தி தன்னிருப்பிடத்திலே சகல சுகங்களையும் அனுபவித்து சந்தோஷியாயிருப்பாள்.

### திரயோதசி,

நன்மையே புரிவள்சத்தியம் நல்குவள் தருமபுத்தி
தன்மையாம் பொறுமைசௌக்கியம் தருவள்நன் நூலை கற்ருள்
இன்மையாம் பொருளுமில்லை இவள்பதி விரதையென்பர்
பன்னியப் பதிமூன்ருனுள் பாரினி லுதித்தாள்கற்பே. [18]

(இ-ள்) பதின்மூன்ரும் நாளாகிய திரயோதசி திதியில் பிறந்த பெண் நற்காரியங்கள் செய்வாள், தர்மபுத்தி. சத்திய வாக்கு பொறுமை, சௌக்கியம், பதிவிரதை, சாத்திரங்கள் கற்பவள், சாமர்த்தியம் அல்பதனமுடையவளாம்.

### சதுர்த்தசி

செய்யொணப் பணிகளெல்லாஞ் செய்குவாள் சுலபமாக
அய்யம தில்லாநித்த மதிகமாய்ச் சுரதங்கொள்வாள்
பொய்யுரை யமங்கலிதான் புத்திர ரீனந்துட்டை
வ்ய்யமில் சதுர்தசியில் வந்தவ ளின்னவாறே,

(இ-ள்) இருத்தை யென்னும் சதுர்த்தசி திதியிலுதித்த பெண் செய்யத்தகாத காரியங்களைச் செய்வாள், அதிககாமி, அமங்கலி புத்திரஈனம், கெட்ட நடவடிக்கை தாசித்தொழில், பொய்யுரைத்தல் முதலிய தீக்குணங்களுள்ளவளாம்,

### பௌர்ணமி

நாணமுங் குணமுஞ்சீலம் நலமுள தேகிசௌக்கியம்
காணநல் மதிமுகத்தாள் கற்புடன் பொறுமைசாலி
வேணபுத் திரரைப்பெற்று வேந்தன்போல்சுகத்தைகொள்வாள்
மாணமுள் பருவந்தன்னில் மகிதனில்வந் தாளுக்கே. [20]

(இ-ள்) பருவமென்னும் பூரணைசந்திரன் நாளில் ஜெனித்த பெண்ணுக்கு அழகிய சரீரம் வெட்கமுடையவள் நல்லகுணம் சாது சுபாவம் புத்திர சம்பத்து விசாலமான கண்கள் சந்திரமுகம் ஆசாரம் இருப்பிடத்தில் ராஜயோகம் அனுபவிப்பாள் என்பதாம்.

### அமாவாசை.

கணவனுக்கினியாள் சாது கற்புளபொறுமை பக்தி
குணமுட னில்லம் வாழ்வாள் குருதேவபூசை நல்லாள்
மணமுடன் பாகஞ்செய்வாள் மதனநூல்கற்றவளாக
கணப்பொழுதிரவியிந்து கலந்தநாட் கன்னியாமே. [21]

(இ-ள்) சூரிய சந்திர னிருவரும் ஒன்றுகூடிய நாளான அமாவாசைத்திதியில் ஜனித்தபெண் குரு தேவதை பக்தி, பதிக்கு பிரியமானவள், பொறுமை, ஆசாரசீலமுள்ளாள், வீட்டுவேலைகளில் சாமர்த்தியம், நன்னடத்தை மதனநூலறிவாள், நல்லபுத்திக்கூர்மை யுடையவளாம்.

## 3-ம் அத்தியாயம்

## வார பலன்கள்

### ஞாயிறு

அறுசுவை யறிந்தநல்லாள் அனல்கொண்ட தேகியாகும்
பெருமைசேர் கீர்த்திரூபம் பேசுவள் கடினவாக்கு
தருகுவள் பதிக்குயின்பம் தருமநன் னடக்கைபின்னல்
வருமென புத்திரலாபம் வாழ்த்தினர் கதிர்வாரத்தே. [22]

(இ-ள்) ஆதித்தனுடைய வாரத்தில் அவனியில் உதித்து அங்கனையானவள் கடினமான சுபாவம் சுகமுள்ளாள் பிரகாசித்தருபம் அறுவித ருசியினை நன்ருய் அறிவாள், உஷ்ணமான தேகம், பதிக்கு பிரியமுள்ளாள், தருமகுண நல்ல நடவடிக்கை முதிர்ந்தகாலத்தில் புத்திர விர்த்தியாம்.

### திங்கள்

திங்கட்போல் தேகிபாக்கியம் தினமுஞ்சந் தோஷபுத்தி
மங்கள குணங்கள்கற்பு மகவுபெண் போக முள்ளாள்
நங்கையா பாணம்வாசந் நாளிலும் தவருள்நித்தம்
கங்கையா டுவளேயென்று கணிதநூ லுரைத்தவாறே. [23]

(இ-ள்) சந்திரனுடைய நாளாகிய சோமவாரத்திலுதித்த பெண் பால் சந்திரனைப்போல் குளிர்ந்த தேகம் பாக்கியம் உத்தமீ மனச் சந்தோஷமுள்ளாள் ஆபரணங்களும் வாசனைகளோடும் கூடினவள் நீராட்டப் பிரியம் நற்குணங்கள் பெண்சந்ததியுள்ளாள் என்பதாம்.

### செவ்வாய்

பார்சுதன் நாளில்வந்தப் பாவைநன் வடிவுசாந்தம்
நேர்சுகம் சனகரில்லம் நித்தமுங் குறைந்தசெல்வம்
பார்வையுங் கடினவாக்குப் பகருவள் சினத்தாள் சற்று
சோர்வுள நெஞ்சம்செம்மை சுந்தரி யாடையாமே [24]

(இ-ள்) அங்காரகனுடைய வாரமான செவ்வாய்க் கிழமையில் ஜனித்தபெண் நல்ல அழகு பிறர் சுகிக்கப்பாராள் பொறுமை விரோத சுவாபம் தான் பிறந்த இடத்தில் நாளுக்குநாள் குறைவான செல்வம் சிகப்புத்துணிகளை தரிப்பாள் இளமையான நெஞ்சமு டையவளாம்.

### புதன்

சிந்தையுந் தருமவாக்குச் சீருள வித்தைநல்லாள்
புந்தியில் குரோதமின்றிப் புகலுவள் சத்தியமாக
நிந்தையில் சேராள்கற்பு நிலைத்திடுந் தேகியாவாள்
புந்திநா ளுதித்தமங்கைப் புண்ணிய தவத்தாளென்றுர். [25]

(இ-ள்) புதன்வாரத்தில் ஜனனமான பெண்மணிக்கு தருமபுத்தி சத்தியமானவாக்கு வித்தை நற்குணம் எப்பொழுதும் சந்தோஷ மான மனம் வாஞ்சையுள்ள வசனம் சுக துக்கத்தை சமமாய்ப் பாவிப்பாள் கெட்ட வழியில் சேராள் கற்பு நிலையைக் கார்க்கும் புண்ணிய தேகியாம்.

### வியாழன்

செய்யாள்துற் காரியங்கள் சேமமே நிலைக்குமில்லம்
உய்யவனே டிணைபிரியா ளுத்தமியென் றுலகுமெய்க்க
பொய்மையு மில்லையென்றும் புகலுவாள் தருமநீதி
மெய்மைநன் னடக்கையென்பார் மேதினி குருவாரத்தாள்.[26]

(இ-ள்) குருவாரமென்னும் வியாழக்கிழமையில் ஜனனமானல் பாபகர்மங்கள் செய்வதில் மனமில்லாள் தனதான்னிய சம்பத்துள்ளாள் பதியைவிட்டுக் கணமேனும் பிரியாள் உத்தமமான குணம் பொய்சொல்லாள் தருமநீதி வார்த்தைகளைச் சொல்லல் தேவபிராம்மண பிரீதியாம்.

*வெள்ளி*

சுக்கிர வாரந்தன்னில் சுந்தரி யுதயமானல்
மிக்கவா பரணபிரீதி மேன்மையவா கனமுங்கற்பு
தக்கதோர் தனங்கள்செல்வம் தரணியில் நிலைக்குமென்ருர்
முக்கியமுள்ளா ளெங்கும் முகமலர் வாக்குநன்ரும் [27]

(இ-ள்) திருமகளுக்குகந்த சுக்கிரவாரத்தில்ஜனித்தபெண்ணுக்கு வஸ்திராபரணங்களில் ஆசை வாகன பிரியம் பதிவிரதை தனதான்னிய செல்வம் நிறைந்தவள் பிரியமான முகம் வார்த்தை ஜன விசுவாசமுள்ளவளாம்.

*சனி*

மந்தனில் லழுக்குவாடை மனமதில் பயமுமில்லர்ள்
நிந்தையும் பிறர்விரோதம் நிச்சய மில்லாநெஞ்சம்
அந்தமும் தயையுமீனம் அல்பபுத் திரராமென்ருர்
வந்ததே யிருக்கும்வியாதி வையகந் தன்னிற்ருனே. [28]

(இ-ள்) சனிவாரத்தில் ஜனித்த பெண்மணியானவள் அழுக்குத் துணிகளையணிதல் பயமில்லாமல் சஞ்சரித்தல் பிறரைத் தூஷித்தல் ஜனவிரோதம் சபல சித்தம் அழகில்லாள் அற்ப புத்திரர் விசுவாசமில்லாள் வியாதியுள்ள சரீரமுடையவளாம்.

## 4-வது அத்தியாயம்

### நக்ஷத்திரபலன்

*அசுவனி*

அழகுநற் பார்வைபுத்தி அகமகிழ் பெருத்தஉந்திக்
கழருவா ளினியவாக்குக் காதலாள் சனசகாயம்
குழவியர்த் தோடந்தேவ குருவிச வாசமுள்ளாள்
சழக்குள மதத்தாள்வாசி சனித்தவள் பலநிதாமே. [29]

(இ-ள்) அசுவனி நக்ஷத்திரத்தில் அவதரித்தால் அழகுள்ளவள் நல்ல பார்வை மனசந்தோஷம் சற்று பெருத்தவயறு பிரியமான வாக்கு சனசகாயம் விசுவாசம் நற்புத்தி தேவதா குருபக்தி அற்ப சந்தானதோஷம் பொருளகங்காரம் உள்ளவளாம்.

### பரணி

பரணியிலுதித்த மாதுபலவித சருக்கு வெண்ணம்
அரனுள மேனிதன்னுள் ளமர்ந்திடுஞ் சுகத்தாள்முன்னம்
அரியவர் கூட்ட முள்ளா ளழுக்குளறுயி லிலாசை
தரித்திரதர்ப் புகழ்ச்சி தந்தைதாய்க் கினியளாமே. [30]

(இ-ள்) பரணி நக்ஷத்திரத்தில் ஜனனமானவளுக்குப் பல வித மான கோரிக்கைகளோடு கூடியவெண்ணம் அழகுள்ளசரீரம் தனக் குள் சுகம் பெண்கள் கூட்டமுள்ளாள் அழுக்கான ஆடையைத் தரிப்பாள் சற்று தரித்திரம் தன்னைத்தான் புகழ்தல் தாய்தந்தை யர்களுக்குப் பிரியமானவள்.

### கார்த்திகை

கார்த்திகை நாளில் வந்தகன்னியின் குணத்தைக்கேளீர்
கீர்த்தியாள் சனவிரோதி கிருபணி வலிவதீனம்
சீர்த்தியு மில்லாள்கோபி சிடுசிடென் றிடுவாள்சண்டை
பார்த்திபன் மனைவியாயும் பயனிலை பகருவீரே. [31]

(இ-ள்) கார்த்திகை நக்ஷத்திரத்தில் பிறந்தபெண் சனவிரோதி கீர்த்தியுள்ளாள் வலிவுகுறைந்த சரீரம் கொடுப்பதிலும் செலவிலும் ரெம்பவும் ஹினமானவள் பரிசுத்தமில்லாள் முன்கோபம் சிடுசிடுப் புடன் சண்டையிடுவாள் பந்துக்களிடம் அன்பில்லாள் புருஷன் அரசனுயிருப்பினும் இவளுக்கு சுகமில்லை.

### ரோகணி

பதிதனக் கினியாள்சுத்தம் பகருவோம் பெருத்ததேகம்
சதிருடன் பெற்றோர்வாஞ்சை சந்ததி விருத்தியாயுள்
விதியுள குலத்தாள்கீர்த்தி விழிமயி ரழகிபின்னல்
சதியுள சஞ்சலங்கள் சாருமே ரோகணிநாள். [32]

(இ-ள்) ரோகணி நக்ஷத்திரத்திலுதயமானபெண் புருஷனுக்குப் பிரியம் சுத்தம் சற்று பெருத்ததேகம் தந்தை தாயாருக்கு ஆசை யுள்ளவள் புத்திரவிருத்தி தீர்க்காயுள் குலவர்த்தனீ மானவதி செல் வமுள்ளாள் நல்ல ரூபம் விழியும் மயிலும் அழகுடையவள் பின் னல் சற்று சஞ்சலம் தோஷமும் உள்ளாள்.

### மிருகசீரஷம்

மானிநல் லுருவம்வாக்கு மதுரமா பரணசாத்திரம்
தானியம் பிள்ளைப்பேறும் தருமநற் பொருள்பால்விர்த்தி
ஈனமில் குலமும்சீலம் மிசைந்திடும் யோகம்றன்பால்
நானிலத் திங்க நாளின் நங்கையாள் குணமிதாமே. [33]

(இ-ள்) மிருகசீரஷ நக்ஷத்திரத்தில் பிறந்தபெண் மானம் நல்ல ரூபம் பிரியமாகி மதுரமான வார்த்தை வஸ்திராபரணம் சாஸ்திர ஞானம் பலபதங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லுவாள் பசு தான்னியம் பொருள் சந்தானவிர்த்தி தருமகுணம் நல்லவம்சம் ஆசாரம் தன்னால் பிறந்த இடத்திலும் பதிக்கும் யோகம் உண்டாம்.

### திருவாதிரை

பித்தசீ தளமாந்தேகம் பின்சுக முடையாள்கிலேசி
சித்தசஞ் சலமுங்கெட்ட செய்கைகள் பலவேயுள்ளாள்
மெத்தநற் பணியேசெய்வாள் மேன்மையு முறந்தநெஞ்சம்
நித்தமும் சமரில்லூக்கம் நிலைக்குமா திரையின்நாளே. [34]

(இ ள்) திருவாதிரையில் தறந்தபெண் பித்த சீதள சம்பந்தமான சரீரம் முன் கஷ்டமும் பின்னால் சுகம் மனசஞ்சலம் சற்றுவிதனம் தகாதநடபடிக்கை காரியங்களனைத்தும் வெகுலேசாக செய்குவள். அபிமானமுள்ளாள் உரத்தநெஞ்சம் சதாகலகம் செய்வதில் விருப்பம் உடையவள்.

### புனர்பூசம்

களிப்புளாள் பிறர்சொற்கேட்பாள் கற்பிநள் பொறுமைதான
மளித்திடும் பாக்கியம்பக்தி மனுபவித் திடுநன்நன்மை
நளிருடன் புண்ணியங்கள் நங்கையுஞ் செய்வாள்நித்தம்
ஒளியுளா ளதிதிநாளி லுதித்தவள் சரிதமிதே. [35]

(இ-ள்) புனர்பூச நக்ஷத்திரத்தில் பிறந்தபெண் அபிமானம், பிறர் சொற்கேட்டல், பதிவிரதை, தான தர்மம் செய்யும் பாக்கியம், நல்ல புத்தி, சுகபோகி, புண்ணியம் செய்யும் ஆவல், எவருக்கும் விருப்ப முடையவளாவாள்.

### பூசம்

பணிகளில் விருப்பம்தேவ பதிவிசு வாசம்மற்றோர்
அணிகலம் பூண்டதேகம் அழகுளா ளின்பவாக்கு
கணிதநூல் சுரதங்கற்றாள் காசினி மகவுமுள்ளாள்
துணிவுள தருமசிந்தை தோகையர்ப் பூசநாளே. [36]

(இ-ள்) பூசநக்ஷத்திரத்தில் பிறந்தபெண் சோம்பலின்றி எல்லா வேலைகளையும் செய்ய ஆசை, தெய்வபக்தி, பதிவிசுவாசம், எப்பவும் ஆபரணமணிந்த அழகுடைய சரீரம், இன்பமான வார்த்தை, கணக்குவிவகாரங்கள் தெரிந்தவள், காமநூல் படித்தவள் சந்தான விருத்தி தைரியத்துடன் தர்மம் செய்யும் புத்தியுடையவள்.

### ஆயில்லியம்

பிரியமுங் கலகம்பொய்யும் பிதற்றிடுங் கடினவாக்கு
அரவினி லுதித்தமங்கைக் கதிகமாம் விதனமெய்யும்

நெறியிலாள் புதல்வரீன நீண்டதோர் கோபங்கொள்வாள்
பரிசன ருறவுகொள்ளாள் பாவமுன் கன்மதோஷம் [37]

(இ-ள்) ஆயில்லிய நக்ஷத்திரத்தில் ஜனித்தபெண் கலகப்பிரியை பொய்யுரைப்பாள் கடூரமான வாக்கு அனேகவிதமான விதனம் குரூரத்தோடுபாபகாரியஞ் செய்பவள் பந்துஜனவிரோதம் நீடித்த கோபமுள்ளவள் தேகவிளைப்பு பிணி பீடையும் முன்செய்தவினையால் புத்திரதோஷமுடையவளாம்.

*மகம்*

உத்தமி சாத்ரங்கற்று ளுலகங்கொண் டாடும்மெய்யாள்
பத்தியாங் குருக்கள்தேவர் பதியுடன் போகபாக்யம்
நித்தமு மனுபவிப்பாள் நிலவுபோல் பொருளாள்புண்ணியம்
மெத்தவுஞ் செய்துதேக மிளைத்தவள் மகத்திநாளே. [38]

(இ-ள்) மகநக்ஷத்திரத்தில் பிறந்தபெண் நன்னடக்கையுடையவள் சாத்திரக்கேள்வி உலகம் கொண்டாடும் மெய்யாள் பெரியோரிடத்தும் தேவதைகளிடத்தும் கணவனிடத்திலும் பக்தி விசுவாசமுள்ளாள் ராசயோக பாக்கிய சுகத்தை அனுபவிப்பாள் சந்திரனைப்போல சிலகாலம் குறையவும் விர்த்தியாகவும் உள்ளபொருளாள் புண்ணிய காரியங்கள் செய்வதால் சற்றுஇளைத்த சரீரம் உள்ளவளாம்.

*பூரம்*

சந்திர காந்திதேகஞ் செய்நன்றி மறவாள்காமீ
தந்திர வசனம்புத்தித் தனயரும் மிகவேயுண்டாம்
வந்துதோர் குடும்பவீனம் வளர்ந்திடும் பாக்கியங்கோபி
புந்தியும் மிகவேயுள்ளாள் பூரத்தி லுதித்தாளுக்கே. [39]

(இ-ள்) பூரநக்ஷத்திரத்தில் பிறந்த பெண் சந்திரனைப் போல் குளிர்ந்து ஒளியுள்ள சரீரம் உபகாரம் மறவாமை காமத்திலதிக ஆசை பாக்கியவிர்த்தி தந்திரமாக உரைக்கும் புத்தி புத்திர சம்பத்துள்ளாள் பிறந்த குடும்பம் சற்றுநசித்தல் முற்கோபம் பெருத்த வயறு உள்ளவள்.

*உத்திரம்*

உத்திரந் தனிலுதித்தா ளுயர்குணம் பிரியவாக்கு
சத்திய முரைக்கும்நேர்மை சற்குணந் தருமசிந்தை
நித்தமுங் குடும்பந்தன்னில் நிரணய நோக்குமெய்யும்
மெத்தென உயர்ந்ததேகி மேன்மையாள் போகியாமே. [40]

(இ-ள்) உத்திர நக்ஷத்திரத்தில் பிறந்தபெண் நல்லோர் புகழும்படியாகிய நற்குணம். நயமானவாக்கு, சத்தியம், பொறுமை, சம்சார விஷயத்தில் தகுமானபார்வை, உயர்ந்ததேகம், சுகீ. கௌரவம் தருமபுத்தி பர்த்தாவுக்கு இவளாற் செல்வம் விர்த்தியாகும்.

### அஸ்தம்.

பொறுமையும் முகங்கண்காது பொருத்தமா மழகுகற்பு
அருமைசேர் சுகசரீரம் மாசாரம் தனமுமுள்ளாள்
வறுமையுஞ் சிலநாள்கோபி வைராக்கிய திடமாம் புத்தி
இருமையாந் தன்காரியத்தி லிட்டமாமத்தாளே. [41]

(இ-ள்) அஸ்தநக்ஷத்திரத்தில் பிறந்தபெண் பொறுமை கை கண் காது இவைகள் பொருத்தமான அழகு பதிவிரதை சுகசரீரம் ஆசாரம் தனமுள்ளவள் சிலகாலம் தரித்திரமனுபவிப்பாள் திடமான வைராக்கிய புத்தி தன்காரியத்திலேயே நோக்கமுள்ளவளாம்.

### சித்திரை.

சித்திரை தேய்வுநாளில் ஜனித்தவள் சுகமில்லாள்வி
சித்திரா பரண்ரூபம் சீட்டருந் தேவபக்தி
நித்திரைப் பொருளுமற்பம் நிந்தைசொல் லதிகவாசை
மெத்தநன் வளர்நாளாகில் மேன்மையாய் மகிழவாழ்வாள் [42]

(இ-ள்) இந்நக்ஷத்திரத்திற் செனித்தபெண் சுகமில்லாதவள் விசித்திராபரணமும் ரூபமுள்ளாள் தேய்பிறையில் சதுர்த்தசி திதியோடு சித்திரை நக்ஷத்திரம் சேர்ந்த நாளில் பிறந்தவள் விஷகன்னிகையென்று சொல்லப்படும். மேல்கண்ட நாள் வளர்பிறையானுல் தரித்திரம் தேவதாபக்தி சீலம் அற்பநித்திரை பிறரைப் பரிகாசஞ்செய்தல் சனபிரீதி யுள்ளவள்.

### சுவாதி.

புத்திரர் நல்லபுத்தி பொருந்திய கீர்த்திசினேகம்
சத்திய வாக்குச்செல்வம் சாதுநல் லறவுரூபம்
பத்தியாள் பதிக்குயின்பம் பகர்ந்திடும் பணிகள்மெள்ள
உத்தமிசோதிநாளி லுதித்தவ ளின்னவாறே. [43]

(இ-ள்) சுவாதி நக்ஷத்திரத்தில் பிறந்தவள் சந்தானவிர்த்தி யுக்தியாக சொல்லும்புத்தி சத்தியமுரைப்பாள் தனமுளாள் கீர்த்தி பெரியோர்கள் சினேகம் பொறுமை அழகி பதிபக்தி இன்பமானவள்.

### விசாகம்.

ஒளியுள யழகுமேனி உயர்விரதந் தருமசிந்தை
களிப்புடன் தீர்த்தமேகக் கன்னியும் விருப்பமுள்ளாள்
துளிருள மரத்தைப்போலத் துவளிலா தனதான்னியங்கள்
நளிருடன் பெற்று வாழ்வாள் நங்கைவை யாசிநாளே. [44]

(இ-ள்) விசாகநக்ஷத்திரத்தில் பிறந்தபெண் அழகுபொருந்தி ஒளி வீசும் சரீரம் விருதாதிகளிலும் தருமத்திலும் புத்தி புண்ணிய தீர்த்த யாத்திரை விருப்பம் அழிவில்லாது அமைந்த செல்வமுள்ளவளாம்.

### அனுஷம்

வேந்தனென் றெருக்குஞ்செல்வம் வேழமாம் நடையும்புத்தி
சாந்தமும் வாஞ்சைநல்ல சாத்திர கேள்வி மேன்மை
காந்தையு மழகிகற்பு கணவனின் சுகமில்லாதாள்
போந்தையி லுதித்தநல்லாள் புசிப்பளே இறைச்சியென்றுர்[45]

(இ-ள்) அனுஷ நக்ஷத்திரத்தில் பிறந்த பெண் அரசனுக்குச் சமானமான ஐஸ்வரியம் நல்ல புத்தியானையைப் போல் நடை பொறுமை ஜனங்களிடத்து ஆசை தருமநூல் கேள்வி பெருமை அழகி கற்புள்ளாள் பதிபக்தி கணவன் சுகமல்பம் மதுமாமிசங்களை புசிக்கும் குணமுள்ளவள்.

### கேட்டை

நன்வினய குரோதசாத்திர நம்பிக்கை சற்றுமில்லாள்
பன்மிசை புத்திரபாக்கியம் பலித்துமுன் பொருளுமுள்ளாள்
கன்னியின் வாக்குநல்லோர் களித்திட புகல்வள்கோபீ
பின்னிடை துக்கமுள்ளாள் பிறந்தது கேட்டைநாளே. [46]

(இ-ள்) கேட்டை நக்ஷத்திரத்தில் பிறந்தபெண் நல்வணக்கம் மனதில குரோதம் சாத்திரங்களில் நம்பிக்கை சற்றுமில்லாதவள் புத்திரவதீ முன்சம்பத்துள்ளாள் எவரும் கேட்கத்தகுந்த வார்த்தையுரைப்பாள் முன்கோபம் பின்னிடை சற்றுத் தரித்திரமுள்ளவளாம்.

### மூலம்

சாத்திர திறமையற்பச் சௌக்கியங் கைம்பெண்ரோகி
பாத்திரம் நீசபுத்தி பைங்கிளி பிறரைச்சேர்வாள்
நேத்திர மழகுமானி நிதியுள்ளாள் தரித்திரயோகம்
கோத்திரத் திவட்குயீனம் கோதிலாள் மூலத்தாளே. [47]

(இ-ள்) மூல நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்ணுக்கு சாத்திரக் கேள்வி அற்பசௌக்கியம் வைதவியம் வியாதிக்குப்பாத்திரமானவள் நீசபுத்தி பரஜனபோகிகுலவீனம் அழகி மானமுள்ளாள் பொருளிருந்தும் சற்றுத் தரித்திர யோகமுடையவள்.

### பூராடம்

புண்ணிய கருமத்தாசைப் புரிகுவள் பலகாரியங்கள்
நண்ணிய குலத்தில்கீர்த்தி நவிலுவள் சத்தியவாக்கு
எண்ணிய படியேசெய்வா ளெதிரிலா வலுத்ததேகம்
மண்ணினிலுடைகுலத்தாள் மனமதில் தருமவாழ்வே. [48]

(இ-ள்) பூராட நக்ஷத்திரத்தில் பிறந்தபெண் புண்ணியமான காரியங்கள் செய்வதில் விருப்பம் வீட்டில் எல்லா வேலைகளையும் செய்வாள் குலத்திற்கு நன்மை சத்தியமுரைப்பாள் தன்னிஷ்டப்படி செய்யத் தகுந்த வலிவுள்ள சரீரம் அழகிய கண் தர்ம புத்தியுள்ள வளாம்.

### உத்திராடம்

உறவின ருள்ளவீடு உயர்குல குடும்பமேன்மை
பறவிய செல்வயோகம் பதிக்குற வதிகவாஞ்சை
அறவர்கள் பத்திமிக்க அன்புளாள் கற்பின்மங்கை
கறவைகள் பாக்கியமுண்டு கடைக்குலத் துதித்தாளுக்கே []

(இ-ள்) உத்திராட நக்ஷத்திரத்தில் பிறந்தபெண் பந்துமித்திர ஜனங்கள் உள்ளவீடு உயர்ந்தகுலம் சம்சாரத்தில் முதன்மையான வள் தனபாக்கிய யோகம் பதிக்கிஷ்டப்படி நடப்பாள் பெரியோர் கள் பக்தி விசுவாசம் கற்பின்நிலை பால்பாக்கியமுள்ளாள்.

### திருவோணம்

வடிவுடை மயிலாம்ராச வம்சம்போல் ரூபமுள்ளாள்
கடிமணம் புத்திரவிருத்தி கலக்கம தில்லாநெஞ்சம்
குடிபுகுந் திடமுந்நன்று கோபமு மில்லாநல்லாள்
படியினில் தர்மநீதி பகருவாள் ஓணநாளே. [50]

(இ-ள்) திருவோண நக்ஷத்திரத்தில் பிறந்தபெண் இராசவம்சத் துடைய அழகியரூபம் கலியாணமான சீக்கிரத்திலே புத்திரபாக்கிய முள்ளாள் சுத்தமான நெஞ்சம் புகுந்தவழி நல்லது கோபமில்லாள் தர்மநீதியையெடுத்துரைப்பாள் எல்லார்க்கும் நல்லவளாம்.

### அவிட்டம்

அருமைசேர் பணிகளாடை யணிவளே பறவைநாளில்
தருமமுஞ் சத்தியவாக்கு தனதன்போல் பொறுமையுள்ளாள்
பெருமையும் புராணகேள்வி பிரியமாம் சனங்கள்றன்பால்
பெருமிதத் துடனேவாழ்வாள் பெண்மணி யுலகத்துள்ளே [51]

(இ-ள்) அவிட்ட நக்ஷத்திரத்தில் பிறந்தபெண் நல்ல வஸ்திராப ரணங்களையணிவாள் தர்மம் சத்தியவாக்கு குபேரனைப்போல் கௌ ரவம்பெருமை புராண புண்ணியசரித்திரம் கேட்கபிரியமுள்ளவளாம்.

### சதயம்

உதித்தது சதயமாகி லுத்தமீ பெருமைதிமாகி
மதித்துளர் திருமகள்போல் மங்கையின் ரூபம்வாஞ்சை
பதித்தநல் தெய்வபக்தி பத்தாவுக் கினியபுத்தி
துதித்திடுங் குணத்தாள்சற்று தோஷமாம் பாவகோபம். [52]

(இ-ள்) சதயநக்ஷத்திரத்தில் பிறந்தபெண் பொறுமை தர்மகுணம் லக்ஷ்மியைப்போல அழகியரூபம் சனங்களிடத்தில் விசுவாசம் மரியாதை தேவதாபூசை பெரியோர்வணக்கம் பத்தாவுக்குப்பிரியம் கருணையும் முன்செய்த பாபகர்ம அனுபவம் உள்ளவளாம்.

## பூரட்டாதி

தானிய மாடு மக்கள் தருமமுஞ் செய்வாள் சாது
மேனியும் பெருத்த உந்திமேன்மையாம் சாத்திரக் கேள்வி
வானில தெய்வ பக்தி வருத்து போக்குற வோரில்லம்
மானினி புரட்டை நாளில் மானிலத் துதித்த வாறே. [53]

(இ-ள்) பூரட்டாதி நக்ஷத்திரத்தில் ஜனித்த பெண்ணுக்கு தானியம் மாடு மக்கள் தருமம் பொறுமையும் பெருத்தவயறு சாத்திர விசாரக்கேள்வி செல்வம் நிறைந்தும் எப்பொழுதும் பந்து சனங்கள் வரத்து போக்கு உள்ளவீடு தெய்வபக்தி நிறைந்தவள்.

## உத்திரட்டாதி

உத்திரட்டாதி தன்னி னுலகினி லுதித்தாட் பாக்கியம்
மெத்தவே தரும முண்டு மேதினி புகழச் செய்வாள்
பத்தாவுக் கினியாள் ஞானி பகருவள் சத்தியவாக்கு
புத்திரவிருத்தியுள்ளாள் பொறுமையாம் நற்குலத்தாள். [54]

(இ-ள்) உத்திரட்டாதி நக்ஷத்திரத்திலுதித்தபெண் பாக்கியமுள்ளாள் பூமியில் கொண்டாடும்படியான தருமம் செய்வாள் புருஷனுடன் பிரியாதிருக்கும் பிரியம் பொறுமை பெரியோர் புத்தியினுலுண்டான ஞானம் கர்வமில்லாள் சத்தியம் தவருள் புத்திர விர்த்தியுடையவள் நல்ல குலம்.

## ரேவதி

வாஞ்சையும் விரத முள்ளாள் வளர்பசு பாக்கியங்கள்
காஞ்சனு பரணம் பூண்ட கற்பினள் பதிக்கு நல்லாள்
வாஞ்சினி யழகி பெற்ருேர் வளர்குடி புகுந்தார்க்கின்பம்
தீஞ்சுவை யளிப்பாள் தோணி தினமதி லுத்தாள் தானே. []

(இ-ள்) ரேவதி நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்மணிக்கு சனங்கள் மேலாசை விரதங்கள் செய்ய விருப்பம் பால் பாக்கியம் தங்காபரணங்கள் தரித்தவள் பதிவிரதை எல்லார்க்கும் நல்லவள் பெற்ருேருக்கும் பெண்கொண்டவருக்கும் ஆசையும் கியாதியும் தரக்கூடியவள் தித்திப்புள்ள பதார்த்தங்களுடன் அன்னமிடுவாள்.

# 5-வது அத்தியாயம்

## இனி லக்கின பலன் கூறுவாம்.

### மேடம்

அச்சம தில்லாள் சத்திய மலம்பலும் சிலேட்ம தேகி
நிச்சய முரைப்பாள் நல்ல நீதியுஞ் சன விரோத
முச்சமாங் குலத்திற் செல்வ முரைப்பாள் நிஷ்டுர வார்த்தை
மச்சுளச் சினமாம் மேட பதிதனி லுதித்தா ளுக்கே. [56]

(இ-ள்) மேடராசியானது பிறந்த லக்கினமானுல் பயமில்லாத வள் உண்மையையுரைப்பாள் சிலேட்டுமபிரகுருதியான தேகம் நன் நீதியுள்ளாள் சற்று சனவிரோதம் எப்பொழுதும் குரோதத்தோடு கூடினவள் நிஷ்டுரமான வார்த்தை சொல்லுவாள் என்பதாம்.

### ரிஷபம்

உறவினர்க் கூட்ட முள்ள உண்மையா ளழகி தேவ
மறயவர் வாஞ்சை செல்வம் மனதில் சந்தோஷ போகிக்
கறையிலா குணங்கள் நீதி கற்றனள் பதிக்கு நல்லாள்
வரையதை தாண்டாள் சுபங்கன் வளவெனு மிடப மாமே. []

(இ-ள்) ரிஷப லக்கினத்தில் பிறந்தவள் பந்துஜன கூட்டமுள் ளாள் நீசமுரைப்பாள் தேவப்பிராம்மண விசுவாசம் மனேல்லாசம் அழகு போகி அனேக நற்குணங்களோடு கூடினவள் நீதியறிந் தவள் புருஷனுக்குப் பிரியமானவள் நற்புத்தியோடு கூடியவள்.

### மிதுனம்

சினமுள குணமும் வாக்கு சிலேட்டு மவாத தேகி
மனமதில் லச்சை யில்லாள் மகவுபெண் வாய்க்கும் போகி
இனமுட னற்ப நேசம் யீனமாஞ் செயல்கள் காந்தன்
தினமெனு மத்திய காலத் தீங்குளாள் மிதுன மென்பார். []

(இ-ள்) மிதுனராசி லக்கினமாகப் பிறந்தவள் கோபக்குறிகுணம் வர்க்குவுள்ளவள் வாதசிலேஷ்மதிரேகம் மனதில் கொஞ்சமேனும் பயமில்லாள் முதலில் பெண்சந்ததி நற் சுகமுள்ளாள் அற்பகாமி விகாரமான செயல்கள் மத்தியகாலத்தில் பதிக்குத் தோஷமுள்ள வளாம்.

### கடகம்

சாதுநன் வினய முள்ளாள் சகலரும் பிரியஞ் சீலங்
கோதிலா புத்திர பாக்கியம் கொழுனனக் கினியாள் யோகம்
தீதிலா கற்பு மேன்மை திங்கள்ப் போல் முகமும் வாக்கு
நீதியுந் தவறுள் சேக்கை நிரணய ராசி யாளே. [59]

(இ-ள்) கட கராசி லக்கினமாகப் பிறந்தவள் பொறுமைக்குணம் நல்ல வாஞ்சையுள்ளாள் பந்துக்களும் மற்றேருக்கும் பிரீதியானவள் ஆசாரவதி புத்திரபாக்கியம் புருஷனுக்குப் பிரியமும் யோகமும் உள்ளவள் பதிவிரதை சந்திரனைப்போலக் காந்தியுள்ள முகமும் குளிர்ந்த வார்த்தையும் நியாயமறிந்தவளுமாம்.

### சிங்கம்

சிங்கமா மிலக்கி னத்தாள் சினமுள சொற்கள் ரூபம்
மங்கையும் பெரியோர் பத்தி மனதிட முள்ள புத்தி
எங்கையுங் கலகம் செய்வாள் எதிருபகாரி கல்வி
பங்கம தில்லா கற்று பதியுடன் சுகிப்பா ளன்னே. [60]

(இ-ள்) சிங்கராசி லக்கினமாகவரில் அதிக கோபம் கடினமான சொற்கள் சற்று அழகி பெரியவர்களிடத்து பத்தி விசுவாசம் திடமான மனது நற்புத்தி கலகம் செய்வதில் அதிகவாசை பரோபகாரி செய்நன்றி மறவாள் வித்தைகற்று புருஷனுடன் சுகமனுபவிப்பாள்.

### கன்னி

கன்னியில் தனமுஞ் செல்வம் கணவனும் யோகம் கல்வி
இன்னிலம் புகழ ஞான மெதிலுள தரும புத்தி
அன்னிய ருறவு நல்லோ ரனைவரில் லாசை யுள்ளாள்
தன்னிலைத் தவறு போகம் தரணிய லடைவாள்தானே. [61]

(இ-ள்) கன்னியாராசி லக்கினமாகவரில் பொருட்செல்வம் கணவனுக்கு யோகம் வித்தையாலறிந்த ஞானி தருமபுத்தி எல்லாரிடமும் நல்லாளென்றவாசையுடன் கற்பின் நிலைதவருமல் சுகத்தை அனுபவிப்பவளாகுமாம்.

### துலாம்

தானெனும் செருக்குச் சீலம் தன்னிலை காட்டாள் புத்தி
ஊனமாங் கோல மில்லா ளுறியோனும் மகற்கும் பீடை
மானியாம் பசியைத் தாங்கள் மங்கையும் சுரதவாஞ்சை
தேனினிச் சொல்லாள் பாரில் தெரிவையார் துலையென் வீடே

(இ-ள்) துலாராசியானது சன்மவீடாகின் செல்வத்தாலுண்டான அகங்காரம் ஆசாரம் இருப்பிடம் தெரியாதவள் அழகில்லா சரீரம் மந்தபுத்தி புருஷனுக்கும் புத்திரருக்கும் தோஷம் பசியைத் தாங்காள் மானி நீடித்த சுரத விருப்பமுள்ளவள் இன்பமான சொற்களைப் பேசுவாளாம்.

### விருச்சிகம்

சீலங்நற் குணமுங் கற்புச் சிறந்திடும் கண்கள் தேகம்
ஞாலமேல் கடுஞ்சொல் லாகி ஞாயமே யுரைப்பாள் புண்ணிய
சாலியாம் பதிக் கடங்காள் சாதனை மிகவே செய்வாள்
பாலர்கள் தனக்கு தோடம் பைங்கிளி தேளில் வந்தாள். [63]

(இ-ள்) விருச்சிகராசியானது லக்கினமாகவரில் ஆசாரம் நல்ல குணத்தோடு கூடிய் பதிவிரதை அழகு பொருந்திய கண்களும் சரீரமுமுடையவள் ஞாயமாயுரைக்கும் கடூரமான சொல்லுள்ளாள், புண்ணியசாலி புருஷனுக்கு அடங்காள் சாதனை அதிகமாய்ச் செய்வாள் நல்லகுணம் புத்திரதோஷமுள்ளவளாம்.

### தனுசு

வஞ்சனை யதிக புத்தி வசீகர முகமாம் பொருள்மேல்
மிஞ்சிய கருத்துத் தேகம் மீறிய பலமுங் நல்லாள்
தஞ்சமென் றோரை காக்கும் தயவுளாள் ராச யோகி
அஞ்சன விழியாள் சிலையி லவனியி லுதித்தாளாமே. [64]

(இ-ள்) தனுசு லக்கினமாக ஏற்படில் வஞ்சனையான புத்தி சன வசீகரமுடைய முகம் பொருளின்மேல் அதிக கருத்து சரியான பலமுள்ள சரீம் நல்லவள் அண்டியவரைக்காக்கும் தயவுளாள் ராச யோகத்தை அனுபவிப்பாள் மைதீட்டிய அழகியகண்ணுள்ளவளாம்.

### மகரம்

மனமதனில் துன்பமெய்யும் மகரமா மிராசியானல்
தினமுங் நன் னீரிலாடத் தீங்கின்றி பிரியமுள்ளாள்
தனமுளாள் சத்திய வாக்குத் தனயரைப் பெறுவாள் சற்று
தனதிலங் தரித்திர முண்டுத் தாதையு மவ்வர் ருமே. [65]

(இ-ள்) மகரராசியானது லக்கினமாகில் மனதில் விசாரமும் தீர்த்தயாத்திரை செய்யப்பிரியமும் பாக்கியமுள்ளாள் உண்மையையுரைப்பவள் புத்திரருண்டு அற்பமாக தனக்கும் பெற்றோருக்கும் தரித்திரமுண்டென்பதாம்.

### கும்பம்

துன்பமும் வியாதி யுள்ளாள் துணைவனைப் பிரியாள் சற்றும்
அன்புளா ளெதிர் மாருடு மமைதியாள் செல்வங் நல்லாள்
தன்மையு மனந்தம் மானி தனயரால் விதன முள்ளாள்
கன்னியுங் குடத்தில் தோன்றக் காசினி புண்ணிய மென்பார்

(இ-ள்) கும்பராசியானது ஜனனலக்கின மாகவரில் மனக்கிலே சம் வியாதி எப்பொழுதும் புருஷனுடன் கூடியிருக்கும் தன்மை எதிர்த்துச் சொல்லும் குணம் தனமுள்ளாள் நல்லகுணமனேகமுடையவள் புத்திரவிசனமுள்ளவள் புண்ணியசாலி என்பதாம்.

### மீனம்

உறவினர் பதியுங் நேசம் முள்ளதாம் புத்திரர் பௌத்திரர்
கறவையுங் தேவ பத்திக் கண்முக மழகாம் வாஞ்சை
நெறியுள நடக்கை யென்றும் நேமமாய் நிகலையாங் கற்புப்
பறியுள மீனராசிப் பைங்கிளி ஜனனமென்பர். [67]

(இ-ள்) மீனராசியானது ஜனனலக்கினம் வந்தால் பந்துக்களும் புருஷனும் அதிகபிரியம் பிள்ளை பேரனுடன் குடும்பவிருத்தி பசுதனம் தேவதாபத்தி அழகியகண் முகமும்விசுவாசமுள்ளாள் நீதியான நடக்கை நியமநிலைத்தவராத பதிவிரதை என்றுரைப்பாம்.

---

# 6-வது அத்தியாயம்

## ஜனனகாலத்தில் சந்திரன் நின்ற ராசிப்பலன்

### சந்திரன் - மேடத்தில் நின்ற பலன்

பாரென்ற மதிதான் மேடப் பதிதனி லிருக்க நல்லாள்
சீரென்றும் மென்மே லோங்கும் செய்கையுஞ் சத்திய வாக்கு
ஊரெங்கும் கீர்த்தி யுள்ளா ளுறவினர் நேசம் மக்கள்
பேரெனப்பெறுவாளென்று பேசினுர்த் தெரிவையார்க்கே, [68]

(இ-ள்) மேடராசியில் சந்திரனிருக்கப் பிறந்தவள் பிரக்யாதி சத்தியமுரைப்பாள் நாளுக்குநாள் விர்த்தியாகும் செல்வமுடையவள் முக்கியமான காரியங்களைச் செய்வாள் பதிவிரதை புத்திரவிருத்தி பந்துஜன விசுவாசமுள்ளாளென்பதாம்.

### சந்திரன் ரிஷபத்தில் நின்ற பலன்

ஆர்க்கே சசிதான் விடையி லமர்ந்திடச் சீலம் வித்தை
கார்க்கக் கருணை மக்கள் கணவனின் பிரியம் பாவம்
தீர்க்கத் தீர்தத் தேகத் தெரிவைக் கின்பம் முன்னூல்
பார்க்கக் கேள்விக் கெண்ணம் பாவைக் குண் டென்றுரே.

(இ-ள்) சந்திரன் ரிஷபராசியில் இருக்கப்பிறந்த பெண்மணிக்கு நல்லாசாரம் கல்வி நல்ல விவேகம் ஜனங்களை ஆதரிக்கும் வாஞ்சனை புருஷனுக்குப் பிரியமானவள் பாபத்தைத் தீர்க்க புண்ணிய நதிக்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்யவிருப்பம் புத்திரவிருத்தி புராணுதிகள் கேட்கவும் படிக்கவும் ஆசையுள்ளவளாம்.

### சந்திரன் மிதுனத்தில் நின்றபலன்

ஆமேயாழ் ராசி தன்னி லம்புலி நிற்கச் செல்வித்
தாமேதான் வருமே செல்வம் தையலாள் நன்றித் தீமை
போமே நற் குணமும் வாய்ந்து பொறுமையும் புராண கேள்வி
தோமேசற் றில்லாளாகித் தோகையாள் வாழ்வாள் தானே [70]

(இ-ள்) மிதுனராசியில் சந்திரனிருக்கப் பிறந்தவள் அழகுடையாள் ஐஸ்வரியவிருத்தி நன்நடக்கை பெருமையுள்ளகுணம் மானி [illegible] ...ல்லாள் எனபதாம்

### [illegible] நின்றபலன்

தாமெனும் பிறை நான் சேக்கைத் தனிலுற உறவோருக்குத்
தேனெ னக் கற்ப்பி னில்லாள் தெரிந்தவள் நீதி நூல்கள்
மானியாம் பொறுமை மிக்க மாற்றல ரிலரே பாரில்
ஊனம தொன்று மில்லா துரைவளே நங்கை யென்றுர். [71]

(இ-ள்) கடகராசியில் சந்திரனிருக்கப்பிறந்த பெண் உறவினர்களுக்கும் உலகத்தாருக்கும் நல்லவளெனப் பேர்படைப்பாள் கற்புடையகுடும்பி வித்தையுள்ளாள் ஞாயத்தையே பேசுவாள். சத்துருக்களிடமும் பிரீதியுள்ளவள் பெருமையுள்ளாள் ஒருவிதகுறையுமின்றி வாழ்வாளென்பதாம்.

### சிங்கத்தில் சந்திரன் நின்றபலன்

என்றுர் அரிராசி தன்னில் இராக்கதிர் நிற்கச் சூரம்
நன்றுய் யிறைச்சி யுண்பாள் நல்லவள் பொறுமை வாடை
ஒன்றுத மலினம் பொய்யும் உரைப்பளே சுகியாம் நித்தம்
குன்றுத செல்வ முள்ளக் கோதையென்றுரைசெய் தாரே. [72]

(இ-ள்) சிங்கராசியில் சந்திரனிருக்கப் பிறந்தபெண் பயமின்மை மாமிசம் புசிக்கப்பிரியம் பொறுமை அழுக்கான வஸ்திரமணிவாள் போகமுடையவள் சுத்தமானவள் பொய்யுரைப்பாள் செல்வமுடையவளென்பதாம்.

### கன்னியில் சந்திரன் நின்ற பலன்

உறைசெய்தார்க் கன்னி தன்னி லுடுபதி நிற்கச் செல்வங்
குறைவிலா திருக்கும் வாஞ்சைக் குறிகளு மழகு சாந்தம்
மறைமுத லறிவாம் ஞானம் மனமகிழ் சுகமு முள்ளாள்
நிறைந்திடுங் கறவை பாக்கியம் நிகரில்லை யென்றுர் மாதே.

(இ-ள்) கன்னியாராசியில் சந்திரனிருக்கப் பிறந்தகன்னி குறைவிலா செல்வம் ஜனங்களிடத்தில் ஆசை தகுமான அங்கமுள்ள அழகி பொறுமை வித்தை ஞானம் எப்பொழுதும் மனச்சந்தோஷம் பசுபாக்கியத்தோடு தர்மபுத்தியுடையவளாம்.

### சந்திரன் துலாத்தில் நின்ற பலன்

மாதுநல் விரதம் பூண்டாள் மனதில் சந்தோஷ சாந்தம்
கோதிலா மக்கட்பேறு குணமுளா ளுறவி னோர்க்குத்
தீதிலாச் சசியுங் கோலிற் தீங்கிலா திருக்க வந்தக்
காதலால் பதிமே லூக்கங் காட்டுவா ளென்றுந்தானே, [74]

(இ-ள்) துலா ராசியில் சந்திரநிற்கப் பிறந்தபெண் நற்தவம் பந்துஜனங்களுக்குப் பிரியம் பதிவிரதை புத்திரவிர்த்தியோடு கூடிய மனச்சந்தோஷம் அடக்கமுடையவள் எப்பொழுதும் புருடனிடத்தில் விசுவாசத்தோடிருப்பவளாம்.

### சந்திரன் விருச்சிகத்தில் நின்றபலன்

என்றுதான் தெருக்கால் ராசி யிமகர னிருக்க மானி
நன்றெனுந் தரும சிந்தை நலமுளாள் குரு விசுவாசி
அன்றியுந் திரமாம் புத்தி அதிகமாய்ச் சுகமே யுள்ளாள்
நன்றியை மறவாளென்றும் நவின்றனர் கணிதநூலே. [75]

(இ-ள்) விருச்சிகராசியில் சந்திரனிற்கப் பிறந்தபெண் தருமபுத்தி சரசி குருதேவதா பக்தி விசுவாசம் விரதநேமம் ஸ்திரமான மனது அபிமானி பிறர்செய்த உபகாரத்தை மறவாள் சுகத்தையனுபவிக்கக்கூடியவளென்பதாம்.

### சந்திரன் தனுசில் நின்றபலன்

கணிதநூல் தனுசில் திங்கள் கலந்திட விரத நேமம்
அணிதலும் கீத ஞானம் அழகி யாம் முகமும் தேகம்

துணிதலாம் தரும நீதித் துணையென யுரைப்பா ளென்றும்
பணிவுடன் வாழ்வா ளென்றுப் பகர்ந்தன றறிவுள் ளோரே.

(இ-ள்) தனுசு ராசியில் சந்திரன் நிற்கப்பிறந்தவள் ஆசாரம் நோன்பு நியமமுள்ளாள் நன்னடக்கை ஆபரணமணிவாள் சங்கீதஞானமுள்ளாள் அழகுள்ள சரீரம் தருமம் தலைகாக்குமென்றும் துணையாகுமென்றும் தான் கற்ற வித்தையால் பிறருக்குப்போதிக்கும் தன்மையுள்ளவள் பந்துமித்திரர்களின் இஷ்டத்தை அறிந்தவளென்று உரைப்பதாம்.

### மகரத்தில் சந்திரன் நின்றபலன்

உள்ளதோர் மகரம் தன்னி லுடுபதி நிற்கச் செல்வம்
தெள்ளிய சத்திய வாக்குத் தெரிந்திடும் வித்தைநீதி
உள்ளாருமில்லை தேகமுறத்ததாம் தயையும் நீண்ட
விள்ளலுள் பற்க ளுள்ளாள் வினயமும் பொறுமையுண்டே.

(இ-ள்) மகர ராசியில் சந்திரனிருக்கப் பிறந்தவள் தனவதி உண்மையையுரைக்கும் தெளிவாகிய வார்த்தையும் வித்தைவினயமுமுள்ள ஞாயச்செயல் எவரிடத்திலும் பிரீதி வலுவோடுகூடிய திரேகம் பேதமைகுணம் நீண்ட விகாரமுள்ள பற்களு காமியாயு மிருப்பாள் என்பதாம்.

### சந்திரன் கும்பத்தில் நின்ற பலன்.

உண்டென மதிதான் கும்பத் துற்றிடத் தநயருண்டாம்
பண்டென பணிகள் பூண்டபாவையும் தனமதுள்ளாள்
கண்டெநற் பணிகள் செய்வாள் கால்துடை நீண்ட தேகம்
கொண்டவள் தருமவாஞ்சைக் கொழுநற் கென்றுரை செய்தா
(ரே

(இ-ள்) கும்பராசியில் சந்திரனிருக்கப் பிறந்தவள் புத்திரபாக்கியம் பழமையான ஆபரணங்களும் பொருளுள்ளவள் அபூர்வமான காரியங்களை கண்ணால் பார்த்தால்தான் உடனே சந்தேகமின்றிச் செய்யும் கூர்மையான புத்தி கால் துடை நீண்ட தேகம் தருமபுத்தி புருஷனுக்குப்பிரியமானவள் சந்திரனைப்போல குளிர்ந்தமுகம் சக்திக்கேற்ற அபிமானமும் உள்ளவளாம்.

### மீனத்தில் சந்திரன் நின்ற பலன்

செய்தாரே சசிதான் மீனஞ் சேர்ந்திட சுரதங் கற்றுள்
மெய்தானென் மனமாம் லச்சை மேன்மையாந் தரும புத்தி
பொய்யாத யுரையும் முன்செய் புண்ணியம் ஞானி யென்பார்
வையமில் செல்வமுள்ள வனிதையென் றுரைசெய்தாரே [79]

(இ-ள்) சந்திரன் மீனராசியில் நிற்கப்பிறந்தவள் காம நூல் கற்றவள் சொன்னதை உண்மையென நம்பும் மனம் நாணமுள்ளாள் சிறந்த தருமத்தில்புத்தி சத்தியமுரைப்பாள் ஞானியைப்போல் இருக்கும் சுபாவத்தால் இவள் முன்செய்த புண்ணியமென்றே உரைப்பார் செல்வமுடையவள் பதியினிடத்துப் பிரியமுள்ளவள் என்பதாம்.

## 7-வது அத்தியாயம்

### திரிம்சாங்கிச பலன் கூறுவாம்.

### திரிம்சாங்கிசம் பிரிக்கும் விதம்.

செய்ய லக்கினந் தன்னை முப்பதாய்ப் பிரித்துச்
செவ்வாய்க் கோரைந்து பங்காம் சனிக்குப் பங்கைந்தாம்
துய்ய குருவுக் கெட்டு புதனுக் கேழாம்
சுக்கிரனுக் கைந்து பங்காய்ச் சொல் லொற்றை தனக்கே
பையவந்த ரட்டைலக்கினந் தனக்குப் பங்கு
பகர் சுக்கிரன் றனக்கே யைந்து புதற்கேழாம்
தையலே கேளரசர்க்கெட்டு சனிக் கைந்தாம்
சாற்று குசற்கைந்து பங்காந் தான் சாற்றுங்காலே. [80]

(இ-ள்) ஜனனமான லக்கினத்தை முப்பது பங்காகப் பிரித்து ஜனனமானது ஆண்ராசியாகிய மேடம், மிதுனம், சிங்கம், துலா தனுசு, கும்பம் ஆகிய இந்த ராசிகளானல் செவ்வாயிக்கு ஐந்து பங்கும் சனிக்கு ஐந்துபங்கும் குருவுக்கு எட்டுப்பங்கும் புதனுக்கு ஏழுபங்கும் சுக்கிரனுக்கு ஐந்துபங்குமாகப் பிரிதல்.

ஜனனமானது பெண் ராசியாகிய ரிஷபம், கடகம், கன்னி, விர்ச்சிகம், மகரம், மீனம் ஆகிய இந்த ராசிகளுக்கு மேற்கண்டபடியே தலைகீழாகக் கணக்கிட்டு பாகிப்பது. அதாவது சுக்கிரனுக்கு ஐந்துபங்கு புதனுக்கு ஏழும் குருவுக்கு எட்டும் சனிக்கைந்தும் செவ்வாய்க்கைந்துமாக பாகித்தல்வேண்டும். இவ்வாருகப் பிரித்து பார்க்கில் எந்தராசியில்யாவருடையபாகம் வருகிறதோ அதைஅறிந்து பலன்களை யுரைத்தல் அவசியமாம் அப்பலன்கள் கீழ்வருமாறு காண்க.

### திரிம்சாம்சை பலன்

### செவ்வாய் திரிம்சாம்சை:

ஆடுதேளில் சனனமாகி யம்புலியங் குற்றிடில்
ஆரலங்கி சத்தில்பாவை யவதரிக்க மணத்தின்முன்
கூடுவாள் குலாவிறன்னுள் கோரியுள்ள புருடனை
கோலமந்த னங்கிசத்தில் குணமிலாத தாசியாம்

நாடுபோற்ற களிப்பின்மாது நல்லவேந்த னங்கிசம்
நங்கை பொய்யும் வஞ்சனைகள் நவிலும் புந்தி பாகையாம்
தேடுஞ் சுங்கன் பிரிவு டன்னில் தெரிவை துன்னடக்கையாள்
தீங்கிலா பரத்தை யென்று தீதுரைப்பா ரென்றுமே. [80]

(இ-ள்) அங்காரகனுக்குரிய வீடான மேஷம் விர்ச்சிகம் இவ்விரண்டில் ஒன்று ஜனன லக்கினமாகி சந்திரன் அங்கிருந்து செவ்வாய் திரிம்சாங்கி சமானுல் பிள்ளையில்லாமல் அடிமையாவதோடு தனக்கு கலியாணமாவதற்கு முன்னமே புருஷ சம்பந்தமுடையவளாம்.

சனியினுடைய திரிம்சாம்சையாகில் அடிமையாய் பலபுருஷ சினேகம் கொள்வாள்.

குருவினுடைய திரிம்சாம்சையாகில் உறவினரும் மற்றேரும் புகழும் படியான குணமும் பதிவிரதா லக்ஷணமு பொறுமையுமுள்ளவளென்பிதாம்.

புதனுடைய திரிம்சாம்சையானுல் பொய்யுரைத்தல் வஞ்சனையான மனம் மாயவித்தையை அறிந்தும் சாமர்த்தியத்தோடுள்ளவள்.

மேஷம், விருச்சிகம் அல்லது சந்திரலக்கினமாயிருக்க சுக்கிரன் திரிம்சாம்சை பாகமாகியிருந்தால் அப் பெண்மணியானவள் வேசியாயும் திருடியாயும் துர்மார்க்கம் செய்பவளாகியும் உலகுள்ளோறிகழுங் குணங்களுள்ளவளாயுமிருப்பாள் துன்நடக்கையென்பது குலத்துக்கு இழிவான தொழிலாம்.

## மகர கும்பலக்ன ராசி திரிசாம்சை பலன்

மந்த னில்லம் மகரகும்பம் மங்கை சன்ம மதியுறில்
மங்கலன் தன் னங்கி சத்தில் மாதவள் பரத்தையாம்
செந்தி லங்கி சத்தில் நீசர் சேர்க்கைக் காமி யாகுவள்
சேய்க ளுண்டு வேந்தன் கூறு சேமம் கற்பு நடப்பினள்
புந்தி யங்கி சத்தில் வந்த பூவை துன் னடக்கையாள்
புஞ் சிரிப்பு முக மலர்ச்சி பொறுமை சுரத விருப்பினள்
அந்தமுள்ள சுக்கிரன் றன் னங்கி சத்தி னரிவையாள்
அகமெலிந்த மலடியென்று ஆகமங்க ளோதுமே. [81]

(இ-ள்) சனியின் வீடான மகரகும்பங்கள் லக்கினமாகிலும் அல்லது சந்திர லக்கினமாயிருந்து செவ்வாய் திரிம்சாம்சை பாகத்தில் பிறந்தபெண் தாசியாவாள்.

சனியின் திரிம்சாம்சையாகிப் பிறந்தபெண் அதிகாரமுள்ளவளாயும் நீச புருடரைச் சேர்ந்தும் காமியுமாயிருப்பாள்.

குருவின் திரிம்சாம்சை பாகத்தில் பிறந்தபெண் புருஷனிடத்தில் அன்பும் சம்சார சௌக்கியமும் ஜனங்களிடத்து ஆசையும் கற்புமுள்ளவளாயிருப்பாள்.

புதன் திரிம்சாம்சையில் பிறந்தபெண் துன்மார்க்க நடக்கை முகமலர்ந்த புன்சிரிப்பு பொறுமை சுரத விருப்பமுள்ளவளாம்,

சுக்கிரனுடைய திரிம்சாம்சை பாகமாகி பிறந்தபெண் இளைத்த சரீரமும் மலடியுமாயிருப்பாள்.

## தனுசு மீனராசிலக்கினம் திரிம்சாம்சை பலன்

பொன்ன னில்லஞ் சாப மீனம் பூவை ஜனன மாகிடில்
பொங்குஞ் சோம னங்கு நிற்க பௌமன் பாகமாகிடில்
நன்ன ருள்ள குணமுஞ் செய்கை நரரின் வாஞ்சை யுள்ளவள்
நல்ல மந்த நம்சைதன்னில் நவிலுமற்ப காமியாம்
மன்ன னங்கிசத்தில் சீலம் மறைகளோதும் ஞானியாம்
மாலின் கூறதாகி லறிவு மாசிலாதத் தெளிவினள்
கன்னி வெள்ளி பங்க தாகில் காதல் மிகுதி யாவதால்
காசினியில் பலரைக் கூடும் கணிகையென் றுரைப்பரே. [82]

(இ-ள்) பொன்னவனென்னும் குருவுக்கு ஆக்ஷியாகிய தனுசு மீனராசியானது ஜனனலக்கினமாகி அங்கு சந்திரநிற்க செவ்வாயினுடைய திரிம்சாம்சை பாகமாயுதித்தபெண் அநேக நற்குணமும் பல புருஷரை இச்சிக்கும் மனதுடையவளாகும்.

தனுசு மீனம் லக்கினமாக சந்திரனிருக்க சனி திரிசாம்சை யாகிபிறந்தவள் அல்பகாமியாயும் மந்தபுத்தியுமுள்ளவளாயிருப்பாள்.

மேற்கண்ட லக்கினத்தில் குருவின் திரிம்சாம்சையில் ஜனித்தவள் நல்ல ஆசார சீலமும் வேத புராணாதிகளில் ஆசையும் ஞானியாயுமிருப்பாள்.

மேற்கண்ட லக்கினத்தில் புதனுடைய திரிம்சாம்சை பாகமாகில் களங்கமில்லா மனம் தெளிந்த புத்தி சாஸ்திரக்கேள்வியுடையவளாவாள்.

மேல் லக்கினத்தில் சுக்கிரனுடைய திரிம்சாம்சை பாகமாகில் எப்பொழுதும் சுரத புத்தியும் அநேக புருஷர் நேசமுமுடைய விபசாரியுமாயிருப்பாள்.

## மிதுனம் கன்னிராசி லக்கினதிரிம்சாம்சை பலன்

புந்தி யில்லம் யாழ் மடந்தை பூவை ஜனன ராசியாய்
புகலுஞ் சோம னங்கு நிற்கபௌமன் கூற தாகிடில்
உந்தியிற் பொருமை பொய்யு முள்ள கபடி யாகுவள்
உதயன் மதலை யம்சமாக ஊனம் அலி யென்றுரைப்புவள்

அந்தணன் றன் பாகமாகி அழகு நாணங் கற்பினள்
அமுத கிரணன் சேயின் பங்கிலான்றல் குணங்கள் பிருகுவின்
நந்தன் பிரிவில் பதியை விட்டு நாண மின்றி பலருடன்
நாடியே தகாதபேரை நங்கை கூடி வாழ்வளே. [83]

(இ-ள்) புதனுடைய சுய வீடாகிய மிதுனம் கன்னி இந்த ராசிகள் ஜன்ம லக்கின மானலும் அல்லது சந்திரனுவது இருந்து செவ்வாயினுடைய திரிம்சாம்சை யாகிப் பிறந்த பெண் வயிற்றில் பொருமையும் பொய் வாக்குரைத்தலும் கபடமான நெஞ்சமும் உடையவளென்பதாம்.

மேற்கண்ட ராசிகள் லக்கினமாகி சனித்திரிம்சாம்சையில் பிறந்தபெண் அலியாக விருப்பாள்.

மேல்ராசி லக்கினமாகி குருவினுடைய திரிம்சாம்சை பாகமாகில் அழகும் வெட்கமும் பதிவிரதையாயுமுள்ள நற்குணங்கள் பொருந்தினவளாம்.

புதனுடைய திரிம்சாம்சையிற் பிறந்த பெண் இல்லறத்திற்கு ஒழுங்கு புத்தி ஞானம் உள்ள பெருமையு முள்ளவளாம்.

மேற்கண்ட ராசிகள் லக்கினமாகி சந்திரன் நிற்க சுக்கிரனுடைய திரிம்சாம்சை கூருகில் அதிக காம முடையவளாய் தன் புருடனைப் பிரிந்து வெட்கத்தைத் துறந்து சமானமில்லாப் பலபுருடரைக் கூடி சந்தோஷமா யிருப்பாள்.

### ரிடபம் துலாராசி லக்கின திரிம்சாம்சை பலன்

எருது கோலி லுதய மாகி எல்லி நாத னங்குறில்
ஏற்குஞ் சேயி னங்கிசத்தி லேந்திழை துற் பாதையாள்
அருணன் மதலை பிரிவ தாகில் லமரும் மண மிரண்டதாம்
அந்தணன் பங்குற்ற மங்கை அன்பு நற் குணங்களால்
அருணன் கூறில் மதன நூன[ ]லக நீதி கற்றவள்
ஆசைமீறுங் கான வித்தை அனைவர் புகழ வோதுவாள்
நிருத ராசன் பாகமுய்ய நின் மலத்தி லுள்ளமாம்
நிகரி லாத நற்குணங்கள் நிலைக்கு மென்பா ருண்மையே.

(இ-ள்) ரிஷபம் துலாராசிகள் சனன லக்கின மாகி சந்திரன் நின்று செவ்வாயின் திரிம்சாம்சை பாகமாகி பிறந்த பெண் வம்சத்தில் செய்யத்தகாத காரியங்களைச் செய்தலால் அபகீர்த்தி யுடையவளாயிருப்பாள்,

ரிஷப துலா சன்ம சக்கின மாகி சந்திர னிருந்து சனியினுடைய திரிம்சாம்சை பாகத்தில் சனித்தவள் முதல் மணஞ்செய்த புருஷனை விட்டு நீங்கி மற்ருெரு புருஷனை மணந்து வாழ்வாள்.

மேல்கண்ட ராசியில் சனனமாய் சந்திர னிருந்து குரு திரிம்சாம் சையில் பிறந்தபெண் அனேவரிட த்தும் விசுவாசம் பொறுமை நன்ன டக்கை முதலிய நல்லகுணங் களுள்ளவளாம்.

மேல் ராசிகளில் சனனமாகி சந்திரன் நிற்க புதனுடைய திரிம் சாம்சையாகி சனித்தபெண் சகலசாத்திரக் கியானமும் கானவித்தை விஷேசத்தால் அனேவருக்கும் சந்தோஷமுண்டாக்க தகுந்தவளாம்.

ரிஷப துலாம் லக்கினமாகி சந்திரன் அங்கிருந்து சுக்கிரனுடைய திரிம்சாம்சை பாகமாகில் பரிசுத்தமான மனமும் நல்ல ஆசாரமும் சாது குணமுடையவளாகி கீர்த்தியுடன் வாழ்வாள்.

## கடகராசி லக்கினதிரிம்சாம்சை பலன்

உதய ராசி கடகமாகி உடுவின் வேந்தன ங்குறில்
உதிர நம்சை யச்சமின்றி ஊரைசுற்றும் வம்பினள்
கதிரின் மைந்தன் கூறதாகிற் கணவனுக்குக் காலனும்
கனகன் பங்கில் முகமலர்ச்சி கார்க்குங் குணமு மறிவுளாள்
புதனின் பாகஞ் சிற்பநூல் புராணங் கற்ற சிந்தையாள்
பொங்கும் வெள்ளி பிரிவில் வந்தப் பூவையாவல் திரிதலும்
விதியொன்ருேதும் பரத்தை யாகி விளங்கு வாளிப்பாருளே
வேந்தன் பார்வை யாகில் நல்விவேகசீர்மை யுள்ளவள். [85]

(இ-ள்) கடகராசியானது சனன லக்கினமாகி சந்திரன் நின்று செவ்வாயினுடைய திரிம்சாம்சை பாகமாகப் பிறந்த பெண்மணி தைரியத்துடன் ஊரைச்சுற்றலும் அதிகமானவார்த்தை விண்சண்டை முதலிய வம்பினளாகும்.

மேல்ராசி லக்கினமாகி சந்திரன் நின்று சனியினுடைய திரிம் சாம்சை கூருகிப் பிறந்தபெண் பதிக்கு வஞ்சனேயும் கொல்லத் தகும் காலனேப்போலும் இருப்பாள்.

கடகராசியி லக்கினமாய் சந்திரனிருந்து குருவினுடைய திரிம் சாம்சை பாகத்தில் சனனமான பெண் எப்பொழுதும் சந்தோஷக் குறியோடுகூடிய முகமும் பசியெனவந்தவருக் கமுதளித்துக்காக் கும் குணமும் பொறுமையோடுகூடிய நற்குணங்களே வாய்ந்தவள்.

மேல்ராசி லக்கினமாகி சந்திரன் நின்று புதனுடைய திரிம் சாம்சை கூறில் பிறந்தபெண் சிற்பசாஸ்திர பயிற்சியால் விசித்திர மான சித்திர படங்க ளெழுதும் கூர்மையான புத்தியும் புராணுதிகள் கேள்வி யுள்ளவளாவாள்.

மேல்கண்ட ராசி லக்கினமாய் சந்திரன் அங்கு நிலேத்திருக்க சுக்கிரனுடைய திரிம்சாம்சை பாகத்தில் பிறந்தபெண் பயமில்லாமல் எவ்விடத்திலும் திரிதல் பலபுருட கவனமும் உள்ளவள்.

இந்த திரிம்சாம்சை பாகங்களில் கெட்டபலன்களை கூறியுள்ள கிரகங்களையாவது அந்த திரிம்சாம்சத்தையாவது குருவின் பார்வை சம்பூர்ணமாயிருந்தால் அவ்வித கெடுதலையானபலன்கள் இல்லாமல் நற்பலன்கள் உள்ளவளென்பதாம்.

### சிங்கராசி லக்கின திரிம்சாம்சைபலன்.

ஆதவன்றன் னில்லமான அரியிராசி சனனமாய்
அலவனிங்கு நிற்கசேயி னங்கிசம்ம தாகிடில்
போதவேபு மானைப்போல புகலல் நடையு முள்ளவள்
பொன்னன் பாகமாகில் வேந்தன் பூவை யென்றுகக் குமாம்
தூதுவன்றன் கூறில் புருட துன்னயங்க ளுற்றவள்
துணிவுகொண்ட விலையின்மாது தூயமந்தன் பிரிவினில்
தீதிலாத புகரின்பங்கு தீயர்சேர்க்கை நட்புளாள்
தீதிழைக்குங் குணங்களுண்டு தேவன்பார்க்க நன்மையே. [87]

(இ-ள்) சூரியனுக்குச் சொந்தமாகிய சிங்கராசி சனன லக்கினமாகி சந்திரன் அங்கிருக்க செவ்வாயினுடை திரிம்சாம்சையில் சனித்தப் பெண் புருடனைப் போல நடை வார்த்தை மற்றும் பலகுணங்களையுடைய வளாவாள்.

மேற்கண்ட லக்கினத்தில் குருவின் திரிம்சாம்சை பாகத்தில் பிறந்தபெண் எளியோர் வீட்டில் பிறக்கினும் ராசவம்சப் பெண்களைப்போல் நடை வாக்கு முதலானவைக ளுள்ளவளாம்.

மேல் ராசி லக்கினமாகி புதனுடைய திரிம்சாம்சை கூருகில் புருடரைப்போல் குணங்களும் தொழிலும் செய்பவளாய் இருப்பாள்.

சிங்கராசி லக்கினமாகி சனியி னுடைய திரிம்சாம்சை பாகத்திலுதித்தபெண் எல்லா விஷயங்களிலும் விலைமாது என்னும் வேசியைப் போலிருப்பாள்.

மேல்ராசி லக்கினத்தில் சுக்கிரனுடைய திரிம்சாம்சை பாகத்தில் பிறந்த பெண் துன்மார்க்க நடவடிக்கையும் கெட்ட சனங்கள் சேர்க்கையும் சினேகமு முள்ளவளா யிருப்பாள்.

இவ்வாறு கண்ட கெட்டபலனுள்ள திரிம்சாம்சைகளுக்கு குருவின் பார்வை யிருந்தால் நன்மையுள்ளபலனுக நடக்கு மென்பதாம் இது திரிம்சாம்சைபலன்.

### திரிம்சாம்சைபலன் முற்று.

## 8-வது அத்தியாயம்

### துற்கக்ஷத்திரபலன் நாரதர் மொழி.

நன்மையை யழிக்குங்கேட்டை நாளொடு ஆயில்மூலந்
தன்மையுள் மகமுங் காற்று தையலாள் பிறப்பின் நாளேல்
இன்மையில் பதிக்கு முன்னேன் ஈன்றனன் தாதையோடு
கன்னியின் கணவ னின்னுங் கனிட்டனுக் கரிட்டமாமே.

(இ-ள்) இப் பூவுலகத்துதித்த பெண்மணிகளுக்கு முன் செய் வினைகளால் உண்டாகும் கெட்ட நக்ஷத்திரங்களின் பலனை முன் நாரத மகாமுனி உரைத்தவாறு உரைப்போமாக.

தேவேந்திர நாளென்னும் கேட்டை நக்ஷத்திரத்தில் பிறந்தால் மூத்தாரென்னும் தன் புருஷனுக்கு மூத்தவனுக்குத் தோஷமாம்.

பாம்பின் நாளெனும் ஆயில்லிய நக்ஷத்திரத்தில் உதிக்க மாமியாருக்குத் தோஷமாம்.

இராக்கதர் நாளெனும் மூலா நக்ஷத்திரத்தில் பிறக்கில் மாம னுருக்குத் தோஷமாம்.

பிதுரு நக்ஷத்திரமான மகா நக்ஷத்திரத்தில் மானிலத்துதித்த மங்கையருக்கு மாங்கல்ய தோஷமாம், விசாக நக்ஷத்திரத்தில் பிறக்கில் மைத்துணருக்குத் தோஷமுள்ளவளாம்.

ஆமெனக் கேட்டை யாயில் லந்தியில் நான்கு நாழி
நீமமாய் மகமும் மூலம் நிலைத்தது முதல் நால் நாழி
சேமமே சென்ற பின்னல் செல்வமுஞ் சுகமு முண்டு
பூமகள் கருணை யென்று பு[illegible]ன்றனர் புவியுள்ளோரே. [88]

(இ-ள்) கேட்டை ஆயிலியம் இவ்விரண்டிலும் உதித்த அந்தி யில் நான்கு நாழிகையும் மகம் மூலம் இவ்விரண்டு நக்ஷத்திரங்களில் ஆதியில் நான்கு நாழிகையுஞ் சென்றபின் ஜனனகால மேற்படில் சுகமும் செல்வமும் உண்டாகுமென்பதாம்.

### மூலத்தில் மற்றோர் கருத்து வைத்தியநாதீயம்

உள்ளதோ ரசுர நாளை ஒருநான் காய்ப் பிரிக்க முற்கால்
கள்ளமாம் பிதுருக் கென்று கணித்தன ரிரண்டில் தாயும்
தெள்ளிய செல்வ மூன்றும் தெரிவையாள் நான்கிலானல்
மெள்ளவே தனதான்னியங்கள் மேம்படும் சுகமுண்டாமே.[89]

(இ-ள்) அசுரநாளென்னும் மூலா நக்ஷத்திரத்தை நான்காக பிரித்தால் அதில் முதற்கால் தகப்பனுக்கு தோஷமாம் இரண்டாம் பாதத்தில் பெற்ற தாயிக்கும் மூன்றுங்காலாகில் செல்வக் குறைவும் நான்காம் பாதமானல் எல்லாவித செல்வமும் நன்மையும் உண்டாகுமென்பதாம். இருப்பினும் நான்காம் பாதபலன் துன்பங்களுண்டென்று அனேகர் சம்மதம்.

### ஆயில்லிய நக்ஷத்திர பாதபலன்

சுகமுள வாயில் நாளே சுத்தமாய் நாற் கூருக்கி
அகமது செழிக்குமாதி அனைத்தும் போமிரண்டி லாதல்
உகமதில் மூன்றில் தாய்ச்சாம் உள்ளதோர் தந்தை நான்காம்
நிகரிலா வேந்தன் நோக்கில் நீங்கிடுந் தோடந் தாளே. [91]

(இ-ள்) ஆயில்லிய நக்ஷத்திரத்தை நான்கு பாகமாகப் பிரித்து அதில் முதற்காலில் பிறந்தால் செல்வங்கள் சேரும் இரண்டாங்காலில் உதித்தால் தரித்திரம் உண்டாகும் மூன்றுங்காலில் சனித்தால் பெற்றதாய்க்கு தோஷம் நான்காம் பாதத்தில் தகப்பனுக்கு கண்டமுண்டென்றும் இந்த நக்ஷத்திர ராசியை குருபகவான் பூர்ணமாய்ப் பார்க்கில் தோஷங்கள் நீங்கி சுசமுண்டாகு மென்பதாம்.

### விசாகத்தின் பலன்

தானென உதித்த நாளில் தங்கிய விசாக மாகில்
மானினி மூன்று பாதம் மங்கல குணங்க ளுண்டாம்
ஆனியாம் நான்காம் பாத மாயிடி லனர்த்த மாகும்
தேனென மைத்துனர்க்குத் தெரிவையாள் குற்ற மாமே. [92]

(இ-ள்) பெண்கள் பிறந்த நக்ஷத்திரமானது விசாக நக்ஷத்திரமானல் ஒன்று இரண்டு மூன்று பாதங்களும் நன்மையாம் நான்காம் பாதமாகில் மைத்துன னுக்கு தோஷமென்பதாம்.

### நக்ஷத்திர தோஷப்பிரிவு

குற்றமா மாயில் முற்கால் கோதுரும் நாற்கால மூலம்
உற்றதோர் விசாகங் கேட்டை உதித்திடும் முதற்கால்நன்று
மற்றமுக் காலுந் தோடம் மங்கையர் தனக் கிக்கோது
நற்றவ புருடனுக்கு நாடாதிவ் விதியென் றுரோ. [93]

(இ-ள்) ஆயில்லிய நக்ஷத்திரத்தில் முதல்பாதம் தோஷமாம் மூல நக்ஷத்திரத்தில் நான்காம்பாதம் தோஷமாம் விசாகம் கேட்டை இந் நக்ஷத்திரங் களுக்கு முதற்கால் நன்மையும் மற்றபின் முக்காலும்

தோஷமாம் ஆயினும் இந்த நக்ஷத்திர தோஷங்க ளெல்லாம் சனன மான பெண்களுக்கே தவிர ஆண் பிள்ளைகளுக்கு தோஷங்கள் இல்லையென்று முன்னூல்கள் முறையிடுமாம்.

### நான்முகனுரைத்தவாறு நரபதிவாக்கு

### மூலவிருக்ஷம்பலன்

விதியெனு மசுரநாளில் விளங்கிய கடிகை தன்னை
சதிருடன் வேரிலேழு சாற்றினு ருடலிலெட்டு
பதியவே பரணிபத்து பன்னொன்று கிளைமுன் னுன்கு
சதனமு மலரிலைந்து சதுர்க்கனி முடிவில் மூன்றே. [94]

(இ-ள்) பெண்கள் ஜனனமான நாளில் உள்ள அசுரநாளென்னும் மூல நக்ஷத்திர ஆதியந்த நாளிகையைக் கொண்டு இந்த விருக்ஷரூபமாக வர்ணிக்கிறார் எவ்வாறெனில் மேல் கண்ட மூல விருக்ஷத்தின் வேரில் ஏழுநாழிகை உடலில் எட்டு நாளிகை மேல் பரணையில் பத்து நாழிகை கிளைகளில் பதினொன்று நாழிகை இலைகளில் பன்னிரண்டு நாழிகை புஷ்பத்தில் ஐந்து நாழிகை பழத்தில் நான்கு நாழிகை தலையில் மூன்று நாழிகையாகப் பிரிக்க மொத்தம் அறுபது நாழிகைகளாகும்.

### இதின் பலன்

முன்றென வேரில் வம்சம் முற்றிலும் நாச மாகும்
அன்றியு மு டலின் தோடம் ஆனதோர் குடிக்கே தோலில்
நன்றிலை பயந்தா ளுக்கே நற்சுகங்கிளையி லுண்டாம்
என்றன றிலையில் வேந்தர் ஏற்றிறப் புள்ளா ளாமே [95]

(இ-ள்) மூலவிருக்ஷத்தின் வேரில் உள்ள நாழிகையி லுதித்த பெண்மணியின் வங்கிசத்திற்கே தோஷமாம் உடலிலுள்ள நாழிகை யானால் பிறந்த குடிக்குத் தீங்குண்டாம் மேல் தோலில் தாய்க்குத் தோஷமாம் கிளைகளிலாகில் எல்லா சுகங்களு மடைவாள் இலையி லானல் ராசசுகத்தை அனுபவிப்பாளாம்.

ஆம்மலர் தன்னிற் மாந்தர் ஆசையும் வசிய மாகும்
தேம்பல மதனில் வாழ்க்கை திருமகள் கடாக்ஷ முய்யும்
வீம்புள முடியிலாதல் விதியென வாயு ளர்ப்பம்
நாம்புகன் றிட்டோம் முன்னல் நரபதி யுரைத்த வாறே. [96]

(இ-ள்) மலர் என்னும் புஷ்பத்தில் உள்ள நாழிகையில் உதயமான பெண்களுக்கு மானிடர்களிடத்து ஆசையும் நட்பும் ஜன வசியமுள்ளவள் கனியெனு பழத்திலானல் எல்லா விதத்திலும் லக்ஷ்மி கருணையுடையவளாயிருப்பாள்.

தலையென்னும் மரத்தின் முடியிலுள்ள நாழிகையில் பிறந்தால் பிரமனல் விதிக்கலான வயது அற்பமும் கஷ்டமும் உள்ளவளென்று முன் நூல்களிலுரைத்தவாறு நரபதியானவர் வரைந்துள்ள நூலின் கருத்தை இங்ஙகன் விவரிக்கலாயின.

### நான்முகனுரை மூலநக்ஷத்திரப் பெண்ணுருவம்

உரைத்தவாறு மூலநாளி லுள்ளதோர் கடிகையெல்லாம்
நிரைத்திடும்பெண்ரூ பத்தில் நிரணயத் தானஞ்சொல்வோம்
சிரத்தினி லைந்துநாழி சீர்முகந் தன்னிலேழு
தரித்திடும் புயத்தில்நான்கு தங்கிடுங் கரத்திலெட்டே. [97]

(இ-ள்) முன்னுரைத்தபடியே மூலநக்ஷத்திரத்தின் முழு நாழிகையை பெண்களுடைய அவயவங்களில் பிரித்து அதற்கேற்றவாறு பலனுரைக்க ஆரம்பித்து முதல் சிரசில் ஐந்து நாழிகை முகத்தில் ஏழு நாழிகை தோளில் நான்கு நாழிகை கைகளில் எட்டு நாழிகையாகவும்.

எட்டென கண்டம் மூன்று ஏந்திழை மார்பி லொன்பான்
பட்டெனு முதடி ரண்டு பத்திடைத் துடையிலாரம்
மெட்டிடும் பாதந்தன்னில் மிகுந்தன சமய நாழி
திட்டமாய்ப் பிரிக்கவென்று திசைமுகன ருளினரே. [98]

(இ-ள்) கழுத்தில் மூன்று நாழிகை மார்பில் ஒன்பது நாழிகையும் உதட்டில் இரண்டு நாழிகையும் இடையில் பத்து நாழிகையும் தொடையில் ஆறு நாழிகையும் பாதத்தில் ஆறுநாழிகையாக பிரிக்க அறுபது நாழியாகுமென நான்முகனுரையாம்.

### இதன் பலன்

அருளிது ராச யோக மமைந் திடும் முடியில் நிற்க
திருமுகந் தாதை தோடம் தீங்குள வாயு ளென்பார்
பெருபுயம் வலுவா மிக்க பெருமையுந் தீரங் கைகள்
பொருளொடு பூமி லாபம் புகளுளாள் களத்தில்தானே. [99]

(இ-ள்) அவயவங்களில் பிரதானமான முடியில் நின்ற நாழிகையில் ஜனனமானல் இராசயோக பாக்கியமுள்ளவளாம். முகத்தில்

தந்தைக்குத் தோஷமுள்ளவளும் அற்பாயுளுமாம் தோள்களிலானால் தேகத்தில் நல்ல வலுவுள்ளவள் கைகளில் நல்ல தீரமும் வலிமை யுமுள்ளவள் கழுத்தில் நின்றால் பூமிலாபம் செல்வமும் புகழும் உள்ளவளென்பதாம்.

தானென உதடுதீரம் தையலாள் மார்பி லாகில்
கோனிட முதுவர் யோகம் குறியிடையதிக காமம்
மானினி துடையில் நல்ல மதியுளாள் கற்பு பாதத்
தூனமா மாயு ளென்று துலக்கமாம் விதியின் வாக்கே. []

(இ-ள்) உதட்டிலுள்ள நாழிகையிற் பிறந்தால் நல்ல தைரியம் தேகத்தில் பலமுமுண்டாம் மார்பிலாகில் இராசமந்திரி யோகத்தை அனுபவிப்பாள் இடையிலானால் அதிக காமமுள்ளவளாம் துடை யில் நல்லபுத்தியும் பதிவிரதையுமாம் பாதத்தில் அற்பாயுளும் தரித் திரமும் உள்ளவளென்பதாம்.

## 9-வது அத்தியாயம்

### விஷகன்னிகை யோகமென்னும் அவயோகம்.
### விஷகன்னிகையென்றால் அமங்கலியாதல் சந்தானமின்மை தரித்திரம் பதியை விட்டகலல். இவ்வித துற்பலன்களாம்.

விதியெனும் பாம்பி லாதி விதியையுங் கூடு நாளும்
துதிக்கு நல் லாரல் மந்தன் தோன்றிய சப்தமீ நாள்
மதிக்கு நல் துவாதசீ நாள் மங்களன் சதயங் கூடில்
பதிக்கு நல் யோக மில்லா பாவையென் றுரை செய்தாரே.

(இ-ள்) மானிலத்தில் மங்கையர்கள் ஜனனமாகும் நாளில் ஆயில் லிய நக்ஷத்திரம் ஞாயிற்றுக்கிழமை துதிகைதிதி சேர்வது ஒரு யோ கம் கிர்த்திகை நக்ஷத்திரம் சனிக்கிழமை சப்தமீதிதி சேர்வது ஒரு யோகம் துவாதசீதிதி செவ்வாய்க்கிழமை சதயநக்ஷத்திரம் கூடுவது ஒரு யோகம் இந்த மூன்று யோகமும் விஷகன்னிகையெனப்படும்.

செய்தனர் மந்தனு யில் சேர்ந்திட துதிகை நாளும்
மெய்குசன் சதயங் கூடி மிகுத்திட சப்தமீ நாள்
வெய்யவன் விசாக மொன்றாய் விரவிய துவாதசீ யில்
உய்யவந் துதித்த மங்கை உலகெலாம் பழிக்குமாமே. [102]

(இ-ள்) சனிக்கிழமையில் ஆயில்லிய நக்ஷத்திரம் கூடி துதிகை திதி சேர்ந்தால் ஒருயோகம் செவ்வாய்க்கிழமையில் சதயநக்ஷத்திரம் கூடி சப்தமீதிதி சேர்ந்தது ஒரு யோகமாம் ஞாயிற்றுக்கிழமையில் விசாகநக்ஷத்திரம் சேர்ந்து துவாதசி திதி கூடினுல் இது ஒருயோக மாம் இந்தமூன்று யோகமும் அவயோகமெனப்படும் இந்த யோகத் தில்பிறந்தஸ்திரீயானவள்தரித்திரமும் எவர்களும்யழிக்கஆளாகுவள்

பழிக்குமே லக்கினத்தில் பரிதி சேய் நிற்க ஒன்பான்
செழிக்குஞ் சேயிருக்க வைந்தில் செங்கதிர் நின்ரு ராகில்
பழித்தலுஞ் சுதரில்லாமை பதியையும் புரிதல் கைம்பெண்
கழிப்புள பணிகள் செய்யும் கன்னியென் றுரைத்தா ராமே.

(இ-ள்) உதயமான லக்கினத்தில் சனியிருக்க ஒன்பதாம் வீட்டில் செவ்வாய் நிற்க ஐந்தாம்வீடல் சூரியன் இருக்க பிறந்தபெண் உலகு பழிக்கவும் சந்ததியின்மை புருஷனை விட்டகல்லும் வைதவவியம் பெற்று இகழ்ச்சியான காரியங்களைச் செய்து ஜீவனம் செய்வாள்.

ஆமென உதய ராசி யடைந்திட சுப ரிரண்டுந்
தாமெழர் பாவி பத்தில் தங்கிட வாரில் தீக்கோள்
நேமமா யிருவர் நிற்க நிலத்தினி லுதித்த பெண்ணுள்
சேமமே யில்லை யென்று செப்பினர் முனிவ ரெல்லாம் [104]

(இ-ள்) உதய லக்கினத்தில் இரண்டு சுபக்கிரகங்களும் பத்தாம் வீட்டில் ஒருபாபக்கிரகமும் ஆரும் வீட்டில் இரண்டு பாபக்கிரகங்கள் நிற்கப் பிறந்த பெண்ணுனவள் சுகமில்லாமல் தரித்திர மனுபவிப் பாளென்று சொல்வதாம்.

### இந்த தோஷபரிகாரம்

முனிவர்தா முரைத்த வாறு முதய லக்கினத்தி னுலும்
பனிமதி ராசி யாலும் பகர்ந்த யேழதிபன் நல்லாய்
கனியுடன் சுபரே ஏழில் கலந்திட உதித்த பெண்ணுள்
தனிய முன்னுரைத்த தோடந் தாங்காது சுகமுண்டாமே. [105]

(இ-ள்) உதய லக்கினத் திற்காவது அல்லது சந்திரன் நின்ற ராசிக்காவது ஏழாம்வீட்டிற் கதிபதி சுபக்கோளாகி அந்த ஏழாம்வீட் டில் சுபக்கிரகங்கள் நிற்க முன்னுரைத்த தோஷங்கள் நீங்கி சுகமும் தன விருத்தியும் கற்ப்பும் உள்ளவளாம்.

**விஷகன்னியாயோகம் முற்றிற்று.**

## 10-வது அத்தியாயம்

### செவ்வாய்தோஷம் அதன்பரிகாரம்

உண்டென லக்கி னத்தோ டுகந்திடு மிரண்டு நான்கு
அண்டின தேழு யெட்டு ஆனதோர் பன்னி ரண்டுத்
தன்னிலும் மதியுள் ராசித் தானவ குருவேர் வீட்டிற்
கின்னில மைந்தன் நிற்கி லிழுக்குடை தோடந் தீதே. [106]

(இ-ள்) பெண்ணுவது அல்லது ஆணுவது பிறக்குங் காலத்தில் முன் கர்மவினையால் ஏற்படக் கூடிய தம்பதிகளின் குற்றங்களுக்கு செவ்வாய் தோஷ மெனப்பெயராம் அவ்வித தோஷ விசேஷங்களை கூறுவோமாக. பெண்களுக்காவது புருடனுக்காவது பிறந்த லக்கினமானராசி இரண்டாம் வீடு நான்காம் ராசி ஏழாம் ராசி எட்டு பன்னிரண்டாம்ராசி ஆகிய இதுகளிலும் இவ்வாறே சந்திரன் நின்ற ராசிக்கும் சுக்கிரன் நின்றராசிக்கும் முன்கண்ட விடங்களில் நிலமைந்தனுகிய செவ்வாய் நிற்கில் தோஷமென்பதாம்.

### இத்தோஷம் மற்றோர்விதம்

தீதுருந் நான்கு ரண்டுத் திக்குட னேழ் பன்னிரண்டிற்
கோதுருஞ் சனியும் பாம்புக் குளிகனுந் நிற்பா னுகில்
வேதிக்குங் குச தோடம்போல் விதித்தனர் முனிவரென்று
சோதித்தே யுரைத்தார் முன்னோர் சூட்சமு மறிகுவீரே. [107]

(இ-ள்) முன்னுரைத்த அடைவே இரண்டு நான்கு எட்டு ஏழு பன்னிரண்டில் சனியாவது ராகுவாவது அல்லது குளிகனுவது இருக்கச் செவ்வாய்த் தோஷத்தைப் போலவே தோஷங்களைச் செய்யுமாம்.

### தோஷங்களின் விஷயம்

அரிய மூவகையா யுள்ள யவனி சேய் குற்றந் தானுந்
தெரிவையர்க் குள்ள தாகில் தீங்குளாள் பர்த்தா வுக்கு
புருடனுக் கமய நில்லாள் பூவையிக் கோது மிருபால்
லிருக்கினும் மக்களின்ப மெழில் சுகம் பெருகு மென்பார். 108

(இ-ள்) இந்த விதமாகிய லக்கினம் சந்திரன் சுக்கிரன் ஆகிய மூன்று விதமுள்ள தோஷங்களில் ஏதேனுமொன்று பெண்ணுக்கிருந்து பிள்ளைக்கில்லாவிடில் அப்பெண் சீக்கிரமாக புருடனை யிழப்பாள் அவ்வாறே பிள்ளைக்கிருந்து பெண்ணுக்கில்லாவிடில் மனைவியை துரிதமாயிழப்பான் இம்மூவகையிலும் ஒன்றுக்கதிகம் ஒன்றுக்குகுறைந்து இருந்தால் குறைந்தவிடம் சற்றுகால தாமதமாயும் அன்றியும் இருவருக்கும் சமமாக விருந்தால் நீடித்தகாலம் மாங்கல்யம் மக்கள் பொருள்களோடு வாழ்வார்களென்னு முன்னோர் உரைத்தனராம்.

### இதற்குப் பரிகாரம் தேவகேரளம்

என்பதிற் தோடத்திற்கு ஏற்றதோர் பரிகாரங்கேள்
அன்புள வேழின் குற்றம் மாடுதேள் மகரம் நண்டு
இன்பமாம் மிதுனங்கன்னி யிவைகட்கே யில்லையென்றூர்
என்றூழ் சேய் பாம்புகூட எதிர் நோக்கில் தோடமில்லையே.

(இ-ள்) ஜன்மராசிக்கும் ஏழாம் வீட்டில் செவ்வாயிருக்கும் தோஷமானது மேடம் விர்ச்சிகம் மகரம் கடகம் மிதுனம் கன்னி இந்த ராசிகளிலிருக்க தோஷமில்லையாம் மேலும் தோஷம் செய்யும் செவ்வாயுடன் சனி பாம்பு குளிகனிருக்க அல்லது பார்வையானுலும் தோஷம் நீங்குமாம்.

இல்லையே யெட்டிற் செவ்வாய் யிருக்கமீன் சிலைக்கு மில்லையாம்
தொல்லையாம் பன்னிரண்டிற் துலை விட ராசிக் கேதான்
நல்லதே ரறி கும்பத்தில் நாடாதித் தோடமென்பார்
சல்லியன் குருவும் நோக்கில் சமுசயமில்லை நன்ரும். [110]

(இ-ள்) எட்டாம் வீட்டின் செவ்வாய் தோஷமானது தனுசு மீனத்திருக்கில் தோஷமில்லை பன்னிரண்டின் தோஷம் ரிடபத்துலா ராசியிலிருக்கத் தோஷமில்லை சிங்கம் கும்பம் இந்த ராசிகளுக்கு தோஷமேயில்லை சுக்கிரனுலாவது குருவாலாவது தோஷம் செய்யும் செவ்வாயை பார்ப்பாராகில் தோஷபரிகாரமாய் விடுமாம்.

நன்ருகும் மெட்டிரண்டு நான்குடனீ ராரதனில்
நின்ரும் சரராசிக்கு நிலைத்திட சேயின் தோஷம்
குன்ருத செல்வம்மக்கள் குவலய சுகங்களோங்கும்
என்றுதான் கேரளத்தில் எடுத்துரை செய்தார்தானே. [111]

(இ-ள்) எட்டு இரண்டு நான்கு பன்னிரண்டு இந்த இடங்களில் செவ்வாய் இருந்து இது சரராசியானுல் தோஷங்களில்லை தம்பதிகள் சுகமாக வாழ்வார் என்று கேரள வாக்கியம்.

### தோஷப்பிரிவு சிலர் கருத்து

தானே விரண்டுயேழும் தான்தோடம் புருடனுக்காம்
மானினி தனக்குநாளும் மாதமும் தோடமென்பார்
ஆனியா மிருவருக்கும் அட்டம மென்றேசொன்னுர்
மானிலத்திவ் வாரேபார் மகன்தோட மரிகுவீரே. [112]

(இ-ள்) சிலர் செவ்வாய் தோஷத்தை பிரித்துப்பார்ப்பது அவயசியென உரைத்தனர் அதாவது இரண்டு ஏழாமிடமே புருடனுக்கும் நான்கு பன்னிரண்டாமிடம் பெண்களுக்கும் எட்டாம் வீடானது இருவருக்கும் தோஷமென்று அநேக மாமுனிகள் வாக்கியம்.

**செவ்வாய்தோஷம் முற்றிற்று.**

# 11-வது அத்தியாயம்

## வதிஷ்டர் வாக்கியம்

### பாவங்களின் கிரகங்கள் நின்ற பலன்

### இலக்கினத்தில் சூரியன் நின்ற பலன்

ஆதவன் லக்கினத்தி லமர்ந்திட ச் சினமதுள்ளாள்
சீதள மில்லாதேகஞ் சிடுசிடுப் புள்ளவாக்கால்
மேதினி வேற்றேருண்டி மேவலாம் வியாதி துட்டை
கோதிலா மானியென்று குறித்தனர் கணித நூலோர். [113]

(இ-ள்) பிறந்த லக்கினத்தில் சூரியனிருந்தால் கடுகடுத்த குறியுள்ளமுகம் பலவித வியாதி துஷ்டசுபாவம் பலவீனம் அதிக சூடுள்ள தேகம் மானி எப்பொழுதும் பாரண்யணத்தில் ஆசை பயமில்லாள்.

### இரண்டாமிடத்துப் பலன்

நூலாதி லிரண்டல்வெய்யோன் நுழையநன் வாக்கதில்லாள்
சீலமுந் நிதியும்பத்தி செய்கையு மறியாள் கோபீ
மேலதாம் கலகமுண்டி மெல்லியாள் தரித்திரியாவாள்
ஞாலமில் நட்புமில்லா நங்கையென் றுரைப்பீர்தானே. [114]

(இ-ள்) இரண்டாமிடத்தில் சூரியனிருக்கில் நீதிவாக்கும் தனமிருந்தும் அற்பதரித்திரம் கடூரவார்த்தை பக்தியில்லாள் கலகப்பிரியம் குரோதமுள்ள குணம் மித்திரபாவமில்லாள்.

### மூன்றாமிடத்துப் பலன்

தானமே மூன்றின்பானுத் தங்கிட வியாதியில்லாள்
மானியாம் பகைவரில்லா மழ[illegible]தன் னிளையோர்ப்பீடை
தானிய சுகமுமற்பம் தனயரும் பெருத்துஉந்தி
தானமுந் நல்லபுத்தி தையலர்க் குறவாமென்றார். [115]

(இ-ள்) மூன்றாமிடத்தில் சூரியன் நிற்க தேக வியாதியில்லாள் வெட்கமுடையவள் பகைவரில்லாள் அழகி அற்பசுகி இளைய சகோதரர்களுக்கு பீடை பெருத்தவயறு புத்திரவிர்த்தி நற்புத்தியுள்ளாள்.

### நான்காமிடத்துப் பலன்

என்பாரே கதிரோன்ஞலி லேகிட சனவிரோதம்
துன்பமாம் பிணியன்தேகம் துறந்தவளு ளுறவோர்தன்னை

அன்னையுந் தந்தைக்கேதா னரிட்டமாஞ் சுகமில்லாதாள்
கன்னியும் மார்னோவுள்ளக் கபடியென் றுரைக்கலாமே. [116]

(இ-ள்) நான்காமிடத்தில் சூரியனிருந்தால் ஜனவிரோதம் வியாதியுள்ளசரீரம் பந்துக்களை துறந்தவள் சுகமில்லாள் விகாரமானபற்கள் மார்னோவு கபடமுள்ளாள் தந்தைதாயிக்கு தோஷமானவள் என்பதாம்

## ஐந்தாமிடத்துப் பலன்

உரைக்கலா மைந்தில்சோதி யுற்றிட தநயறற்பம்
நிரைக்கநன் ஞேன்பிலாசை நிரணய மில்லாபுத்தி
தரையினில் சனவிரோதம் தரித்திரம் தந்தைதோஷம்
மறையவர் வாஞ்சையுள்ள மங்கையென் றுரைசெய்வாரே.117

(இ-ள்) ஐந்தாமிடத்தில் சூரியன் இருக்க அற்பபுத்திரர் நோன்புகளில் பிரியம் பெருத்தமுகம் கவலையுற்றமனம் தாய் தந்தையர்க்கு பிரியமானவள் ஆகிலும் தந்தைக்கு அற்ப தோஷமுள்ளாள் பிராம் மணப்பிரீதி ஜனனவிரோதம் அற்பதரித்திரம் உள்ளவளாம்.

## ஆறுமிடத்துப் பலன்

செய்குவார்க் கதிரோனுறில் சேர்ந்திட வழகிகீர்த்தி
மெய்யுரைத் தருமசீலம் மேனியும் வலுத்தக்காமீ
செய்கையும் பொறுமைநல்லாள் செல்வமும் மைந்தர்மேன்மை
மெய்யரைத் தொழுவாள்நித்தம் மெல்லியா ளென்றுசொன்னர்

(இ-ள்) ஆறுமிடத்தில் சூரியன் இருக்க அழகுள்ளாள் நற்கீர்த்தி சத்துருவில்லாள் உண்மைபேசுவாள் தருமகுணம் ஆசாரமுள்ளவள் திடமானசரீரம் புத்தி பாக்கியமும் செல்வமு முடையாள் பிறரறியாக் காமீதேவப் பிராம்மண விசுவாசமுள்ளவளாம்.

## ஏழாமிடத்துப் பலன்

சொன்னதோர்ப் பரிதியேழில் சூழ்ந்திட சுகமதில்லாள்
இன்னமும் வஞ்சங்கோப மியற்றுவள் கலகம்நித்தம்
மன்னனி னின்பங்காணு மங்கையுஞ் சிலேத்தும்தேகி
நன்னய மில்லாளென்றே நவின்றன ருலகோருக்கே. [119]

(இ-ள்) ஏழாம்வீட்டில் சூரியன் இருக்க சுகமில்லாள் வஞ்சனை முன்கோபம் கலகம் செய்தல் இவ்வித கெட்டகுணங்களும் புருஷனுக்கு தோஷமும் அவள் சுகமறியாதவளும் சிலேத்துமதேகி கடுகடுத்தவார்த்தை ரூபபங்கம் உள்ளவளாம்.

### எட்டாமிடத்துப் பலன்

உலகோருக் கனலியெட்டில் உறைந்திடச் செல்வமில்லாள்
பலவித பாபகர்மம் பன்முறைச் செய்வாள் துஷ்டை
கலகமே புரிவாள் நித்தம் கவலையுள் விடத்துநெஞ்சம்
நலமில்லை யிவட்கேயென்றார் நாட்டினில் சுருதிவாக்கே [120]

(இ-ள்) எட்டாம்வீட்டில் சூரியன் நிற்க தரித்திரம் பாபகாரியங்களில் புத்தி துக்கமனுபவித்தல் பாம்பைப்போல விஷசுபாவமுடையவள் கலகப்பிரியம் கவலையுள்ளமனம் எப்பவும் சுகமில்லாள்.

### ஒன்பதாமிடத்துப் பலன்

வாக்குதான் வெய்யோன்றானும் வாழ்ந்திட பாக்கியத்தில்
ஊக்கமுஞ் செயலுமில்லை உறவினோர்ப் பகையாநித்தம்
நோக்கமும் பகைவர்பட்சம் நோவுளாள் தாதைதோஷம்
பாக்கிய மில்லையென்றே பகர்ந்தனர் முனிவர்தானே. [121]

(இ-ள்) ஒன்பதாம்வீட்டில் சூரியன் இருக்க பாக்கியமில்லாத தரித்திரம் காரியங்களில் புத்தியில்லாள் பந்துஜனங்கள் விரோதம் பகைவரிடத்தில் வாஞ்சம் எப்பவும் வியாதியுள்ளசரீரம் குருதோஷி தந்தைக்கு அற்பதோஷமுள்ளாள்.

### பத்தாமிடத்துப் பலன்

தானெனக் கதிரோன்பத்தில் தங்கிடச் செல்வமில்லாள்
மானினி யணிகளில்லாள் மதியதுஞ் சலனம் துஷ்டை
ஈனமாம் செய்கையுள்ளாள் எவரையுங் கடுத்துரைப்பாள்
மானமு மில்லாதிந்த மங்கையா ளென்றே சொன்னார், [122]

(இ-ள்) பத்தாவதுவீட்டில் பானுவிருக்க தரித்திரமும் ஆபரணமின்மையும் ஸ்திரமில்லாபுத்தி கெட்டசுபாவம் இழிவான காரியங்களைச் செய்தல் எவரையும் எதிரில்லாமல் வார்த்தையுரைப்பாள் மானவமானம் இல்லாள்.

### பதினோராமிடத்துப் பலன்

சொன்னதோர் லாபந்தன்னில் சூரியன் நிற்கவந்த
அன்னிய றுரவோர்நேசம் மகமதில் கீர்த்திவித்தை
தன்னிலை தனதான்னியங்கள் தநயருந் தந்தைசெல்வம்
மன்னனின் சுகசந்தோஷம் மனதிடம் பொறுமையென்பார்.

(இ-ள்) பதினோராமிடத்தில் சூரியனிருக்க பந்துக்களும் மற்றுள்ளோர்களும் சினேகமும் நற்கீர்த்தி வித்தை தனதான்னிய சம்பத்

துடன் வாழ்வாள் புத்திரபேறும் தந்தை வழிச்செல்வம் ராசசுகமனு பவித்தல் பொறுமை அடக்கம் நற்புத்தி இந்திரிஜயம் உள்ளவளாம்.

### பன்னிரண்டாமிடத்துப் பலன்

என்பாரே விரயந்தன்னில் ஏழ்பரி யோனுந்நிற்க
நன்பாரில் வந்தமங்கை நயமுடன் பயமுமில்லாள்
அன்பாகு முண்களெல்லா மாசார மறியாதேகம்
நன்பான பொருளும்நஷ்டம் நவின்றனர் கணிதவல்லோர்.

(இ-ள்) பன்னிரண்டாமிடமான விரயதானத்தில் சூரியனிருக்க அச்சமும் வெட்கமுமில்லாதாள் எதையும் உட்கொள்ளுவாள் ஆசார மேயறியாள் சீவமில்லாதேகம் தனவிரயம் விருப்பமில்லாள் அருந் தாத வஷ்துவேயில்லை.

## சந்திரன் பலன்

### லக்கினத்தில் சந்திரன் நின்றபலன்

வல்லரே சன்மந்தன்னில் வளர்பிறை நிற்கவந்த
மெல்லியா ளழகி நல்லாள் மேன்மையா யிருப்பாற்தேய்ந்த
எல்லிநா தனுமேயானல் இளைத்திடும் தேகம் வியாதி
அல்லலுள் ளழுக்காடைக ளணிவளென் றுரைத்தார்மெய்யே,

(இ-ள்) சனனமான லக்கினத்தில் வளர்பிறை சந்திரனிருக்க நல்ல அழகிய சரீரம் சுகத்தையனுபவிப்பாள் தேய்வுபிறை சந்திர ஞகில் வியாதியோடு கூடிய இளைத்ததேகம் அழுக்காடை களையணி தலும் மன விசாரமுள்ளவளாம்.

### இரண்டாமிடத்துப் பலன்

மெய்யென மதியிரண்டில் மேவிட பிறந்தமங்கை
மெய்மையாள் தருமஞ்செல்வம் மேவதாங் குளிர்ந்தவாக்கு
மெய்யரின் பத்தியுண்டாம் மேம்படு பதியென்றெக்கும்
தொய்யலா மென்றுமுள்ள தோகையென் றுரைத்தார்தானே.

(இ-ள்) இரண்டாமிடத்தில் சந்திரனிருக்கில் தருமபுத்தி செல்வ முள்ளாள் குளிர்ந்த வார்த்தை தேவப்பிராமண பக்தி நாளுக்குநாள் விருத்தியடையும் குடும்பம் எப்பொழுதும் மன உற்சாகத்தோடு இன்பமனுபவவிப்பாள் பொருத்தமாகிய அழகு வாய்ந்தவளாம்.

### மூன்ருமிடத்து பலன்

தானென மூன்றிலிந்துத் தங்கிட வுதித்தபெண்ணுள்
மேனியும் வாதசீதம் யிகுதியாங் குரூரவாக்கு
தானவர் செய்கைநீதி தருமமே யில்லைக்கோபீ
ஆனன விகர்ப்பமெய்யும் அழகிலா ளென்பதாமே. [127]

(இ-ள்) மூன்ருமிடத்தில் சந்திரனிற்க வாதசீதளம் மந்தவியாதி கடூரமான வார்த்தை எப்பொழுதும் மனதினில் குரோதமுடையவள் நீதியும் தருமமில்லாள் கோபக்குறியைக்காட்டும் விகாரமாய் அழகில் லாத முகமும் பாபகாரியங்களைச் செய்வதிலதிக விருப்பமுடையவள்.

## நான்காம் வீட்டின் பலன்

என்பதாம் மதியுந்நாலி லேகிட ஜனித்தமங்கை
யன்புளாள் போகபாக்கிய மணிகலந் தெய்வபக்தி
தன்பதி சுகமாம்புத்தி தருமமும் நீதியுள்ளாள்
இன்பமு முறவோர்நேசத் திழைவளென் றுரைசெய்தாரே. ()

(இ-ள்) நான்காமிடத்தில் சந்திரனிருக்க ஜனங்களிடத்தில் பிரீதி பாக்கியவிருத்தி சுகமனுபவித்தல் புதிய ஆபரணமணிதல் ஸ்திர மானபுத்தி தருமநீதியொழுக்கம் குருதேவதாபக்தி அனைவருக்கும் ஆதரவளிக்கும் கற்பினள்.

## ஐந்தாமிடத்து பலன்

தாரேச னைந்தில் நிற்கத் தையலா ளுதயமாகில்
கூறேநற் சுதருஞ்சீலம் குணமுள பெருமைவாய்ந்து
நேரேது மில்லாச்செல்வம் நிறைந்திடு மழகியாம்
கீரேநன் வாழ்க்கைஈதற்ச் செய்கையுஞ் சிறந்ததாமே. [129]

(இ-ள்) ஐந்தாமிடத்தில் தாரேசனுகிய சந்திரனிருக்க நற்குணங் களோடு கூடிய பிள்ளைகளும் ஆசாரமும் பெருமையுமுள்ள யோக் கியதையும் மனம்போல நிறைந்தசெல்வம் நல்லழகும் தானதரும குணத்தோடு கூடிய குடும்பமும் உள்ளவளாம்.

## ஆருமிடத்து பலன்

ஆமென மதியுமாறி லமர்ந்திடப் பொறுமையில்லாள்
சேமமே சிறிதுபுத்தி சலித்திடு மறியாம்நல்லோர்
பூமகட் கருணையில்லாள் புருடனுக் குற்றவாஞ்சை
நேமமு முள்ளாளென்று நிலைமையை யுரைத்தாரன்றே. [130]

(இ-ள்) ஆருமிடத்தில் சந்திரன் அமர்ந்திட அற்பகுணமும் நல்ல வர் விரோதம் பொறுமையில்லாதாள் நிலையில்லாபுத்தி லக்ஷ்மிகடாக்ஷ மறியாள் புருஷனுக்கு மாத்திரம் ஆசையுடன் அவளிஷ்டம் போன மனம்போல நடக்கும் புத்தியும் அற்ப வடிவுமுள்ளாள்.

### ஏழாமிடத்துப் பலன்

உகக்குமே களங்கனேழி லுற்றிட கற்பினில்லா
ளகத்தினில் தனதான்னியங்க ளமைந்தநற் செல்விஞானி
லகுத்திடு முண்மைவாக்கு வாஞ்சையாள் பதியின்சேவை
இகத்தினி லறமேசெய்வா ளின்பமு முள்ளாளாமே. [131]

(இ-ள்) ஏழாம்வீட்டில் சந்திரன் இருக்க பதிவிரதையாய் நற்குணங்களோடும் தனதான்னிய சம்பத்துள்ளாள் புத்திரபாக்கியம் ஞானவிர்த்தி சத்தியமானவார்த்தை சனங்களிடத்தில் அதிகபிரீதி பதிசேவைமறவாள் இல்லறத்தில் தானதருமம் செய்து சுகத்தை யனுபவிப்பாள்.

### எட்டாமிடத்துப் பலன்

உரைத்திடு சசியு மெட்டி லுகந்திட பயமு மில்லாள்
குரைந்துள வடிவாஞ் செல்வம் குறியிலாப் பணிகள் செய்வாள்
வரைந்துள றறிட்டமென்று வளருநற் றியாகி நீரில்
மறைதலால் கண்டமொன்றே மங்கையர்க்குள்ளதாமே. [132]

(இ-ள்) எட்டாமிடத்தில் சந்திரனிருக்க பயமில்லாமல் சஞ்சரிப்பாள் சிருத்தக்கண்ணும் மார்புமுள்ளாள் வியாதியுள்ளதேகம் தகாத காரியங்களைச் செய்வாள் ஆசாரஹீனம் சலகண்டமுள்ளவள் தருமத்தில் விருப்பமுள்ளாள்.

### ஒன்பதாமிடத்துப் பலன்

உள்ளதோற் றருமந்றன்னி லொளிர்மதி நிற்கஞானம்
தெள்ளிய புத்திச்செல்வம் தீங்கிலா ரூபம்மக்கள்
மல்லலு மில்லாள் சௌக்கிய மனுபவ முடநன்வாக்கு
நல்லவ ளென்றே கூறுந் மங்கையு முதித்தவாறே. [133]

(இ-ள்) ஒன்பதாம்வீட்டில் சந்திரனிருக்கப்பிறந்தவள் தருமபுத்தி ஞானி ஐஸ்வரியம் அழகு மக்களுமுடையவள் துன்பமறியாள் நல்லவார்த்தை சனங்களிடத்தில் ஓர்விதமானஅன்பு சுகானுபவமுடையாள்.

### பத்தாமிடத்துப் பலன்

உதித்ததோர் கீர்த்திதானத் துடுபதி நிற்கஉற்றார்
மதித்திட புகழுந்தர்ம மனத்தினள் புண்ணியசாலி
விதித்தநற் கருமஞ்செய்வாள் விண்ணவரோர்க்குநல்லாள்
கொதித்தலே யில்லாள்செல்வி கோதையாள் சரிதமாமே. [134]

(இ-ள்) பத்தாமிடத்தில் உடுபதியாகிய சந்திரனிருக்க உறவின ரும் மற்ரேரும் நல்லவளென்று புகழக்கூடியவள் முன்செய்த புண் ணிய வசத்தால் இப்பவும் தருமம் நற்காரியங்கள் தேவதாபூசை செய்வதால் புண்ணியசாலியென்று பலராலும் சொல்லத்தகுந்தவள் தனதான்னிய விருத்தியுள்ள பதிவிரதையென்று பேர்வாய்ந்தவள்.

### பதிஞேராமிடத்துப் பலன்

சரிதமாஞ் சசிலாயத்தில் சேர்ந்திட நீதிகீர்த்தி
நெறிதவருத நெஞ்சம் நிதியுளாள் தருமவாஞ்சை
பரிவுள உறவோர்நேசம் பயமிலா தேகசௌக்கியம்
குறிகளுங் குளிர்ந்தநோக்கும் கோதையாள் குணமிவ்வாறே.

(இ-ள்) பதிஞேராமிடத்தில் சன்திரனிருக்க நற்கீர்த்தி நீதிமொழி உண்மைமாருத மனம் தனசம்பத்து தானதர்மபுத்தி பந்துஜனங்களி டத்தில் விசுவாசம் வியாதியில்லாததேகம் குளிர்ந்த பார்வையுள்ள முகம் குறைவில்லா சௌக்கியமுடையாள்.

### பன்னிரண்டாமிடத்துப் பலன்

இவ்வாருய் உடுவின் வேந்த னிருந்திட விரயந் தன்னில்
செவ்வியுஞ் செருக்குமில்லாள் சென்றதோர் கதையுரைப்பாள்
எவ்வித பொருளு மில்லாள் ஏவலோ படபடப்பாள்.
இவ்வகை நீதியில்லாள் இருதய நோயுளாளே [136]

(இ-ள்) பன்னிரண்டாமிடத்தில் பனிமதியிருக்க தரித்திரம் சென் றகதை சங்கதிகளைச் சொல்லுவாள் ஆத்திரமானசெய்கை நீதியறி யாள் பொறுமையில்லாள் வியாதியுள்ளசரீரம் உள்ளவளாம்.

## செவ்வாய் பலன்

### ஜன்மத்தில் செவ்வாய்கின்ற பலன்

தானேசேய் லக்கினத்திற் றங்கிட விதனங் கைம்பெண்
மானியாம் பிணியுமுள்ளாள் மமதைமுற் பாவந்தன்னல்
ஆனியாம் பேதையாகி யலைவளே துன்னடக்கை
நாணம தில்லாளென்ருர் நற்கோட்கள் பார்க்கநன்றே. [137]

(இ-ள்) ஜனனமான லக்கினத்தில் செவ்வாயிருக்க எப்பொழு தும் விசனமும் பால்லியத்தில் அமங்கலி வியாதியுள்ளசரீரம் அகங் கார விருத்து முன்செய்தபாவ வசத்தால் மானியும் வறுமையாகிய தரித்திரம் வெட்கமில்லாமல் கெட்ட செய்கையுள்ளவள் சுபக்கிர கங்கள் பார்வையிருந்தால் இப்பலன்கள் தவறும்.

### இரண்டாமிடத்துப் பலன்

பார்சுத னிரண்டில்நிற்க பாக்கியம் பூமியற்பம்
நேர்சுக மில்லாள்வியாதி நிலைத்து வைதூரியாதை
தெர்தலில் லாதநெஞ்சம் துணைவனும் பகையாஞ்சற்று
ஏர்ப்பதில் எண்ணமுள்ளா ளென்பது கணிதநூலே. [138]

(இ-ள்) இரண்டாவது வீட்டில் செவ்வாயிருக்க ஆற்பதனமுள்ளாள் பூமிபாக்கியம் சற்றுவியாதி எப்பவும் மனேவிசாரம் திருப்தியில்லை பாதை அம்மை முதலிய பதியின் விரோதம் இரத்தலில் ஆசையுடையவளாம்.

### மூன்ரும் வீட்டின் பலன்

கணிதநூ லுரைத்தவாறுக் காதிடத் தாரல்நிற்க
பிணியிலாத் தேகஞ்சீலம் பெருமைநல் லுறவோர்பீரீதி
கணிகமாம்பொருள்பாக்கியங்கள்கண்ணுேயுந்துணைவர்தோஷம்
அணிதலு முடையநல்லாள் வனிபெண் சுகமதுள்ளாள்.

(இ-ள்) மூன்ருமிடத்தில் செவ்வாய் நிற்க வியாதியில்லா சரீரம் ஆசாரம் பெருமை பந்துஜனங்களிடத்து ஆசை நீடித்த மேன்மையான பாக்கியம் சகோதரவீனம் கண்ணில் வியாதி ஆபரணுதி விசேஷங்களுள்ளாள்.

### நான்காமிடத்து பலன்

உள்ளசேய் நான்கி லுற்ரு லுலகுளோர் யழிப்பார் மூர்க்கம்
கள்ளமுங் குரோதங் கோபம் கவலையாள் கணவன் தோஷம்
விள்ளுவ ளேர்க்கா தேவல் விதியென செய்வாள் நல்லோர்க்
கள்ளிடுங் குணங்கள் பெற்றக் கன்னியென் றுரைத்தார்பாரே.

(இ-ள்) நான்காம் வீட்டில் அங்காரகனிருக்க பலராலும் தூஷிக்கத்தகுந்த காரியங்களைச் செய்வாள் மூர்க்க சுவாபம் எப்பொழுதும் கோபம் குரோதம் மனக்கவலையுள்ளவள் பதிக்குத் தோஷமுள்ளாள் தருமபுத்தியுடையவளென்பதாம்.

### ஐந்தாமிடத்து பலன்

பாரென வைந்திற்செவ்வாய் பண்புட நிற்கப்பொல்லாப்
பேரதை யெடுப்பாள்செய்கை புத்திர தோஷமுள்ளாள்
நாரியு முற்கோபத்தாள் நயமிலாள் மனவிசாரம்
வீரியமுள்ளாளென்று விளம்பினர் பெரியோரன்றே. [141]

(இ-ள்) ஐந்தாமிடத்தில் செவ்வாய்னிற்க பொல்லாதவளென்று எங்கும் பேரெடுப்பாள் தயையில்லாள் புத்திரரில்லாள் இருப்பினும் கெட்ட நடவடிக்கையோடு கூடினதாம் முன்கோபீ மனத்திருப்தி யில்லாள் பாபகாரியங்களைச் செய்வாள்.

## ஆறுமிடத்து பலன்

அன்றியு மாறில்செவ்வாய் அமர்ந்திட வியாதியில்லாள்
நன்றியை மறவாள்தீயோர் நானிலத் தில்லைமிக்க
உண்டியாள் பதிவிரோதம் உள்ளதே நல்லோர்நேசம்
அண்டினோர் தன்னைக்காப்பாள் அகமகிழ் வித்தையாளே.

(இ-ள்) ஆறுமிடத்தில் அங்காரகனிருக்க நோயில்லாத்தேகம் பகைவரில்லாள் ஒருவர்செய்த உபகாரத்தை மறவாள் பதிவிரோதம் நல்லவர்கள் நேசம் அதிகமான ஆகாரங்கொள்வாள் மனம் சந்தோஷிக்கும்படியான வித்தையுடையவள் தன்னைச்சேர்ந்தவரைக் காப்பாற்றும் குணமுள்ளவளாம்.

## ஏழாமிடத்து பலன்

ஆளெனுஞ் சப்தமத்தி லாரல்குன் நிற்கப்பொல்லால்
கோளதின் குற்றத்தாலே குறுகிய ரூபம் துஷ்டை
காளையு மில்லாவறுமை கழன்கழி மடந்தையாகி
நாள்தவ ரில்லாவியாதி நங்கையு மடைவாள்பாரே. [143]

(இ-ள்) ஏழாவது வீட்டில் செவ்வாயிருக்க பாலியத்திலேயே வைதவ்வியம் கெட்டசுபாவம் குறுகிய சரீரம் தரித்திரம் புத்திரப் பேறறியாள் எப்பவும் வியாதி நற்குணத்தைக் கனவிலுமறியாள்.

## எட்டாமிடத்துப் பலன்

அடைகுவா ளெட்டிற்செவ்வா யமர்ந்திட பதிக்குத்தோஷம்
உடையவள் வியாதிதுக்கம் உவப்புளாள் தரித்திரியாகி
உடையகஞ் சீலமில்லா ளுயிர்வதைச் செய்வாட்கலகீ
நடையது விகாரஞ்நெஞ்சம் நயமிலா ளென்றுஓதே. [144]

(இ-ள்) எட்டாமிடத்தில் செவ்வாய் நிற்க பதிக்குத் தோஷமுடையவள் வியாதியுள்ள துற்பல சரீரம் தரித்திரம் துக்கம் விசனமுள்ளவள் அழகில்லாள் ஆடையும் இருப்பிடமும் சுத்தமில்லாள் சீல ஹிம்சை செய்வாள் சண்டை மூட்டுவிக்கும் சுபாவம் விகாரமான நடை கடுகடுத்த இயற்கையுடையவளாம்.

### ஒன்பதாம் வீட்டின் பலன்

ஓதிய செவ்வாய்தானு மொன்பதில் நிற்கபாக்கியஞ்
சீதன முள்ளாள்பின்பு சிதரிடும் தனம்வேற்றோர்க்குக்
கோதிலாள் நன்முகத்தாள் குடும்ப ரக்ஷணேயே செய்வாள்
மாதவ ளிறைச்சியுண்ணும் மனதுளா னென்றுசெப்பே. [145]

(இ-ள்) ஒன்பதாம் வீட்டில் செவ்வாயிருக்க ஆதியில் சீதனமான பாக்கியங்களையுடையவள் பின்பு மற்றொருவருக்கு போய்விடும் அழகியமுகம் தர்மமில்லாள் அற்பபாக்கியமடைவாள் வேற்றோர்க்கு நல்லவள் குடும்பத்தைப் பாதுகாக்கும் குணம் மதுமாம்சபக்ஷிணியாம்

### பத்தாமிடத்துப் பலன்

செப்பிய பத்திற்சேய்தான் சேர்ந்திட துன்னடக்கை
செப்பிய வாக்குக்கேளாள் சீலமும் மானமில்லாள்
எப்பவும் பிறர்மேல்நிந்தை ஏற்ப்பவர்க் கறமேசெய்யாள்
இப்புவி புதல்வரற்ப மிதமிலா மங்கையென்னே. [146]

(இ-ள்) பத்தாம் வீட்டில் செவ்வாயிருக்க கெட்ட நடவடிக்கை யுள்ளவள் சொல்வார்த்தையைக் கேட்காள் சுத்தமில்லாள் மான மில்லாள் பிறர்மேல்நிந்தையும் தூஷணேயுள்ளாள் பிச்சையிடாள் வெட்க மறியாள் புத்தியில்லாள் புத்திரபாக்கிய மற்பம்.

### பதினோராமிடத்துப் பலன்

என்னேபூ சுதனும்லாபத் தேகிட மூத்தோன் தோஷம்
நன்மதி தானதர்மம் நல்கிடும் சிந்தையுள்ளாள்
கன்னியும் தேவபத்திக் காதலன் வாஞ்சைமிக்க
நன்மொழி பலரும் வேண்டும் நங்கையென் றுரைசெய்வீரே.

(இ-ள்) பதினோராமிடத்தில் பூமி சுதனுகிய செவ்வாய் இருக்க மூத்த சகோதரருக்கு தோஷம் பரிசுத்தமான மனம் தானதருமபுத்தி தேவதாபக்தி பதிக்குப் பிரியமானவள் தனலாபமுள்ளாள் நன்மை யானவாக்கு எல்லோரிடத்திலும் பிரீதி விசுவாச முள்ளாள்.

### பன்னிரண்டாமிடத்துப் பலன்

செய்வீர்சேய்ப் பன்னிரண்டிற் சேர்ந்திட துற்குணத்தாள்
பொய்யிலாள் பசியைத்தாங்கா பொருட்செலவுள்ளாள் பர்த்தா
மெய்தாய் தோஷமுள்ளாள் மேவலாள் பிரதியில்லாச்
செய்கையு மச்சந்நாணம் செய்தியை யறியாளாமே. [148]

(இ-ள்) பன்னிரண்டா மிடத்தில் செவ்வாயிருக்க செய் நன்றி மறவாள் சற்று துர்க்குணமும் பொருள் செலவுமுள்ளவள் மது மாம்ச பக்ஷிணி பயமில்லாள் பிரீதியில்லாதவள் பதிக்கு தோஷமுடையவள் என்பதாம்.

## புதன் பலன்

### லக்கினத்தில் புதன் நின்ற பலன்

அரியநற் புதனுஞ்சன்மத் தமர்ந்திட தருமவாக்கு
பிரியமு மலர்ந்தக்கண்கள் பேதையாளழகிசாது
உறவின் ரூக்கமுண்மை யுரைத்திடுந் நற்குணத்தாள்
பரவிய செல்வமுள்ள பாவையாளவனிமிதே. [147]

(இ-ள்) ஜனனமாகிய லக்கினத்தில் புதன் இருந்தால் தருமமாக உரைப்பாள் சனவிஸ்வாசம் விசாலமானகண்கள் பெறுமை பந்துக்களுக்குப் பிரியமானவள் நல்லகுணம் உண்மையே பேசுவாள் நிறைந்த ஐஸ்வரிய முடையவளாம்.

### இரண்டாமிடத்துப் பலன்

அவனியில் புந்திரண்டா மகத்தினில் நிற்கச்செல்வம்
தவமுடை சீலம்பத்தி தானமுந் தருமவாஞ்சை
தவனுடன் சுகமுமக்கள் தான்பெரு மில்லாளென்றே
உவமையில் லாதுவாழு முத்தமி யிவள்தானென்பர். [148]

(இ-ள்) இரண்டாமிடத்தில் புதன் இருக்கப் பிறந்தபெண் செல்வம் சுத்தமான ஆசாரம் அழகிய ரூபம் தேவப்பிராம்மண பக்தி விசுவாசம் தானதருமஞ் செய்வதில் மிகப்பிரியம் பதிபக்தியுடன் புத்திர, சம்பத்துடையவளாம்.

### மூன்றுமிடத்துப் பலன்

பார்த்திட விக்ரமத்தில் பண்டிதன் நிற்கக்கற்புச்
சேர்ந்திடுஞ் செல்வயோகம் சேய்களுந் தருமபுத்தி
காத்திடும் குணமாம்போகி கணவன்சொற் றுண்டாமானி
கீர்த்தியை யுடையாளென்றே கிளத்தினர் கணிதநூலோர்.

(இ-ள்) மூன்றும்வீட்டில் புதன் இருக்கப் பிறந்த பெண் பதிவிரதை தானஞ்செய்யும் புத்தி விருத்தியுடைய செல்வம் புத்திர விருத்தியுள்ளவள் போகி தன் கணவன் சொற்படி நடக்கிறவள் அனைவருக்கும் பிரீதியாகி அண்டினவரை காக்குங் குணத்தோடு கீர்த்தியுள்ளவளாம்.

### நான்காமிடத்துப் பலன்

கணிதனுங் நாலிலாகக் கன்னியஞ் சனனமாகில்
அணியுளாள் புருடனுக்கு அன்புதங் தகத்துவாழ்வாள்
நணிருள மனதுசெல்வம் நங்கையுஞ் சுகமே உய்வாள்
பணிவளே மேலோர்தன்னை பதிவிரதையெனப்பேர்கொள்வாள்.

(இ-ள்) நான்காமிடத்தில் புதனிருக்கப் பிறந்தபெண் அழகிய ஆபரணமும் தருமபுத்தியும் புருஷனுக்கு ஏற்றபடி நடந்து சுகமடைவாள் இளமையான மனம் பிராமணப்பிரீதி பதிவிரதை எனப் பெயர் கொள்வாள்.

### ஐந்தாமிடத்துப் பலன்

கொள்வளே பிறரால்நிந்தைக் கோதுரும் பொருளாள்சற்று
விள்ளுவள் காமத்தாசை விநயமும் பொறுமைசெல்வம்
முள்ளவள் புதனுமைந்தி லுற்றிடப் புராணக்கேள்வி
பிள்ளைக ளற்பமென்றே பேசினர் பெரியோர் தானே. [151]

(இ-ள்) ஐந்தாம் வீட்டில் புதன் அமர்ந்திட ஜனனமான பெண் திரவியத்தால் சற்று வியாச்சியம் அற்பபுத்திரர் தனக்கேற்றவாறு செல்வமுள்ளவள் பெருமை பிறரால் நிந்தனையடைவாள் காமத் தாசையின் கவலை புராணாதிகள் கேட்கப் பிரியமுள்ளவளாம்.

### ஆறாமிடத்துப் பலன்

தானென புந்தியாறிற் றங்கிடப் பகைவரில்லை
மானினி பொறுமை செல்வம் மக்களுங் நன்றியுள்ளாள்
சீனியாம் சிற்றின்பத்தாள் சிறந்திடுங் நீண்ட வாயுள்
ஞானமுங் கல்வியுள்ளாள் நானிலத் துதித்ததாமே. [152]

(இ-ள்) ஆறுவது வீட்டில் புதனிற்க அவதரித்தமங்கை பகைவரில்லாதவள் செல்வம் நிறைந்த பொறுமையுள்ளாள் பூர்ணமான ஆயுள் சிற்றின்பத்திலதிகவாசை பரோபகாரம் ஜனங்களிடத்தில் பிரியம் நல்ல ஞானமும் கல்விபாக்கிய வித்தையுமுடையவள்.

### ஏழாமிடத்து பலன்

மாதுதா னுயர்ந்ததேகம் மதிமக னேழில்நிற்கக்
கோதொன்று மறியாநல்லக் குணமுடன் வாஞ்சையுள்ளாள்
நீதியோ டுறைக்கும்வாக்கு நிதியுடன் கீர்த்திவாய்ந்துக்
காதல னுசைசாஸ்திரக் காரண மறிவாள்ருனே. 153]

(இ-ள்) ஏழாவது வீட்டில் புதனிருக்க பிறந்தவள் உயர்ந்து பெருத்தசரீரம் உண்மையையுரைப்பாள் குற்றமில்லாத நல்ல குணங்களோடும் செல்வம் கீர்த்தி சாஸ்திர விசுவாசம் புருஷனிடத்தில் பிரியமுடையவள்.

### எட்டாம் வீட்டின் பலன்

அறிவளே புந்திஎட்டி லமர்ந்திட நல்லசீலம்
நெறியுளாள் தருமமில்லா நேர்மையுஞ் ஜனவிரோதம்
புரிவளே வதிகவாசை பூவையுந் நாணமிக்காள்
துரிதமாம் வாதநோயால் துன்பமுள்ள தேகியாம். [154]

(இ-ள்) எட்டாவது வீட்டில் புதனிருக்க நல்லாசாரமுள்ள மானியாயும் நீதியைப்பெற்றும் தருமமில்லாள் சனவிரோதி அதிகவாசை வெட்கமுடையவளாம்.

### ஒன்பதாம் வீட்டின் பலன்

தேகியாம் பணிகள்பூண்டுத் தெய்வமு மறவாள்நித்தம்
யோகியாம் பாக்கியத்தில் புந்தியுந் நிற்கநல்லா
ளாகியே அன்பனேடு அறமதை செய்வாள்சற்று
மாகரி நடை குணங்கள் மங்கையும் பெறுவாளாமே. [155]

(இ-ள்) ஒன்பதாம் வீட்டில் புதனிருக்க சத்காரியங்களைச் செய்வாள் புருஷனேடு நற்செல்வங்களும் தாமத குணமும் ஆபரண விசேஷங்களும் யானைபோல நடைகுணமுள்ளவள்.

### பத்தாம் வீட்டின் பலன்

பெருவள்நன் விநயஞ் செல்வப் பேரொடு சத்தியவாக்கு
அருணனும் பத்தில்நிற்க வடைவளே பொறுமைகற்பு
குருதேவ பக்தியுள்ளாள் கோரிய படியேசெய்வாள்
பரதேச வாசஞ்செய்யும் பாவையென் றுரைசெய்வீரே. []

(இ-ள்) பத்தாம் வீட்டில் புதனிருக்க பிறந்தபெண்மணி நல்ல வாஞ்சையும் செல்வமும் நற்கீர்த்தி உண்மையையுரைப்பாள் பொறுமை பதிவிரதை குருவினிடத்தும் தேவர்களிடத்தும் அதிக விசுவாசம் புருஷனுடைய இஷ்டம்போல் நடப்பவள் அன்னியதேசத்தில் வசிப்பவளாம்.

### பதினோராம் வீட்டின் பலன்

செய்யலா பத்தில்புந்தி சேர்ந்திட தனலாபங்கள்
மெய்யுரை யுற்றூர்நேயம் மேதினி கீர்த்திசீலம்

தையலாள் கற்புமிக்க தநயரும் பொறுமையுள்ளாள்
வையகம் புகழவாழும் வனிதையென்றுரைத்தார் நூலோர்.

(இ-ள்) பதினோராம் வீட்டில் புதன் இருக்க ஜனித்த மங்கையானவள் ஜனங்களிடத்தில் விசுவாசமும் பாக்கியமும் விசேஷபொருள் லாபம் நல்ல ஆசாரம் பதிவிரதை பந்து ஜனங்களிடத்தில் நேசம் புத்திரப்பேறும் பொறுமை நற்கீர்த்தி வாய்ந்தவளாம்.

## பன்னிரண்டாமிடத்துப் பலன்

நூலதில் மதிமகன்றன் னுழைந்திடப் பன்னிரண்டிற்
சாலவே உரத்ததொண்டை சாகசம் வலுவில்தேகம்
நீலியா மின்மைத்தியாகி நிலைத்திடுங் கலகக்காரீ
காலம தரியாளெங்கும் கழறுவாள் பலவான்வாக்கே. [158]

(இ-ள்) பன்னிரண்டாம் வீட்டில் புதன் இருக்கப் பாரில்வந்த பெண்ணுக்கு தரித்திரம் உரத்தகுரல்கலகக்காரி வலுவில்லாததேகம் தருமபுத்தி சமயமில்லாமல் எல்லாருடனும் வார்த்தை சொல்லுவாள்.

## குருவின் பலன்

### முதல்வீட்டின் பலன்

வாக்குதான் சீவன்சன்ம வளவினி லிருக்கச்சாது
பாக்கியம் பொறுமைநல்லாள் பலரிடம் பிரியம் கற்பில்
நோக்கமுந் தருமபுத்தி நுவலுவள் சத்தியத்தை
ஊக்கமாம் பதியின்சேவை உத்தமி யென்றுசொல்லே. [159]

(இ-ள்) ஜனனமான லக்கினத்தில் குருவிருக்க அழகியசரீரம் எல்லார்க்கும் பிரியமானவள் பாக்கியமுள்ளாள் பொறுமை பதி விரதை விரிந்த நேத்திரம் தருமநிலை தவருள் உண்மையே பேசுவாள் அன்னதானத்தில் பிரியமானவளாம்.

### இரண்டாம் வீட்டின் பலன்

சொல்லவு மிரண்டாம் வீட்டிற் சுரகுரு விருக்கநீதிச்
செல்வமும் மனசந்தோஷம் சேய்களுஞ் சுகங்களுண்டு
நல்லவள் புராணகேள்வி நாதனைப் பிரியாள்நித்தம்
கொல்லெனச் சிறியாள்தேவ குருவிசு வாசமுண்டே. [160]

(இ-ள்) இரண்டாம்வீட்டில் குருவிருக்கதனமுள்ளவள் சுத்தமான சரீரம் அழகிய முகம் கண்ணுடையவள் தேவதா குருபூசையில் விசு

வாசம் புத்திரவிருத்தி சுகம் பூரணுதிகள் கேள்வி கணவனைப் பிரி யாப்பிரீதி அயலாரிருக்க சிறியாள் எப்பவும் மனச்சந்தோஷத் தோடு கூடினவளாம்.

### மூன்ரும் வீட்டின் பலன்

உண்டென பொன்னேனங்கு உற்றதோர் மூன்றிலாகக்
கண்டிடுஞ் சோதரர்ப்பம் கணவனுங் கடுமையாகும்
கண்ணியர் தனமுமில்லை கவலேயே கருத்திலாகும்
புண்ணிய சீலமுள்ளப் பூவையென் றுரைசெய்தாரே. [161]

(இ-ள்) மூன்ரும் வீட்டில் குருவிருக்க அற்ப சகோதரம் கடுர குணமுள்ள கணவன் பெருமையுள்ளாள் தனமில்லாள் கவலையுள்ள மனம் பூர்வ புண்ணியத்தால் செல்வமும் போகமும் பந்துஜனப் பிரியமுள்ளாள்.

### நான்காம் வீட்டின் பலன்

செய்தனர் வேந்தன்நாலில் சேர்ந்திட உதித்தபெண்ணுள்
மெய்தனில் நாணமுள்ளாள் மேம்படுஞ் செல்வம்புத்தி
பொய்யதை யறியாள்நித்தம் போகியாம் வித்தைசீலம்
தொய்யலா ளீன்ருளுக்குத் தொடுப்பளே சுகங்கள்தாளே,

(இ-ள்) நான்காம் வீட்டில் குருவிருக்கப் பிறந்தபெண் நல்லழகு தேகத்தில் வெட்கமும் நல்ல புருஷனேடு கூடியபோகம் விருத்தி யுள்ள ஐஸ்வரியம் நன்னடக்கையான புத்தி உண்மையையுரைத் தல் ஆசார ஒழுக்கம் பிறந்தவிடம் செல்வமுள்ளவள்.

### ஐந்தாம் வீட்டின் பலன்

தானென வைந்திற்பொன்னேள் தங்கிட புதல்வருள்ளாள்
தேனெனும் மொழியாள்கற்புத் தெரிந்தவள் நன்றிமாருள்
மானிலத் தேவர்பூசை மறந்திடாள் தருமவாஞ்சை
ஞானினியென் றணைவறேற்றும் ஞாபகம் மூட்டுவாளே.

(இ-ள்) ஐந்தாம் வீட்டில் குருவிருக்க சந்தான விருத்தி இனிமை யான வார்த்தையுரைத்தல் பதிவிரதா தருமத்தையறிந்தவள் பிறர் செய்த உதவியை மறவாள் ஜனங்களுக்கு அனுகூலமாக விரதம் பூசைகளைச் செய்பவள் தருமத்திலே புத்தி பலவிஷயங்களையும் எடுத்துரைப்பாள்.

### ஆறும் வீட்டின் பலன்

ஊட்டுவ ளாறில்வேந்தனுகந்திட பன்நூற்கேள்வி
பூட்டுவாள் சாத்திரத்தின் புனிதமாம் மேற்கேட்டன்னைக்
காட்டுவாள் கண்டதைப்போல் கருத்தினைக் கவரும்மெய்யாள்
நாட்டினிற்ப் புதல்வறெுன்னுர் நவின்றனர் ரோகியென்றே.

(இ-ள்) ஆறும் வீட்டில் குருவிருக்க அனேக சாத்திரங்களைத் தெரிந்தவள் நயமான வார்த்தை சாத்திரத்தின் கருத்தை தெரியச் சொல்லி விசேஷ உரையையுரைப்பாள் அரும்பதங்களை அறிந்ததைப் போல் சொல்லுவாள் பிறர் மனக்கருத்தை அறியுந்தன்மையும் புத்திரர்கள் அற்பப்பகையாம்.

### ஏழாம் வீட்டின் பலன்

என்றனர்ப் பொன்னேனேழி லிருந்திடத் துலதேசி
நன்றியும் வாஞ்சையுள்ளாள் நவிலுவாள் நீதிபத்தி
குன்றிடா திருக்குங்கீர்த்திக் கொழுனனுக் கன்பாள்காமி
கன்றுகா லிகளுமுள்ளக் காந்தையாட்ச் செல்வியாமே.

(இ-ள்) ஏழாம் வீட்டில் குருவிருக்க உயர்ந்து பெருத்தசரீரம் பிறர்செய்த உபகாரத்தை மறவாள் ஜனங்களிடத்தில் விசுவாசமுள்ளவள் புண்ணியஞ் செய்தவள் சாஸ்திர விசாரணையாலறிந்த பத்தியும் நீதியும் உரைப்பாள் நற்கீர்த்தியும் புருஷனுக்குப் பிரியமுள்ளவள் சுரத்தில் ஆசையும் பசுதன விருத்தியுமுள்ளவள்.

### எட்டாம் வீட்டின் பலன்

செல்வியர் மமைச்சனெட்டிற்ச் சேர்ந்திட நாணஞ்சீலம்
வல்வினை போக்கும்மானி வறுமையா ளற்பவாயுள்
கல்வியுஞ் சுகமுமீனங் கன்மியாஞ் சனவிரோதி
நல்வழி யறிந்துஞ்செய்யாள் நசைமிகக் கொண்டமாதே.

(இ-ள்) எட்டாம் வீட்டில் குருவிருக்க வெட்கம் ஆசாரம் கர்மத்தையொழிக்கும் காரியம் செய்வாள் மக்களும் ஆயுளும் அற்பம் தரித்திரம் வித்தையும் சுகமில்லாள் முன்ஜன்மத்தில் செய்த கர்மபயன் ஜனங்களிடத்தில் பகை [illegible]ன்மார்க்கத்தைத் தெரிந்தும் செய்யாள் எல்லாரிடத்திலும் பழியை யடையவளாம்.

### ஒன்பதாம் வீட்டின் பலன்.

கொண்டதே சிகனுமொன்பான் குவலயந் தன்னைச்சேர
மண்டலம் புகழப்பெற்ற மடந்தையாம் பதிக்குநல்லாள்
தொண்டரை காக்குங்கெஞ்சம் துரிதம தில்லாள்செல்வி
மண்ணோடு பொன்னுமுள்ள மங்கையென் றுரைசெய்தாரே.

(இ-ள்) ஒன்பதாம் வீட்டில் குருவிருக்க லக்ஷ்மியைப்போல் விளங்கும் ஆயுசும் எல்லோரும் நல்லாளென்றுரைக்கத்தக்கவள் புருஷனுக்கு பிரியம் அண்டினுவரை ஆதரிக்கும் அன்பும் தேவப்பிராமணர்

களிடம் வாஞ்சையும் மதயானையைப்போல் நடை பூமிதன செல்வங்களுள்ளவளுமாம்.

### பத்தாம் வீட்டின் பலன்

செய்யபொன் பத்திலாகச் செல்வியா முண்மைகீர்த்தி
தையலாள் பொறுமைநல்லாள் தானமுந் தரணிலாபம்
அய்யமில்லாத தீர்க்க வாயுளுமுள்ளாள் மானி
செய்குவாள்நற்காரியங்கள் சலிப்பில்லாதிருப்பாள்தானே.

(இ - ள்) பத்தாம்வீட்டில் குருவிருக்க அழகும் பாக்கியம் நற்பேரும் உள்ளவள் ஜனங்களுக்கு திருப்தியான காரியங்களைச் செய்வாள் பொறுமை தானதருமத்தில் புத்தி பூமி தனலாபமுள்ளவள் பூர்ணவயது வெட்க முள்ளவளுமாம்.

### பதினோராம் வீட்டின் பலன்

தானவ ரென்னூர்வேந்தன் றங்கிட லாபந்தன்னில்
மானியாங் கற்புகீர்த்தி மக்களுங் குணமுந்நன்ரும்
தானியங் செல்வமீகை தழைத்திடுஞ் சிற்பவித்தை
தேனினி மொளியாளுண்மை தெரிந்தநங்டக்கையாளே.[169]

(இ - ள்) பதினோராம் வீட்டில் ராக்கர்களுக்கு பகைவரான தேவர்களின் குருவாக்கிய பிரகஸ்பதி இருக்க வெட்கம் நாணமுமுள்ள பதிவிரதையென கீர்த்தியும் நற்குணங்களமைந்த புத்திர பாக்கியம் தனதான்னியச் செல்வமும் சில்பவித்தையில் அதிக தேர்ச்சியும் கேட்கத்தகுந்த இனிமையான வார்த்தையும் ஆசாரமுள்ள நடக்கையுள்ளவளாம்.

### பன்னிரண்டாம் வீட்டின் பலன்

ஆளெனும் பன்னிரண்டி லரசனு மிருப்பானுகில்
ஏளனத் திடமாம்புத்தி யீனமாஞ் சீலமில்லாள்
நாளொரு வியாதிதேகம் நாட்டமா மயலார்வீட்டில்
கொளினுல் குற்றமென்றே கூறினர் கணிதநூலோர். [170]

(இ - ள்) பன்னிரண்டாம் வீட்டில் குருவிருக்க எவரையும் ஏளனஞ் செய்யல் நிலையில்லாத அற்பபுத்தி குலசாரம் தவறுவாள் எப்பொழுதும் ரணபாதை முதலான வியாதிகளுள்ள சரீரம் அன்னியர் வீட்டில் வசிப்பாள் கெட்ட நடவடிக்கை இவையெல்லாம் முன்செய்த வினைப்பயனும்.

### சுக்கிரன் பலன்

### இலக்கினத்தின் பலன்

நூலது மழைக்கோள்சன்மந் நுழைந்திடச் செல்வியாம்நற்
கோலமுள் ளுடலுஞ்சீலம் கோதையாள் வாஞ்சையுள்ளாள்

மேலதாம் வித்தைநல்லோர் மேவலும் புகழும்பெற்ருள்
சாலவும் நல்லாளென்றே சாற்றிஞ ரிருடியோர்கள். (179)

(இ - ள்) ஜனனமான லக்கினத்தில் சுக்கிரன் இருக்க பாக்கியவதி நல்லபுத்தி அழகு பொருந்திய சரீரம் ஜனங்களிடத்தில் விசுவாசமுள்ளவள் நல்லவித்தை பெரியோர்களுடைய பிரீதியான கருணைக்கு பாத்திரமானவள் நல்ல ஆசாரமு முள்ளவளாம்.

## இரண்டாம் வீட்டின் பலன்

இருடிக ளுறைத்தவாரு இரண்டிற் சுக்கிரனேநிற்கத்
தருமமுஞ் செல்வம்புத்தித் தன்னிலே யறியுஞ்ஞானம்
பொறுமையோ டகமகிழ்ச்சிப் பொருந்திய நடையுமந்தம்
மருவிலா வதனகாந்தி மழைமதியென்றே சொல்வாம். [172]

(இ - ள்) இரண்டாம் வீட்டில் சுக்கிரன் இருக்க தருமபுத்தி பாக்கிய முள்ளாள் சகல காரியங்களும் வெகு நாகரீகமாகச் செய்பவள் வேதாந்த விசாரமுள்ள ஞானம் பொறுமை குளிர்ந்த மனம் சந்தோஷம் அழகிய நடையுமுடையவளாம்.

## மூன்ரும் வீட்டின் பலன்

சொல்லிய புகருமூன்றிற் சுகித்திடத் துணேவர்பெண்ணும்
நல்லதோர் வசனம்கோபம் நடத்துவள் பணிகள்மேலாம்
நல்லலங் காரமுள்ளாள் நாயக ளன்புமிக்காள்
மெல்லியா ளிறக்கஞ்செல்வி மேன்மையா யிருப்பாளாமே. []

(இ - ள்) மூன்ரும் வீட்டில் வெள்ளிநின்றிட தனக்குப்பின் பெண் சகோதரமும் இனிமையான வார்த்தை சில சமயங்களில் கோபமும் தன் குலத்திற்கு உயர்ந்த காரியங்களைச் செய்தல் எப்பொழுதும் அழகோடு கூடி தன் நாயகனுக்குப் பிரியமானவள் ஜனங்களிடத்தில் அதிக விசுவாசமுள்ளாள்.

## நான்காம் வீட்டின் பலன்

இருப்பது வெள்ளிநான்கி லிகசுகஞ் செல்வமுள்ளாள்
விருப்பமா முறவோருக்கு வேடிக்கைக் கதைகள்சொல்வாள்
மரப்பில்ல தறிவுகானம் மாடமாளிகையாங் கீர்த்தி
தரிப்பளே வித்தைமிக்கத் தையலாள் பிரசங்கியாவாள். [174]

(இ - ள்) நான்காம் வீட்டில் சுக்கிரனிருக்க பலவித சுகமும் பாக்கியமுள்ளவள் எப்பொழுது ஜனக்கூட்டத்தில் வேடிக்கையான கதைகளைச் சொல்லுவாள் மறதியில்லாதவள் சங்கீதம் தெரிந்தவள் மேல்மச்சிவீடுள்ளவள் நல்லகீர்த்தியை பெற்றவள் தருமபுத்தி பொறுமையான மனமுடையவளாம்,

## ஐந்தாம் வீட்டின் பலன்

ஆவலாள் பொறுமை வெள்ளி யைந்தினில் வடிவதுள்ளாள்
தாவியே யுரைப்பதுண்மை தனித்தவள் குடும்பிமேலாள்
காவியு கதைகட்குச்சொல்லும் கன்னியைப் பெருவாளின்னும்
மேவலாய்த் தனமுமில்லம் மிகயடைத் திடுவள்ருனே. [175]

(இ - ள்] ஐந்தாம் வீட்டில் அசுரகுருவிருக்க சாதுகுணம் அழகிய ரூபம் பெண்சந்ததியும் உண்மையே யுரைப்பாள் நல்லகுடும்பத்தாள் புராணகேள்வி யுள்ளவளாம்.

## ஆரும் வீட்டின் பலன்

தானதா முசனறுறிற் றங்கதுன் நெஞ்சங்கோபீ
மானியாம் வறுமையில்லம் மறல்பதி சுதர்கட்டம்மோ
டீனமாம் வாக்குரைப்பா ளிழுகுலந் துறவுபூண்டு
மானிலப் பழிசுமக்கும் மடந்தையென் றுரைத்தாற்மேலோர்.

(இ - ள்) ஆரும் வீட்டில் சுக்கிரன் அமர்ந்திருக்க சற்று துரோக புத்தி கடுமையான நெஞ்சம் முன்கோபம் தரித்திரம் புருஷன் பிள்ளைகளோடு கலகம் இழிவான வார்த்தை சொல்லல் அற்பஜனங்களின் நேசம் வீண்பழிக் கொள்வாள்.

## ஏழாம் வீட்டின் பலன்

மேலதா யேழில்வெள்ளி மேவிட வித்தைநல்லாள்
சீலமு மன்புமேலோர் சேர்க்கைநன் னீதிகற்ருள்
ஞாலமில் பதியோடென்றும் நெறிதவ ருதகீர்த்தி
கோலமுள் தருமநெஞ்சம் கொண்டநன் மங்கையென்ருர்.

(இ - ள்) ஏழாம் வீட்டில் சுக்கிரன் இருக்க நல்லவித்தையும் நல்லவளென்று கீர்த்தி ஆசாரமும் தேவதாகுரு பெரியோர்களிடத்தில் விசுவாசமும் புருஷனுக்கு பிரியமும் தருமபுத்தி பாக்கியமு முடையவளாம்.

## எட்டாம் வீட்டின் பலன்

என்றனர்க் கவியுமெட்டிலேகிட மூர்க்கவண்மை
நன்றியை நினையாளின்னுங் நல்லவர்ப் பகையேகொள்வாள்
கன்றுகா லிகளுமாயுள் கணவனுஞ் செல்வமுள்ளாள்
குன்றிடாச் சுகங்களைகத்தக் கோதையா ளுலகில்நல்லாள்.

(இ . ள்) எட்டாம் வீட்டில் சுக்கிரன் இருக்க சற்று மூர்க்கசுபாவம் செய்த உபகாரத்தை நினைக்காள் நல்லோரெல்லாம்பகையாவார்.

தன்வார்த்தைக்கு எதிர்கூடாது தாக்ஷிண்ணிய மில்லாள் பசுதன செல்வமும் கணவன் சுகமனுபவித்தலிலும் மிக்கச் சிறந்தவள் தருமத்தை அறியாள்.

### ஒன்பதாம் வீட்டின் பலன்

நல்லவ ளுகிவெள்ளி நவமதி லிருக்கமேன்மை
மெல்லியாள் வடிவுள்வாமம் மேம்படுங் கல்விசெல்வம்
நல்லதோர் குடும்பம்மேலாம் நவமணி பணிகள்பூண்பாள்
புல்லறி வறியாள்நித்தம் புகலுவாள் தருமவாக்கே. [179]

(இ - ள்) ஒன்பதாம் வீட்டில் சுக்கிரனிருக்க குடும்பத்தில் சிரேஷ்டமானவள் பலவிதமான ஆடையாபரணங்களை தரிப்பாள் சுகமான புசிப்பு அழகிய துடையும் அன்பு மிகுநடையும் தரும புத்தி நன்நீதி வித்தை செல்வமுள்ளவள்.

### பத்தாம் வீட்டின் பலன்

வாக்கெனும் மழைக்கோள்பத்தாம் வளவினிற நிர்க்கமேன்மை
ஊக்கமாந் நற்காரியத்தில் உலகமும் புகழகற்பாள்
பாக்கியம் பலிக்குஞ்சாது பண்புநல் லறத்திஞேக்கம்
நீக்கிடாள் நல்லோரேவல் நிரணயங் கொண்டமாது. [180]

(இ - ள்) பத்தாம்வீட்டில் சுக்கிரனிருக்க மேலோர்கள்புத்தி நல்ல காரியங்கள் செய்வதில் பிரியம் நன் நட க்கையென உலகம் புகழும் பதிவிரதை பாக்கிய சுகமுடன் பொறுமைக்கொண்ட தான தரும புத்தியில் சிறந்தவள் பெரியோர்கள் உரைத்த காரியத்தைச் செய்வாள்.

### பதிஞேராம் வீட்டின் பலன்

மாதினுக் கவிதான்லாப மனைதனில் வாழவித்தைக்
கோதிலா கற்றசாந்தம் குணமுள வழகிநல்லாள்
நீதியாய் பலஊர்வாசம் நிலதனலாப முள்ளாள்
போதநன் நடக்கைப்பெற்ற புண்ணிய தவத்தளாமே. [181]

(இ - ள்) பதிஞேராம் வீட்டில் சுக்கிரனிருக்கப் பிறந்தபெண் நல்லவித்தையை கற்றதாலுண்டான பொறுமையும் நற்குணம் அழகு தனமும் பூமியும் லாபமுள்ளாள் அனேக ஊர்களில் வாசஞ் செய்பவள் நன்நடக்கையுள்ளவளாம்.

### பன்னிரண்டாம் வீட்டின் பலன்

ஆமிது பன்னிரண்டி லரசுயமந்திரியுமாகத்
தாமெனு வன்நெஞ்சத்தாள் தரித்திரங் கொடுமைவாக்குச்

சாமியு மில்லையென்பாள் சற்சனருளவு கொள்ளாள்
பூமியில் ரோகிநித்தம் புரிகுவள் கொடுமையென்றார். [182]

(இ - ள்) பன்னிரண்டாம் வீடான விரயத்தானத்தில் சுக்கிரன் இருக்க தானெனும் அகங்காரத்தைக்கொண்ட மனம் குரோதத்தோடு கூடிய வஞ்சகவார்த்தைகளும் தரித்திரம் கெட்ட சுபாவம் தெய்வமில்லையென்ற சாதனை புத்தியின்மை ஆசையால் பொருள் நஷ்டம் பரபுருஷ ராசையும் எப்பவும் வியாதியுள்ள சரீரமுமுள்ள வளாம்.

## சனிசார பலன்

### லக்கினத்தின் பலன்

என்றுசே யுதயமாக ஏறுமாருகுந் நெஞ்சம்
நன்றிலை சிலேத்மரோகி நாடிடா கீர்த்தியென்றும்
குன்றிய உறுப்புள்தேகம் குறைந்ததுன் விழியாள்பேதை
மன்றல்செய் கிழவன்றன்னை மானிலத் துதித்தமாதே. [183]

(இ - ள்) லக்கினத்திலே சனியிருக்க திரமில்லாபுத்தி சிலேத்தும சம்மந்தவியாதியுடைய தேகம் கீர்த்தியில்லாதவள் அவயவக் குறைவுகுறளை மந்தமான கண்கள் கிழமனை மணஞ்செய்வாள்.

### இரண்டாம் வீட்டின் பலன்

மாதினுக் கிரண்டில்மந்தன் மறைந்திட வறுமையாகிக்
கோதுருங் குணமும்மாயங் குயிறுவா ளச்சமில்லாள்
மேதினித் திரிவாளென்றும் மிகுந்திடு மறியாநோயாள்
சாதனை மிகவேசெய்வாள் சார்ந்திட உறவோரிலையே. [184]

(இ - ள்) இரண்டாம் வீட்டில் சனியிருக்க தரித்திரம் ஆதாரமான மனிதரில்லை பயமில்லாள் கெட்ட சுபாவமுள்ளவள் பொய் சொல்லுவாள் கண்டவிடந்திரிவாள் சாதனை சாதிப்பவளாம்.

### மூன்றும் வீட்டின் பலன்

இல்லைமூன் லதனிர்காரி யிருந்திடத் துணைவர்க்காணுள்
வல்லமை கீர்த்திவாய்ந்து வளவிற்நற் குழலிதோன்றும்
எல்லவரிடத்திலாசை ஏழைகட் கிடுவாளென்றும்
நல்லவ ளென்றுநாமம் நாட்டினி லுரைக்கவாழ்வாள். [185]

(இ - ள்) மூன்றும் வீட்டில் சனியிருக்க சகோதரர் அற்பம் சாமர்த்தியம் புகழ் கீர்த்தியும் பெற்றவள் சந்ததிவிர்த்தி ஜனங்களுக்குப் பிரியமானவள் ஏழைகளை கார்க்கும் குணம் பொறுமை அற்பமூர்க்க சுபாவமுள்ளவளாம்.

### நான்காம் வீட்டின் பலன்

வாழ்வது சனியேநாலில் வனசநீர் மதியாம்பாரில்
தாழ்வுள செல்வமின்பம் தன்னிலே யுறுதியில்லாள்
கேள்வியும் வேற்றோராகும் கெடுதிதாய் வழியாருக்கு
பேழ்விலாள் சிறியோர்நேசம் பெரிதெனப் புகலுவாரே.[186]

(இ - ள்) நான்காம் வீட்டில் சனியிருக்க புத்தியில்லாள் மானி செய்நன்றி மறவாள் சுகக்குறைவு செல்வமில்லாள் சஞ்சலமான மனது தாய்வழியோர்களுடன் விரோதம் சில நஷ்டம் நாகரீக மில்லாள் நீச சன சேர்க்கையுடையவளாம்.

### ஐந்தாம் வீட்டின் பலன்

புகலுவா ரைந்தில்நீலன் புக்கிட நன்றியில்லா
லிகழுவாள் மாந்தர்தன்னை இவள்நடை கணிகையென்பார்
அகமதி லீன்றோர்தானு மனுபவித் திடுவர்நோயால்
சகலமு மறிந்தார்ப்போல சாதிப்பாள் புதல்வரிலேயே. [187]

(இ - ள்) ஐந்தாம் வீட்டில் சனியிருக்க ஒருவர் செய்த உபகாரத்தை நினையாள் அபிமானி ஜனங்களை யிகழ்ச்சியாய் பேசுவள் தாசியைப்போல் நடவடிக்கையாள் பெற்றோர்க்கும் தனக்கும் வியாதியுள்ளவள் பெரியோர்களை மதியாள்.

### ஆறாம் வீட்டின் பலன்

இல்லையே ஒன்னார்மந்த நிருந்திட வாறில்நித்தம்
நல்லவள் பதிக்குமிக்க நற்குண வதியாங்கற்பில்
வல்லவள் சேய்களுள்ளாள் வாஞ்சையோ டிருப்பாளென்றும்
புல்லறி வறியாளென்றே புகன்றனர் கணிதநூலோர். [188]

(இ - ள்) சனி ஆறில் இருக்க பகைவரில்லாள் நற்குணத்தோடு கூடிய புருஷனுக்குப் பிரியமானவள் பதிவிரதை புத்திரபாக்கியமுள்ளாள் சற்று மந்தகதியானவள் நல்ல வஸ்திராபரணமணிவாள் ஜனங்களிடத்தில் விசுவாசமுள்ளவள்.

### ஏழாம் வீட்டின் பலன்

நூலினிற் முடவனேழில் நுழைந்திட வாலிபத்தில்
நூலதை யிழப்பாளன்றி நூதன பதியைச்சேர்வாள்
நீலியாம் துர்க்குணங்கள் நிறைந்துறச் செய்கையுள்ளாள்
கோலம தரியாரோகிக் கொள்வளே சுவிகைமாதே. [189]

(இ - ள்) ஏழாம் வீட்டில் சனியிருக்க வாலிபத்திலே அமங்கலியாகி அல்லது பதியால் விடப்படுவாள் எப்பவும் வியாதியுள்ளவள்

பரபுருடனிச்சையுள்ளாள் பலவிதமான குற்றமுள்ள காரியங்களைச் செய்வாள் சாதனை சாதிப்பாள் ஆசாரசீலம் அறியாள் போதை வஸ்துக்களை பிரியமுடன் கொள்ளுவாளாம்.

### எட்டாம் வீட்டின் பலன்

மாதுதன் னட்டமத்தில் மந்தனு றிருக்கதுட்டிக்
கோதுங் குணங்கள்செய்கை கொழுநனுங் நிலையாலோபி
நீதுளக் கருமமாயைத் தீப்பழி யுள்ளநங்கை
வேதனை யுடையாளென்று வேதநா லுரைத்தவாறே. [180]

(இ - ள்) எட்டாம் வீட்டில் சனியிருக்க லோபி கெட்டசுபாவம் பலவித துற்குணங்கள் சீக்கிரத்திலே அமங்கலியாவாள் கெட்ட காரியங்களையே பலதரம் செய்வாள் துர்மாக்கியெனப் பேரெடுப் பாள் வஞ்சனையுடையவள் அழுக்காடை அணிபவளாம்.

### ஒன்பதாம் வீட்டின் பலன்

வாறெனும் முடவனென்பான் வளவினிற் நிற்கயில்லாள்
மீறிய வாசைதுக்கி மிகுந்திட தந்தைக்கீனம்
காரிகை விரயமுள்ளாள் கனவிலுங் நினையாள்வித்தை
பாரினிற் புதல்வரற்பம் பயமிலா வனிதையென்பார். [191]

(இ - ள்) ஒன்பதாம் வீட்டில் சனியிருக்க தரித்திரம் அதிக மானது ஆசைகொண்டவள் தந்தைக்கு வியாதி திரவியச் செலவு அதிகம் வித்தையில்லாள் அற்பசுதர்களுள்ளவள்.

### பத்தாம் வீட்டின் பலன்

என்பதோர் காரிபத்தி லிருந்திடத் தீச்செயல்கள்
இன்பமாய்ப் புரிவள்துட்டி ஏறுமா றுடுமுள்ளம்
அன்பொடு வழகுசெல்வ மறிவது மில்லாளாகி
பன்முறை யுரைத்துங்கேளா பாங்கியென் றுரைத்தார்தானே.

(இ - ள்) பத்தாம் வீட்டில் சனியிருக்க கெட்டகாரியங்களைச் செய்யவிருப்பம் துஷ்டநடவடிக்கை எதிர்மாறுடுவள் பிரியம் அழகு செல்வம் வித்தை இவைகளொன்றுமறியாள் விசனமுள்ளாள் பிறர் உரைக்கும் நன்மையைக்கேளாள்.

### பதினோராம் வீட்டின் பலன்

தானென சௌரிலாபத் ததிலுர வாதநோயாம்
ஞானம தில்லாதுஷ்டி ஞானமில் விதனந்தீமை

மானினிப் பெற்ருள்ரோகி மரைப்பொரு ளுளதுமிக்க
தேனினி மொழியாள்மற்றும் தெய்வத்தைத் துதியாளன்றே. []

(இ - ள்) பதினோராம் வீட்டில் சனியிருக்க கபவாதவியாதி புத்தியில்லாள் கெட்ட சஞ்சலசுபாவமுடையவள் எப்பவும் விசாரம் பெற்றதாயிருக்கு வியாதியை உண்டாக்குவள் பொருளில்லாள் தெய்வத்தை போற்ருளாம்.

## பன்னிரண்டாம் வீட்டின் பலன்

அன்றியே விரயந்தன்னி லாயுளோன் நிற்கமிக்க
நன்றிலா கருமத்தாலே நாணயச்சிலவ துள்ளாள்
குன்றிடா ளெவர்க்குந்தீமை கோதுள குணங்கட்டன்னுள்
நன்றென விரதங்கொண்டே நானிலத் துரைவாளென்ருர். []

(இ - ள்) பன்னிரண்டாம் வீட்டில் சனியிருக்க பிரயோசன மற்ற காரியங்களில் அதிகச்சிலவு ஈகையில்லாள் ஒருவரையும் லக்ஷயம் செய்யாள் கெட்ட நடவடிக்கையுள்ளாள் தரித்திரம் உடையவளாம்.

## இராகு நின்ற பலன்

### லக்கின பலன்

என்றன ருதயந்தன்னி லெக்ஷணிகா ரகனுமாக
நன்றிலை தேகம்சீலம் நாற்றிசை பகையும்வியாதி
அன்றியும் மானமில்லா லகற்திடை சினமதுள்ளாள்
நன்றேனு மறமேசெய்யாள் நங்கையின் குணமிதாமே. [195]

(இ - ள்) ஜனன லக்கினத்தில் ஏக்ஷணி காரகனென்னும் ராகு விருக்க அழகில்லாசரீரம் ஆசாரமில்லாள் எல்லோரும்பகை எப்பவும் வியாதி மானமில்லாள் குரோதமுள்ளவள் தருமம் ஒருநாளும் செய்யாதவளாம்.

## இரண்டாம் வீட்டின் பலன்

ஆமெனப் பொய்யுரைப்பா ளழகொடு குணமதில்லாள்
சேமமு மறியாள்ரோகி செல்வமும் பதியுமீனம்
பூமியில் முன்னுடன்னிறப் புரிந்ததோர் பவித்தினு
லாமென ராகுரண்டி லமர்ந்தன வென்ருர் நூலோர். [196]

(இ - ள்) இரண்டாம் வீட்டில் ராகுநிற்க பொய்யுரைப்பாள் அழகு நற்குணம் புத்தியுமில்லாதவள் அமங்கலியாம் வியாதி தரித்திரம் எப்பவும் துக்கத்தை அனுபவிப்பாள் இவையெல்லாம் முன் செய்த பாவகர்ம பயனும்.

## மூன்றும் வீட்டின் பலன்

நூலதிற் மூன்றிர்ப்பாம்பு நுழைந்திடத் துணைவறுற்ருர்
மேலதாம் பெருமையோடு மேன்மையு மில்லைதேகம்
சாலவும் வலுத்திருக்கும் சமுசயம் வியாதிமிக்க
கோலமாம் வீரியத்தாள் கொழுநனும் பகையுமாமே. [197]

(இ-ள்) மூன்ரும் வீட்டில் ராகுநிற்க சகோதரரும் உறவினரும் பெருமையும் இல்லாதவள் வலுத்த சரீரம் வியாதியுள்ளாள் சந்தேகமான மனம் பராக்கிரமசாலி புருஷன் பகை மத்திமமான அழகியாகும்.

## நான்காம் வீட்டின் பலன்

ஆமென உறவாரீன மல்பமாய் தனமதுள்ளாள்
நேமமுந் நன்றிமாருள் நிலைபிலா தகத்தாள்நித்தம்
ஆமயமு ள்ளாளென்று மன்பனே டெதிர்மாருகும்
காமியாள் ராகுநான்கில் கலந்திட பலநிதாமே. [198]

[இ - ள்] நான்காம் வீட்டில் ராகுநிற்க பந்துஜனங்கள்யீனம் அற்பப்பொருளும் வாகனமுமுள்ளவள் நன்றியுமாவாள் ஆசாரமுடையாள் மனநிச்சயமில்லாள் வியாதியுள்ளாள் தாய்வழி ஜனங்களில்லை யெனப்படும்.

## ஐந்தாம் வீட்டின் பலன்

பலநிது கருங்கோட்டானும் பஞ்சமந் தன்னிலாக
நலமிலாள் குறளேருபம் நடப்பளே கணிகைபோல
வலிமையுள் கரியிதென்பார் வங்கிசந் தனைதுறப்பாள்
நலியுடன் புதவரீனம் நங்கையுஞ் சிறுமையுள்ளாள். [199]

(இ - ள்) ஐந்தாம் வீட்டில் ராகுநிற்க குணமில்லாத குறுகிய விகாரரூபம் தாசியைப்போல் நடப்பாள் யானையைப்போல மதம் பிடித்தவள் தனமில்லாள் ஜனங்களால் விடப்பட்டவள் புத்திரரீனம்.

## ஆரும் வீட்டின் பலன்

உள்ளதோர் வாஞ்சைவித்தை உற்றவர் தனக்குநல்லாள்
கள்ளமில் லாதவாக்கு கற்புளாள் வியாதியில்லாள்
வெள்ளம்போல் பெருமைவாய்ந்து வேண்டுநற் பூசெல்வங்க
ளுள்ளவள் ராகுவாறி லுற்றிட வந்தமாது. [200]

(இ - ள்) ஆரும் வீட்டில் ராகு அமர்ந்திருக்க ஜனங்களிடத்திற் விசுவாசம் வித்தை பந்துஜனங்களுக்கு நல்லவள் பொய்யில்லாள் பதிவிரதை வியாதியற்றதேகம் கம்பீரமான பெருமை பூமி தனம் முதலான ஐஸ்வரிய முள்ளவளாம்.

## ஏழாம் வீட்டின் பலன்

மாதினுக் கேழில்பாம்பு மகிழ்ந்திட வடிவதில்லாள்
கோதுரு குணங்களலுப்தை கொழுநனுந் நிலையாதுப்பி
பாதகி யென்றுரைக்கும் பயமொடு நன்றியில்லாள்
நீதியு மறியாளுற்றார் நிந்தனைக் காளாம் பாரில். [201]

(இ - ள்) ஏழாவது வீட்டில் இராகு இருக்க அழகில்லாதவள் கெட்ட குணத்தாள் ஈகையும் நன்றியுமில்லாள் மதியீனம் பய மில்லாள் நீதியை யுரைத்தாலும் கேளாள் ஜனங்களால் பாதகி யென பழிக்காளாகுவாளாம்.

## எட்டாம் வீட்டின் பலன்

பாரினி லகியுமெட்டில் பதுங்கிட கைம்பெண்ரோகிக்
கூரிடுங் கருமவியாதி குரூரமாம் நெஞ்சம்சூனீ
மாரிடா ஜனவிரோதம் மக்களுந் தனமுமில்லாள்
நேரிடுந் துக்கமென்று நிகழ்த்தினர் கணிதநூலோர். [202]

(இ - ள்) எட்டாம் வீட்டில் ராகுவிருக்க பால்லியத்திலே அமங்கலியும் வியாதி அங்கப்பழுதானவிருபம் விபசாரி பெருத்த கர்மவியாதியால் பீடிக்கப்பட்டவள் ஜனவிரோதம் புத்திரரும் பொருளுமில்லா துக்கத்தை யனுபவிப்பவளாம்,

## ஒன்பதாம் வீட்டின் பலன்

கணிதநூ லுரைத்தவாறு கறுப்புக்கோ னொம்பதாக
அணிதலுமில்லாள் வேறு அறமதில் புத்தியுள்ளாள்
மணியுங்நற் புகழும்வாய்க்கா மாதென யுறைப்பாநீன்றேன்
பிணியுடன் பகையுமாவான் பிறந்ததிம் மங்கையற்கே. [203]

(இ - ள்) ஒன்பதாம் வீட்டி ராகுநிற்க தருமமும் ஆடையாபர ணமும் நல்லபுத்தியு மில்லாதவளாம் தன் குலதருமத்தைத் துறந்து வேறு தருமத்தில் பிரீதியுள்ளவள் அழகும் கீர்த்தியும் இல்லாள் தந்தை வியாதியுள்ளவள் ஜனப்பகையு முள்ளவளாம்.

## பத்தாம் வீட்டின் பலன்

மங்கையர் தனக்குபத்தில் மதிப்பகை யிருக்கப்பெற்றோர்க்
கிங்கித மில்லாதோஷி இழந்திடும் பதியைப்பாரி
லெங்கையும் வெறுப்புமுள்ளா ளெதிரிகள் பக்ஷம்நன்றும்
மங்கல வடிவதில்லா மலடியென் றுரைசெய்தாரே. [204]

(இ - ள்) பத்தாம் வீட்டில் ராகுநிற்க தாயிக்குதோஷம் அடக்க மில்லாள் புருஷனுல் விடப்பட்டவள் எல்லாரிடத்திலும் விரோத முள்ளவள் விரோதஜனபக்ஷம் அழகும் கீர்த்தியுமுள்ளாள் மலடியா யிருப்பவளாம்.

## பதினோராம் வீட்டின் பலன்

செய்தனர் ராகுதானும் சேர்ந்திட லாபந்தன்னில்
மெய்யதை யுரைப்பாள்வாஞ்சை மேதினி புகழுங்கற்பாம்
செய்தவ பலத்தான்மைந்தர் செம்மையுள் பதியாம்மூத்தாள்
செய்தியுங் நன்றுமறப்ப செவியது கேளாதென்றூர். [205]

(இ - ள்) பதினோராம் வீட்டில் ராகு இருக்க உண்மையை யுரைப்பாள் ஜனவிசுவாசி நற்கீர்த்தியோடு கூடிய பதிவிரதை முன்செய்த நல்லபலத்தால் மக்களும் புருஷனும் புகழும் உள்ள வள் குடும்பத்தில் மூத்தவள் அற்ப செவிடு உள்ளாள்.

## பன்னிரண்டா மிடத்து பலன்

என்றன ரெல்லிநாத னெதிர்ப்பகை வியத்தினிற்க
நன்றியுள் பணிகள்செய்வாள் நயனநோய்ச் சிலவுமிக்கா
ளன்றியும் வறுமைதுக்கி யன்பனுஞ் சுதருமில்லா
ளென்றனர் கணிதநூலோர் ரெல்பகை கிதுவாமென்றூர்.

(இ - ள்) பன்னிரண்டாம் வீட்டில் ராகுநிற்க விசுவாசமில்லாள் சில நல்லகாரியங்களைச் செய்வாள் கண்ணோவுள்ளாள் அதிக சிலவு தரித்திரம் துக்க மனுபவிப்பாள பதியும் புத்திரருமில்லாள் என்றூர் இதைப்போலவே கேதுவுக்கும் பலன் உரைக்கவேண்டிய தாம் என வதிஷ்டர் வசனம்.

## ஜனனராசிக்கு ஏழாமிடத்ததிபனுல் பர்த்தா இன்ன திசையென்றறிய இவ்விரண்டும் ஒரு தொடர்

மங்கையர் தனக்குவாய்க்கும் மணமக னிரதங்காணத்
தங்கியே யுதித்தராசி தனக்குமே ழிடத்தோனரியேல்
இங்கிதங் கிழக்குமாலோ னிசைவட மேற்குச்சேயேல்
தங்கிடுங் தென்பாற்புந்தித் தனக்குஉத் திரமென்றேதே. []

ஆகுமே பொன்னேனுக்கு வமைந்தது வடகீழ்பாலில்
போகமாம் புகருக்கேதான் பொருந்திய தென்கீழ்மந்த
ஞகமம் மேற்கிரண்டு அரவினுக் குரைதென்மேறப்பால்
பாகமாய் விளம்பலாகும் பனிமதிக்கிது வென்றேதே. [208]

(இ - ள்) மான்விழி மங்கையர்களுக்கு மணமகனிருக்குந்திசை இன்னதென்றறிய அம்மங்கையர்கள் அவனியிற் ஜனனமான லக்கினத்திற்கு ஏழாமிடம் பதியின்பாவமான்தால் அந்த ஏழாமிடத் ததிபன் இன்னுரென்றுணர்ந்து இன்னதிசையென்றுரைக்குமாறு. அவ்வேழாமிடத்திற்கு அதிபதியானவன் சூரியனுகில் கிழக்கு திசையென்றும் சந்திரனுகில் வடமேற்கென்றும் செவ்வாயாகில் தென்றிசையென்றும் புதனுகில் வடக்கென்றும் குருவாகில் ஈசான்னியமான வடகிழக்கென்றும் சுக்கிரனுகில் அக்கினிமூலை யான தென்கிழக்கென்றும் சனியாகில் மேற்குதிசையென்றும் ராகு கேதுவால் நைருதியாகிய தென்மேற்கு திசையென்றும் உரைப்பது மற்றும் சந்திரனிருக்கும் ராசி உயிர் லக்கினமாத லால் அந்த ராசியைக் குறித்து மதற் கேழாமிடமறிந்து முன் னுரைத்தவாறே பலனுரைத்தல் வேண்டுமென அநேகர்கள் அபிப் பிராயம்.

## சாதகபலன் வேறு

## இலக்கின பலன்

செய்யபெண் கள்சாதகத்தைச் செப்பிடி விலக்கினத்தில்
வெய்யவன் செவ்வாய்நிற்கில் விதவையாய்த் தரித்திரியாவா
ளுய்யபொன் புந்திவெள்ளி தொடங்குறின் விதவையென்பார்
தையலே ராகுநிற்கிற் றநயரைப் பெற்றிழப்பள். [209]

(இ - ள்) பேதமையென்ற குணமுடைய பெண்களின் ஜனன கால லக்கினத்தில் சூரியன் செவ்வாய் இருக்க பால்லியத்திலே வைதவ்வியமும் தரித்திரமு முடையவள் குரு புதன் சுக்கிரன் நிற்க சிலகாலங்கழித்து விதவையாவாள் ராகு கேது நிற்கில் குழந்தை யைப் பெற்றுழைப்பாள்.

உகந்தலக் கினத்திற்புந்தி யுச்சனுங் கூடிநிற்கிற்
சுகந்தன முடையாளாகுஞ் சொல்லிய பாவர்தானே
தகவுள வுச்சமாட்சி சார்ந்துநட் பாயநின்ருல்
பகருமோர் தோஷமில்லை பையர வல்குவாளே. [210]

(இ - ள்) பாம்பின் படத்தைப்போன்ற வல்குலுள்ள பெண் கள் லக்கினத்தில் புதனும் சுக்கிரனும் சேர்ந்திருக்க சுகங்களாய் செல்வமுந் நன்னடக்கையுமுள்ளவள் முன்னுரைத்தவாரு பாவர் கள் ஆட்சி உச்சம் நட்பு ஆகிய இச்சுபவர்க்கமாயிடில் தோஷங் கள் ஒன்மில்லாது சுகசம்பத்துடனே வாழ்வாள் என்பதாம்.

## இலக்கின விசேடம்

இலக்கினஞ் சனியன் வீடதாய்வெள்ளி யிகல் சனி கூடியிருக்கப்
**பலப்படு மைந்திற் பாவரேயிருக்கப் பார்க்கினு மலடியென்றுரைப்பர்**
பெலப்படுதநுசு மீனமேயுதிப்ப பெட்யுறு குருவிருந்தக்காற்
**சொற்படும் புத்திரபௌத்திரர் செல்வஞ்சொந்தமா யனுபவிப்பவளே.** []

(இ - ள்) சநியன் வீடான மகர கும்பராசிகள் லக்கினமாய் சுக்கிரனோடுசனியுங் கூடியிருந்து ஐந்தாம் வீட்டில் பாவர்களிருக்க மலடியாவாள் தநுசு மீனம் லக்கினமாக அதில் குருவானர் இருக்க புத்திரபௌத்திரரோடு செல்வம் நிறைந்து அதிகாரியாவாள்.

கடகம்வில் லுதயமென்னி மைந்தர்க் காதலனுங்
காதலிக்கும் மனஸ்தாபமிக் கவருஞ்சிங்க
மிடபம்விருச்சிகங் கன்னியி லக்கினமேயாக
வேற்றுமைந்தில் மதியிருக்கி லற்பபுத்திராளாம்
படருமொன்றே டேழெட்டிற் பாக்கியத்திற்பாவர்
பதிந்திருக்கி லென்நேரமுந் துக்கபலனும்
மடருமிந்தத் தானத்திற்சுபர் நிற்கின்மானே
யனுதினமுஞ் சந்தோஷபல னுகுமென்னே. [212]

(இ - ள்) கடகம் தநுசு இலக்கினமானல் அப்பெண்களுக்கு பத்தாவும் பிள்ளைகளும் விரோதமாவார்கள் சிங்கம் இடபம் விருட்சிகம் கன்னி இந்த ராசிகள் லக்கினமாகி ஐந்தாம் வீட்டிற் சந்திர னிருக்க அற்பமான புத்திரரைப் பெறுவாள். இலக்கினம் ஏழா மிடம் எட்டாமிடம் ஒன்பதாமிடம் இதுகளில் பாவர்களிருக்க எப் பொழுதும் துக்கத்தையே அனுபவிப்பாள் ஆயினும் இந்த இடங் களில் சுபக்கிரகங்களிருக்க சதா சந்தோஷ சுகங்களை யனுப விப்பா ளென்பதாம்.

**அறையும்லக் கினத்தோனறன்னை யறிஞ்சன்பொன் வெள்ளிபார்க்கிற்**
குறைவிலாச் சுகமும்பொன்னும் குவிந்திடுங் கோதைமாதே
நிறையிலக் கினத்திற்காரி நின்றிடிற் றரித்திரியாவாள்
பிறையது தானேநிற்கிற் பேதையற் பாயுளென்பார். [213]

(இ - ள்) இலக்கினத்தையாவது அல்லது லக்கினாதிபதியை யாவது புதன் குரு சுக்கிரன் இவர்கள் பார்வையுற்றால் சுகமும் செல்வமும் பொருந்தி வாழ்வாள்.

இலக்கினத்தில் சனியிருந்து சுபர்கள் பார்வையில்லாதிருக்க தரித்திரத்தை யனுபவிப்பவளாம் சந்திரனிருக்க பேதைகுணமும் அற்பாயுளு முடையவளாம்.

### இரண்டாமிடப் பலன்

கிட்டும்லக் கினத்திற்பாவக் கிரகங்க லிருக்குங்காலைத்
தொட்டொரு நட்போடாக்ஷிச் சொலுமுச்சத் திருக்குமேனு
மட்டிடுந் தோஷமில்லை வருமிரண்டா மிடத்திற்
றட்டுறுஞ் சுன்சேயராகுத் தானிற்கிற் தரித்திரியாமே. [214]

(இ - ள்) இலக்கினத்தில் பாவக்கிரகங்க ளிருப்பினும் அவர்களுக்கு நட்டு ஆட்சி உச்சம் வாய்ந்திருந்தால் எல்லாவித சுகமுண்டாம்.

இரண்டாமிடத்தில் சனி செவ்வாய் ராகு இவர்களில் இருந்து சுபர்கள் சம்மந்தமும் பார்வையுமில்லாதிருக்க தரித்திரத்தையே யனுபவிப்பவளாம்.

### மூன்றாமிடத்துப் பலன்

வெள்ளிபொன் புந்திவாக்கின் மேவிடிற் றநத்தையுள்ளாள்
பிள்ளைவெண் மதியுங்நிற்கிற் பெண்ணினைப் பெறுவளென்பர்
வள்ளிய மூன்றிர்பாநு மதிமகன் புகர்பொன்னிற்கிற்
றள்ளொணுப் பிள்ளையுண்டாந் தானிய விர்த்தியாமே. [215]

(இ - ள்) இரண்டாம் வீட்டில் சுக்கிரன் குரு புதன் இருக்க தனவதியாகும் வளர் சந்திரனிருக்க பெண்சந்ததி யுடையவளாம்.

மூன்றும் வீட்டில் சூரியன் சந்திரன் புதன் குரு சுக்கிரன் இருக்க ஆண்சந்ததி யுண்டாகி தானிய விருத்தியோடு வாழ்பவளாம்.

### நான்காமிடத்துப் பலன்

ஒருமூன்றிற் சனிசேய்ராகு முற்றிடிற் றுணைவரில்லை
யருணுலிற் கதிரோனிற்கி வற்பமாஞ் சுகமென்றோதும்
பொருதுசேய் நிற்கிலற்ப புத்திரர் டாய்க்குத்தோஷம்
சருவிய ராகுநிற்கிற் றத்துண்டா மென்றுசொல்லே. [216]

(இ - ள்) மூன்றும் வீட்டில் சனி செவ்வாய் ராகுவிருக்க சகோதரரில்லையாம்.

நான்காம் வீட்டில் சூரியன் நிற்க அற்ப சுகமுள்ளவளாம் செவ்வாயிருக்க அற்ப புத்திரரும் தாயிக்குந் தோஷமாம் ராகு நிற்க தத்து அதாவது விஷகண்ட முடையவளாம்.

## ஐந்தாமிடத்துப் பலன்

கூறிய வைந்தில்வெள்ளி குருவுறத் தருமதானம்
வீறிய மகிழ்ச்சியோடு வெகுசவுக் கியமுண்டாகும்
தேறிய வைந்திற்பாநு சேய்நிற்கில் பெற்றிழப்பாள்
மாறிலாப் புந்திநிற்கில் மைந்தருந் தனமுண்டாமே. [217]

(இ - ள்) ஐந்தாம் வீட்டில் சுக்கிரன் குருவிருக்க தானதர்மங்களுடன் மனச்சந்தோஷ சௌக்கியத்தை யுடையவளாம் ஐந்தில் சூரியன் செவ்வாய் நிற்க பிள்ளைகளை பெற்றிழப்பாள் புதன் இருக்க சந்தானமுந் தனமுமுண்டாகுமாம்.

## ஆறுமிடத்துப் பலன்

ஐஞ்சினிற் சனியிராகு லமர்ந்திடிற் மலடியாவாள்
பிஞ்சுவெண் மதியனிற்கிற் பெண்ணினைப் பெறுவளென்பார்
தஞ்சமா மாறிற்பாநு சனிசெவ்வா யிராகுவெள்ளி
வஞ்சமில் குருவுநிற்கின் மைந்தரும் பகையுண்டாமே. [218]

(இ - ள்) ஐந்தாம் வீட்டில் சனி ராகு இருக்க மலடியாம் சந்திரனிருக்க பெண் சந்ததியே பெறுவாளென்பதாம்.

ஆறும் வீட்டில் சூரியன் சனி செவ்வாய் ராகு சுக்கிரன் அல்லது குருவிருக்க சந்ததியும் பகையுமுண்டாம்.

## ஏழாமிடத்துப் பலன்

அம்புலி யாறிநிற்கி லழகுண்டாம் புந்திநிற்கிற்
றெம்புட னழிம்புண்டாகுஞ் சிகிநிற்கிற் றனமுண்டாகும்
வம்பிய வேழிற்காரி தன்னில்வன் கொலையிற் சாவான்
விம்பமாய்ச் செவ்வாய்நிற்கில் விதவையென் றுரைவர்மாதே.

(இ - ள்) ஆறும் வீட்டில் சந்திரன்நிற்க நல்லழகு பொருந்தினவளாம் புதன் இருக்க சிலகாலம் சுகம் துக்கம் சிலகாலம் உள்ளவளாம் குருவிருக்க செல்வம் நிறைந்தவளாம்.

ஏழாம் வீட்டில் சனியிருக்கத் தன் புருஷன் சண்டையில் கொலைப்படுவான் செவ்வாயிருக்க சீக்கிரத்தில் விதவையாவாள்.

நீடிய வேழிற்பொன்னே னின்றிடிற் சிறையிருப்பாள்
சாடிய புந்திநிற்கிற் றனச்சேத மிராகுநிற்கி
னாடிய உற்றார்நாச நண்ணிய கதிரோனிக்கிற்
றேடிய வியாதியாவாள் சேயரிக் கண்ணினுளே. [220]

(இ - ள்) ஏழாம் வீட்டில் குருவிருக்க சிறையி லிருப்பவளாம் புதனிருக்க திரவியநஷ்ட முடையவள் ராகுவிருக்க பந்து ஜனங் கள் நாசமாவார்கள் சூரியனிருக்க அனேகவித வியாதியை யுடையவளாம்.

உன்னும்வெண் மதியும்வெள்ளி யோரேழா மிடத்துநிற்கின்
மன்னுதே சாந்தரத்தின் மரணமே யாவாளென்பர்
மின்னுறு மெட்டிற்புந்தி வேந்தனு முவந்துநிற்கப்
பன்னுறு கணவனேடே பரவிய மரணமாவாள். [221]

(இ - ள்) ஏழாமிடத்தில் சந்திரனும் சுக்கிரனுங் கூடியிருக்க தேசாந்தரத்தில் மரணமடைவள் எட்டாமிடத்தில் புதனுங் குருவுங் கூடியிருக்க கணவனுடனே தானும் மரணமாவள்.

கிட்டியவேழிற் புகர்மதிநிற்கிற் கிழவனை மணம்புரிந்திடுவள்
மட்டிடுபாவர் கூடியேநிற்கில் வாலிப விதவையாயிருப்ப
ரோட்டியகாமஞ் மேடஞ்சாலுதிப்ப வுயர்மதிப் புகருடன்பாவர்
**கட்டிநின்றிடினு மெட்டினிற்பாவர் கலக்கினும் விதவையென்றுரையே.**

(இ - ள்) ஏழாம் வீட்டில் சுக்கிரன் சந்திரனிருக்க விருத்தாப்பி யனை மணஞ்செய்வள் இவர்களுடன் பாவிர்கள் கூடியிருக்க பால்லியத்திலேயே வைதவ்வியத்தை யடைவள் ஏழாமிடம் மேடம் கும்பமாகில் அதாவது துலா சிங்கம் இலக்கினமாக சந்திரன் சுக்கிரனுடன் பாபக்கிரகங்களிருக்கவும் எட்டாமிடத்தில் பாவக் கிரகமிருக்கினும் வைதவ்வியத்தை யுடையவளாம்.

இருமையாமேழிற் பாவரேயுருக்க விரண்டினிற் சுபரிருந்தக்காற்
புருடனுக்கேமுன் மரணமேயாவாள் புலிவிடை விருச்சிகந்தானே
மருவியபுத் திரத்தானமதாக மதிநிற்கிலாண் பிள்ளையற்பங்
கருதியகாமம் வெள்ளி வீடாகிற் காமுகபுருடனை யடைவள். []

(இ - ள்) ஏழாம் வீட்டில் பாவர்களிருக்க இரண்டாம் வீட்டில் சுபக்கிரகமிருந்தால் புருடனுக்கு முன் சுமங்கலியாக மரிப்பள் ரிஷபம் சிங்கம் விருச்சிகம் இந்தராசிகள் புத்திரத்தானமான ஐந் தாம் வீடாகி அதில் சந்திரனிருக்கில் ஆண் சந்ததி அற்பமாகும்.

### பதியிலக்கணம்

ஏழாம் வீடானது சுக்கிரன் வீடான ரிஷபம் துலாமாகில் காமியாகி அழகுள்ள புருடனை மணப்பாள்.

வீசியகாமம் புந்திவீடாகில் வித்வான் றனை மணஞ்செய்வள்
காசிலாக்குருவின்வீடேனி னல்ல-கணவனையடைந்துவாழ்ந்திருப்பள்
மாசிலாக்கதிர்வீடாயின் மத்தியமாம்வயதில் விதவையாமதிலே
பேசியபாவர் கூடிட பார்க்கப் பிணியுள கணவனையடைவள். [224]

(இ - ள்) ஏழாமிடமானது புதன்வீடாகிய மிதுனம் கன்னியாய் வரில் வித்துவானை கணவனுயடைவள் குருவின்வீடான தனுசு மீனமாகில் ஆசாரசீலமுள்ள கணவனை யடைந்துவாழ்வள்.

சூரியனுடைய வீடான சிங்கராசி ஏழாமிடமாகவரில் மத்திபமான வயதில் அமங்கலியாவள் அன்றியும் அங்கு பாபக்கிரகங்களிருக்க அல்லது பார்க்கிலும் வியாதியுள்ள கணவனை யடைவளாம்.

அடர்ந்திடுமிவரைச் சுபர்கள்நோக்காரே லந்நியபுருடனை யடைவள்
இடம்பெறவல்லான் மலடியேயாவ ளேழிடந்தான்சரராசி
தடம்பெறு மேழோன் சாரங்கிசமன்றி யிரராசிதன்னி லேசருக்கிற்
குடம்பொரு தநந்தாய் கற்புடையளெனக் கூறும்மலர்பூங்கொடியே.

(இ - ள்) ஏழாம்வீடு சூரியன் வீடாகி அதில் பாவர்களிருந்து சுபர்கள் பார்வையில்லாதிருக்க அன்னிய புருஷனையுடையவள் மற்றும் மலடியாயு மிருப்பாள்.

ஏழாமிடம் சரராசியாகி அவ்வீட்டிற் குடையவள் சராங்கிசமில்லாது சரராசியிலிருக்க பதிவிரதையாவள்.

மிகையில்லாவேழிற் சனிசெவ்வாயிருக்க வீடதுபகைவர் வீடாகப்
பகைவரேபார்க்கில் விதவையாமேழிற் பன்புளச் சுபரும்பாபருமே
திகையுர கூடப்பார்க்கவேபாபர் திருட்டியே யதிமகமாயிடினும்
வகையொடுநிதமும் பரபுருடனையே மருவியேயிருப்பணமாமயிலே.

(இ - ள்) ஏழாம் வீட்டில் சனி செவ்வாயுமிருக்க அந்த வீடானது பகை வீடாக பகைவர் பார்வையாகில் விதவையாம்.

ஏழாமிடத்தில் சுபரும் பாவரும் கூடியிருக்க அல்லது பார்க்க பாவர்பார்வை அதிகமாயிருந்தால் வேசியைப்போல பரபுருடரையுமே மருவுவள்.

ஏலுமொரேழிற் சனியனேமூட மெய்திடிற் பாபரேபார்க்கில்
நாலுபேரறியப் புருடனைப்பிரிந்தே நாட்டினிற் விபசரித்திடுவள்

பாலுருமேழா மிடஞ்சேய்வீடாய் பாபர்பார்த்திட னிற்கில்
காலுறும்புவிமேற் றரித்திரமானக் கணவனையடைவளென் றுரையே.

(இ - ள்) ஏழாமிடத்தில் சனியிருந்து அஸ்தமானமாகி பாவர் பார்வையானுல் புருஷனைப்பிரிந்து விபசாரியாக விருப்பள்.

ஏழாமிடம் செவ்வாய் வீடாக பாவர் பார்த்திருக்க தரித்திர மான புருஷனை அடைந்து வாழ்வள்.

அலகிலா வேழாமிடங்குருவீடாய் யதிற்குரு சுபவர்க்கம்பெற்று
பெலமுடனுச்சாங் கிசத்தினிலிருக்கிற் பேரறிவுடன்குணமழகும்
பலபலகல்வித் திரவியஞ்செல்வம் படைத்திடுங்காமுகனுன
திலகனுகிய தோர்கணவனையடைவள் சேயரிபரந்தக்கண்மயிலே.

(இ - ள்) ஏழாமிடம் குருவீடாகி சுபவர்க்கம் பெற்ற குருவதி லிருக்க உச்சாங்கிசம்பெற விசேஷ புத்தியும் அனேகநற்குணங் களும் விசேஷவித்தை செல்வம் உள்ள அதிக காமியாகிய புரு டனை அடைந்து வாழ்வள்.

தடம்பெறுமேழா மிடஞ்சனிவீடாய் சனிசுபாங்கிசம் பெற்றிருக்கி
லடங்குறுமூமைப் புருடனையடைவ ளருட்காமம் புந்திவீடாகற் [னே
துடங்குவெண்மதியுஞ் சுக்கிரனிருக்கத் துண்ணென பார்க்கிலுந்தா
யிடம்பொருளேவல் சவுக்கியமுடைய விறைவனை மணம்புரிபவளே.

(இ - ள்) ஏழாமிடம் சனிவீடாகி அச்சனி சுபாக்குசம் பெற்றி ருக்க ஊமைப்புருடனை யடைவள்.

ஏழாமிடம் புதன்வீடாக அதில் சந்திரன் சுக்கிரனிருக்க அல்லது பார்க்க சுக சௌக்கியமுடைய கணவனையடைந்து வாழ்ந்திருப் பாள்.

வினவியகாமத் திறைவனுக்கேழில் வெள்ளிநின் றிட புகர்க்கொன்
சினமுறுபாவ ரிருந்திடிற்கண வ ளறிந்திடவிபசரித் திடுவள் [பான்
கனசுபர்பார்க்கிற் பிறரறியாமர் களவிலேவிப சரித்திடுவள்
வனமுறுசுபரும் பாபரும்பார்க்கில் வடிப்பமாய் விபசரித்திவள்.

(இ - ள்) ஏழாமிடத் ததிபனுக்கு ஏழில் சுக்கிரனும் அச்சுக் கிரனுக் கொன்பதில் பாவக்கிரகங்கள் பகைப்பெற்றிருக்க கண வனுக்குத் தெரிந்தே விபசாரம் செய்வாள்.

சுக்கிரனை சுபக்கிரகங்கள் பார்க்க ஒருவருக்குந் தெரியாமல் ரகசியமாய் விபசாரம் செய்வாள்.

சுபரும் பாவரும் கலந்த பார்வையுண்டால் திருட்டுத்தனமாக விபசரித்திடுவள்.

## கல்யாணகாலத்தில் கணவன் ஆயுள் நிருணயம்

கருதுலக் கினத்துக்கேழில் கதிர்நிற்கி லைம்பத்தைந்தாம்
திருமதி யிருக்கிலேழாஞ் சேய்நிற்கிற் பதினாருண்டா
மருபுத னிருபதாம்பொன் னவன்முப்ப தாகும்வெள்ளி
சருவுமோ ரேழெட்டென்பான் சனியென்ப தறுவதாமே.

(இ - ள்) இலக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் சூரியனிருக்கில் ஐம்பத்தைந்து வயதாம் சந்திரனிருக்க ஐம்பத்தேழாம் செவ்வாய் நிற்கில் பதினாறும் புதனிருக்க இருவதாம் குருவிருக்கி முப்பது வயது சுக்கிரனிருக்க தாரு சனியிருக்க அறுபதுவயதாம்.

நெருக்கிய ராகுகேது நிகருமோ ரேழிநிற்கில்
லிருக்குமோ ரெழுபதல்லா லெழுபத்தைந் தொண்பதாண்டாம்
வருக்கமாம் வயதுபெற்ற மகிழ்நனை யணைந்துவாழ்வள்
பொருட்பெரு கணிதநூலோர் புகன்றதிவ் வாறதாமே. (232)

(இ - ள்) ஏழாம் வீட்டில் ராகுகேதுக்களிருக்க எழுபது எழுபத்தைந்து அல்லது எண்பதுவயதாம் இவ்வாறு வயதுகளுள்ள கணவனை யடைந்து வாழ்வாளென்று கணிதநூலோர் உரைத்ததுவாம்.

## எட்டாமிடத்துப் பலன்

எட்டிற் பாவர்தானே யிருக்கிலு மிவர்தன்வீடா
யெட்டிடிற் விதவையாவ ளொண்புத னிருக்கிற்கொண்டோன்
சுட்டிட மரிப்பன்முன்னம் சுபரும்பா பருமேபார்க்கின்
மட்டிடக் கணவனோடே மாதமூன் றின்மறிப்பள. (233)

(இ - ள்) எட்டாம் வீட்டில் பாவர்யிருந்து அவ்வீடு யாவர்வீடா யிருக்க விதவையாவள்.

பாவர்வீடாயிருந்தும் புதன் இருக்க அக்கினியில் மறிப்பள்.

அவ்வீட்டை சுபரும் பாவரும் கலந்து பார்க்க புருஷனுடைய மரணத்தின் பின் மூன்றும்மாதம் மரிப்பள்.

அஷ்டமந்தன்னிற் குருபுதனிருக்கி லநுமரணந்தனைச் செய்வள்
**வட்டவெண்மதியுஞ் சுக்கிரனிருக்கி லிராகுமருவிலற்பாயு ளென்றுரைப்பர்**
**திட்டமாங்கதிரோ னுறிலிழகுண்டாஞ் சேய்நிற்கின்விதவை யென்றுரைவர்**
கிட்டமாஞ்சனியு மேவிடின்மெத்தத் தனயர்க ளழிவதுண்டாமே.

(இ - ள்) எட்டாம் வீட்டில் குரு புதன் இருக்க பதியோடுங் கூட மரணமாவாள்.

எட்டில் சந்திரன் சுக்கிரனிருக்கினும் ராகுநிற்கினும் அற்பாயுளாம்.

சூரியன் எட்டிலிருக்க அழகுடையவளாம் செவ்வாயிருக்க விதவையாம்.

சனியிருக்கில் சந்ததிக்கழிவுண்டாகும்.

### ஒன்பதாமிடத்துப் பலன்

**ஒன்பதிலிரவிபுகர் செவ்வாய்மால் பொன்னுரைத்திடில் சுகந்தனமுண்டா**
மன்புளரவிசேய் கூடியேநிற்கின் மைந்தரைப்பெற் றிழந்திடுவள்
அன்பிலிராகுநிற் கிறதுண்டாமதிர் சனிசென்றிடிற் பிணியாம்
பின்புபெற்றிழப்பன்மதினிற்கின்மானே பெண்மகப்பேறெனப்பேசே

(இ - ள்) ஒன்பதாம் வீட்டில் சூரியன் சுக்கிரன் செவ்வாய் புதன் குரு இவர்களிருக்க சுகமும் தனசம்பத்து முண்டாகும்.

சூரியன் செவ்வாய் கூடி ஒன்பதாமிடத்திருக்க புத்திரனுகப் பெற்றிழப்பவள்.

ராகுநிற்கில் பலவித விஷகண்டங்கள் உண்டாகும்.

சனி ஒன்பதாமிடத்திலிருக்க வியாதியுள்ளவள் சந்ததி நசிக்கப்படும்.

சந்திரனிருக்க பெண்சந்ததியுடையவள் என்பதாம்.

### பத்தாமிடத்துப் பலன்

பத்திற்கதிரோன் சனிநிற்கின் மிக வும்பாவமாம் புத்தியாமிராகு
வொத்தூனநிற்கில் வித்தையாமதிக முறைந்திடில்ருன் பிரதாபி
சித்தியாம் வெள்ளி நின்றிடிலரிட்ட ஞ் சேய்புதன் குருவுமேநிற்க
அத்தபொன்னுண்டாம்வக்கிரனிருக்கிற்றநயருண்டாமெனச்சாற்றே

(இ - ள்) பத்தாமிடத்தில் சூரியன் சனியிருக்க மிகவும் பாவஞ் செய்தவளாயுள்ளவள்.

இராகு நிற்கில் விசேஷ வித்தையுண்டாம் மதியும் சேர்ந்திடில் பிரதாபசாலி யாவாள்.

சுக்கிரன் இருக்க கண்டமுண்டாகும் செவ்வாய் புதன் குரு இவர்களிருக்க தனசம்பத்துண்டாகும் செவ்வாய் தனித்திருக்க புத்திரப்பேறுள்ளவள்.

### பதினேராமிடத்துப் பலன்

மிக்கலாபத்தி லிரவியேநிற்கில் வெகுபுத்திராண் மதிநிற்கிற்
றக்கபொன் னுண்டாம் வக்கிரநிற்கிற் றநயருண்டாம் புதனிற்கின்
முக்கியபொருளுண்டாம் குருநிற்கின் முற்றுந்தீர்க்கா யுளுண்டாம்
சுக்கிரனிற்கிற் செல்வமாஞ் சனியன் றுடர்ந்துறில ழகுசெல்வமுமே.

(இ - ள்) பதினோராமிடத்தில் சூரியனிருக்க ஆண் சந்ததி யுண்டாம்.

சந்திரனிருக்கில் தன பாக்கியமுள்ளவள்.

செவ்வாயிருக்க புத்திரப்பேறுண்டு.

புதன்நிற்கில் பொருளும் நல்லபுத்திக் கல்வியு முள்ளவள்.

குருவிருக்க தீர்க்காயுளும் செல்வமு முள்ளாள்.

சுக்கிரன்நிற்க நற்குணமும் தனமு முண்டாம்.

சனியிருக்க அழகும் செல்வமு முள்ளவங்,

### பன்னிரண்டாம் வீட்டின் பலன்

வியத்தின்பொன்னிற்கிற் றனமதுண்டாகுகிரவிகண்ணூநம்தாரித்திர
நயப்பல்வெண் மதியுறிற்றநச்சேத நண்ணியமாம்புத னிருக்கிற்
செயப்புவிமீதில் விபசரித்திடுவ டிண்புகருறிற் பதிவிரதை [னவே.
வயப்புதனிருக்கில் வெகுமைந்தர் சனிசேய்வரிற் சுபகண்ணினேயெ

(இ - ள்) பன்னிரண்டாமிடத்தில் குருவிருக்க விசேஷதன முடையாள்.

சூரியனிருக்க கண்வியாதி தரித்திரம் சந்திரனிருக்க தன நஷ்டம் ராகு புதனிருக்க விபசாரி சுக்கிரனுகில் பதிவிரதை புத னிருக்க புத்திரவதி சனி செவ்வாயிருக்க சுபர்பார்க்க நன்மை யுண்டாம்.

### அங்கிச பலன்

### நவாம்மிசம் பிரிக்க

மேட சிங்க வில்லுக்கு மேடாதி யங்கிசங்கள்
மாருகன்னி மானுக்கு மகரரதி லக்கினமாம்
சாடிதுலே தண்டுக்குச் செப்புக்கோ லாதியதாம்
தேடுநண்டு தேன்மீனில் தெ[illegible]கால்முத லக்கினமே. (239)

(இ - ள்) நவாங்கிசம் பிரித்தறியும் வித மெவ்வாறெனில் ஜனனமான ராசி நாழிகையை ஒன்பதாகப் பிரித்து அதில் எத் தனையாவது பாகமோ அதைக்கண்டு பின்.

ஜனனராசியானது மேஷம் சிங்கம் தனுசு இந்த மூன்று ராசிகளில் ஏதேனு மொன்ருயின் மேஷாதியாக கணக்கிட்டு மேல்கண்ட பாகத்திற்கு வந்த ராசியே நவாங்கிச லக்கினம் போடவும்.

ரிஷபம் கன்னி மகரம் இந்தராசிகளில் ஜனனமாகில் மகரம் முதலாக கணக்கிடவும்.

மிதுனம் துலாம் கும்பம் இந்த மூன்றுராசிகளில் ஜனனமாயின் துலாதியாகக் கணக்கிடவும்.

கடகம் விருச்சிகம் மீனம் இம்மூன்றுராசிகளில் ஜனனமாகில் கடகம் முதலாகக் கணக்கிட்டு நவாங்கிச லக்கினம் அமைக்க வேண்டும்.

### நவாங்கிச சக்கரத்தில் கிரகங்க ளமைக்கும் விதம்

ஆய்ந்தநவாங் கிசந்தன்னை யறியும்வகை கூறி
லச்சுவினி பரணி கார்த்திகை மூன்றுநாளுக்
கேய்காற் பன்னிரண்டு மேடமுதன் மீந
மீருகக் காலென்றுக் கோரங்கிச மாகும்
தூயவிரு பத்தேழு நக்ஷத்திரந் தன்னைத்
தொகுப்பாக மும்மூன்ருய்ப் பிரித்தடைவில் பார்க்கில்
வேயனைய தோன்மாதே சொன்ன வங்கிசந்தான்
விளங்கிடுமென் றேயுரைத்தார் மேற்கணித நூலோர்.

(இ - ள்) நவாங்கிச சக்கிரத்தில் கிரகங்களை அமைப்பது எவ்வாறெனில் எந்த நக்ஷத்திரத்தில் எந்த பாகத்தில் கிரகங்களிருக்கிறதோ அதையறிந்து.

அசுவனி, பரணி, கார்த்திகை இந்த மூன்று நக்ஷத்திரத்திற்கும் நக்ஷத்திரம் ஒன்று நான்கு பாதமாக மூன்றுக்கு பன்னிரண்டு பாதம் இதை மேடாதி மீனம் வரையில் பன்னிரண்டு ராசிக்கும் ராசி ஒன்று ஒருபாதமாக கணக்கிட்டு கிரகங்களை அமைக்கவும்.

மற்ற நக்ஷத்திரங்களையும் இவ்வாறே மும்மூன்ருகக் கணக்கிட்டு பார்க்க இருபத்தேழு நக்ஷத்திரங்களும் ஒன்பது முறைமாக முடியும் இதைக் கண்டு கிரகங்களை அமைக்கவென்று கணி நூலோ ருரைத்தவாறு.

## எளிதில் நவாங்கிச கிரகங்களைப் போடசக்கரம்

| நக்ஷத்திரம் | நக்ஷத்திரம் | நக்ஷத்திரம் | பாதம் | நவாங்கிச ராசி |
|---|---|---|---|---|
| அசுவனி | மகம் | மூலம் | 1 | மேஷம் |
| ,, | ,, | ,, | 2 | ரிஷபம் |
| ,, | ,, | ,, | 3 | மிதுனம் |
| ,, | ,, | ,, | 4 | கடகம் |
| பரணி | பூரம் | பூராடம் | 1 | சிங்கம் |
| ,, | ,, | ,, | 2 | கன்னி |
| ,, | ,, | ,, | 3 | துலாம் |
| ,, | ,, | ,, | 4 | விருச்சிகம் |
| கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் | 1 | தனுசு |
| ,, | ,, | ,, | 2 | மகரம் |
| ,, | ,, | ,, | 3 | கும்பம் |
| ,, | ,, | ,, | 4 | மீனம் |
| ரோகணி | அத்தம் | திருவோண | 1 | மேஷம் |
| ,, | ,, | ,, | 2 | ரிஷபம் |
| ,, | ,, | ,, | 3 | மிதுனம் |
| ,, | ,, | ,, | 4 | கடகம் |
| மிருகசீரிட | சித்திரை | அவிட்டம் | 1 | சிங்கம் |
| ,, | ,, | ,, | 2 | கன்னி |
| ,, | ,, | ,, | 3 | துலாம் |
| ,, | ,, | ,, | 4 | விருச்சிகம் |
| திருவாதி | சுவாதி | சதயம் | 1 | தனுசு |
| ,, | ,, | ,, | 2 | மகரம் |
| ,, | ,, | ,, | 3 | கும்பம் |
| ,, | ,, | ,, | 4 | மீனம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி | 1 | மேஷம் |
| ,, | ,, | ,, | 2 | ரிஷபம் |
| ,, | ,, | ,, | 3 | மிதுனம் |
| ,, | ,, | ,, | 4 | கடகம் |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டா | 1 | சிங்கம் |
| ,, | ,, | ,, | 2 | கன்னி |
| ,, | ,, | ,, | 3 | துலாம் |
| ,, | ,, | ,, | 4 | விருச்சிகம் |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி | 1 | வனுசு |
| ,, | ,, | ,, | 2 | மகரம் |
| ,, | ,, | ,, | 3 | கும்பம் |
| ,, | ,, | ,, | 4 | மீனம் |

## நவாம்சை பலன்

### சூரியனங்கிச பலன்

கதிரவ னங்கிசத்திற் கன்னியுஞ் சனனமாகில்
அதிகமாங் காமமுறும் அன்பனுக் கினியாளாகும்
மதியுளாள் வெப்பந்தேகம் மானிர மாகிமுன்னல்
சதியதாம் புத்திரதோடம் சகலமும் பிறப்பாலுண்டாம். [241]

(இ - ள்) சூரியனுடைய அங்கிசற்தில் ஜனனமானவள் அதி காமியாயும் புருஷனுக்கு பிரியமானவளும் நல்லபுத்தியும் உஷ்ண மான சரீரம் மானிரமான காந்தியும் முன்செய்த வினையால் முதலில் புத்திரதோஷம் உண்டாகிப் பின்னல் புத்திரரும் செல்வமும் உண்டாகுமாம்.

### சந்திரனங்கிச பலன்

உண்டாகும் பதியாற்செல்வ முடுபதி யங்கிசத்திற்
கொடண்தோ ரழகியாகுங் கோருவள் மணவர்க்கத்தைக்
கண்டவெள் ளாடைப்பணிகள் கருதுவள் சுகமேநித்தம்
எண்டிசைப் புகழநல்லா ளினியசொற் றவராளாமே. [242]

(இ - ள்) சந்திரனுடைய அங்சிசத்தில் சனித்தவள் நல்லழகும் புருஷனுக்கு பிரயமும் வாசனை வாய்த்துக்களை விரும்புதலும் சுத்த மான வெண்ணிற ஆடையணிபவளும் சுகியா யிருத்தலும் மதுர மொழியோடு எல்லாருக்கும் நல்லவளா யிருப்பா ளென்பதாம்.

### செவ்வாய் அங்கிச பலன்

ஆமென பூமகன்பா லங்கிசம் பதிக்குூனம்
நேயமு மில்லாள் சோகம் நித்தமும் நட்டமற்பச்
சேமபுத் திரரும்புத்தி புன்றொழில் புரிவள்ரோகி
பூமியுஞ் சேருங்கோபி புவியில்துர்க் குணத்தாளென்றூர்.

(இ - ள்) செவ்வாயினுடைய அங்கிசத்தில் சனித்தவளுக்கு பதிக்கு தோஷமுள்ளவள். ஆசாரமில்லாள் விதனமும் நஷ்டம் அற்பமான சுகம் புத்திரரும் புத்தியுமுள்ளவள். தகாதகாரியங் களைச் செய்வாள் வியாதியுள்ளாள் முற்கோபி கெட்டகுணங்க ளும் பூமிதனமு முள்ளவளுமாம்.

### புதன் அங்கிச பலன்

என்றதோர் கவிஞ்ஞன்பாக மெழிலறங் கல்விஞானம்
நன்றிலாச் செய்கைபிற்பால் நல்லசந் ததியுஞ்செல்வம்
அன்றியும் பிறரிடத்தி லாவளால் மகவுதோடம்
என்றனர் முன்னேர்தாமு மேற்றமாம் மங்கையர்கே. [244]

(இ - ள்) புதனுடைய அங்கிசத்தில் சனனமானவள் தரும புத்தி வித்தை நல்லஞானம் உடையவளாயும் சிலவித கெட்ட நடவடிக்கை யுள்ளவள் புத்தரச்செல்வம் இதர ஜனங்களிடத்தில் விசுவாசமுள்ளாள் அற்பமான புத்திரதோஷம் பெண்களுக்கு நல்லவளென்பதாம்.

### குரு அங்கிச பலன்

மங்கையர் தமக்குதேவ மந்திரியங் கிசமேயாகில்
பொங்கிடுஞ் செல்வம்பத்தி பூமிவா கனமும்புத்தி
எங்கையுந் துதிக்குஞ்செய்கை ஏந்திழை புவிக்குநல்லாள்
இங்கித முரைப்பாளென்று மிகழிலா ஞானியென்பார். (245)

(இ - ள்) தேவமந்திரியாகிய குருவினுடைய அங்கிசத்தில் பிறந்தால் நாளுக்குநாள் அதிகரிக்கும் செல்வம் தேவபக்தி பூமியும் வாகனமும் நல்ல பெருமையுள்ள புத்தியும் எல்லாருக்கும் நல்லவளென்னும் நடக்கையும் ஜனங்களுக்கு ஹிதோபதேசம் செய்யும் ஞானமுள்ளவனென்பார்.

### சுக்கிரன் அங்கிச பலன்

பார்க்கவன் பிரிவுதிக்க பதிக்குநம் யோகங்கற்பாம்
சேர்க்கையா பரணஞ்செல்வம் சேருமே களவுக்கீர்த்தி
தீர்க்கமாங் கல்லியம்வேறு தேசமே வாசமாகும்
பார்க்காற் பெருமைவாழ்வு பற்பல சுகமுளாளே. [246]

(இ - ள்) சுக்கிரனுடைய அங்கிசத்தில் சனனமானுல் இப் பெண்மணியை மணஞ்செய்தபின் புருஷனுக்கு நல்லயோகமும் பதிவிரதை நாளுக்குநாள் விருத்தியாகிவரும் செல்வமும் ஆபரணம் பசு நற்கீர்த்தியும் நீண்டகாலமுள்ள மாங்கல்லியமும் இதர தேசங்களில் வசிக்குந்தன்மை நல்ல பெருமையுள வாழ்வும் பலவித சுகங்களு முள்ளவளாம்.

### சனியன் அங்கிச பலன்

உள்ளவள் சனியின்பாகத் துதித்தவள் மந்தபுத்திக்
குள்ளமாந் தூலதேகி கொழுனனும் வறுமையாவன்
பிள்ளையின் சோகமுற்றுர் பிரபலப் பகைஞ்சராவர்
தெள்ளிய வாக்கதில்லாள் தெரிவையற் பாயுளாமே. [247]

(இ - ள்) சனியினுடைய அங்கிசத்தில் சனித்தவள் மந்த புத்தியும் குறுளேயாகி பெருத்ததேகமும் இவளை மணந்தபின் புருஷனுக்கு தரித்திரமும் புத்திரசோகம் பந்துஜனங்கள் பகையும் கடூரமாகி முன்பின் யோசிக்காமல் உரைக்கும் வார்த்தையும் அற்பமான ஆயுளுமுடையவளாம்.

## அங்கிச பலன்

### வேறு

ஆகுமே பொல்லார் நல்லோர் ரங்கிசந் தன்னைச்சேர
வாகுநன் வாக்குயீன வங்கிச முதிக்கிலுந்தான்
போகுமே வறுமைச்செல்வம் பொங்கிடும் மேன்மைரூபம்
ஈகையுங் நற்குணங்க ளிசைந்திடு மென்றுசொல்லே. [248]

(இ - ள்) குரூரக் கிரகங்களுடைய அங்கிசத்தில் சனனமாகிலும் அவ்வங்கிசாதிபன் சுபர்களுடைய் அங்கிசத்தி லிருப்பானேயாமாகில் அப்பெண்மணி தாழ்ந்த குலத்தில் பிறக்கினும் தரித்திரம் நீங்கிச் செல்வமோங்கி வளருதலும் நல்ல அழகும் தயை தாக்ஷண்ணிய தானதருமங்களோடு கூடிய நற்குணங்களை யடைவாள் என்பதாம்.

சொல்லவு மாயுளற்பம் சுசியிலா ளறக்கிரூபம்
நல்லறி வில்லாக்கன்னி நாதனை மறிக்கச்செய்வாள்
வல்லவள் வீண்வழக்கில் வங்கிசர் பாவராகில்
தொல்லைகள் பலவேயுள்ளத் தோகையென் றுரைசெய்தாரே.

(இ - ள்) பாவர்களுடைய அங்கிசமாகி அவர்கள் பாவிகளுடைய அங்கிசத்திலிருக்கப் பிறந்த பெண்ணுனவள் அற்பாயுளும் அனுசாரமும் அழகின்மையும் நல்லறிவில்லாமல் புருஷனுக்கு கஷ்டத்தை உண்டாக்கும் தன்மையும் வீண்வழக்கிடுவதில் அதிக சாமர்த்தியமும் விசேஷமான கஷ்டங்களை யனுபவிப்பவளுமாம்.

செய்யநட் பாங்கிசத்தில் சேர்ந்திட யாவர்தானும்
வையமில் செல்வமிஞ்சும் வழக்கினர் படியேநெஞ்சம்
முய்யுவள் ருணவிவாதம் மூர்திரிங் திடுமகிழ்ச்சி
ஐயம் தில்லாதேர்ப்ப ளடயளே புதல்வரென்ருர். [250]

(இ - ள்) முன்னுரைத்தவாறு பாவரங்கிசத்திருந்து அவ்வீடானது நட்பு அல்லது உச்சமாயிருக்கப் பிறந்தவள் அற்ப தன விருத்தியும் விரோதிகள்பால் மனத்தைச் செலுத்தி கடன் சம்மந்தமான வழக்கிடுவள் தேசங்களிற் திரிவள் அதில் தனக்கு மிக சந்தோஷம் சில சமயங்களில் பிச்சையெடுப்பாள் சந்ததி ஈனமானவ ளென்பதாம்.

என்றநல் லங்கிசத்தி லேறிட சுபர்கள்தானும்
நன்றுமுன் தனமும்மேன்மை நாயகன் யோகமுள்ளான்
கன்றுகா லிகளுஞ்சேரும் கருதுவள் மேலோர்நேசம்
அன்றியும் பொறுமைநல்லா ளகமதில் சுகமுண்டாமே. [251]

(இ - ள்) ஜனனமானது சுபர்களுடைய அங்கிசமாய்ச் சுபர்கள் சுபர்களுடைய அங்கிசமேற புருஷனுக்கு நல்லயோகமும் விசேஷ தனவிருத்தியும் கௌரவமும் பசு கூட்டமும் பெரியவர்களுடைய சினேகமும் நல்ல பொறுமையோடு கூடிய சுகமுடையவளுமாம்.

சுகமிலா பாவக்கூறில் சுபர்களு மிருக்கவேந்த
னகமதி லுதிக்கிலுந்தா னயலரை யிகழ்வாள்மிக்க
இகழ்ச்சியாய் தனத்தைசேர்ப்ப ளிறைவனே காக்கும்மேன்மை
இகமதில் வாழ்வாள்சீல மில்லேவோ் குலத்தைச்சேர்வாள்.

(இ - ள்) சுபர்களுடைய அங்கிசத்தில் பிறந்தும் அச்சுபர்கள் பாவரங்கிசத்திலமர இப்பெண் அரசர் வீட்டிலுதிக்கினும் எப்பொழுது அயலாரை இகழ்தலும் அதிக கேவலமான தொழிலேச் செய்து தனத்தைத் தேடி தன் புருஷனேக் காப்பாற்றலும் ஆசாரமில்லாமலும் அன்னிய குலத்தைச் சேர்ந்து தனக்குள் இது மேன்மையென்றே வாழ்வாளென மாமுனிகளுரைத்தார் திரிம்சாம்சையும் இவ்வாறே யோசித்து பலத்தைக் கூறல் நலமாம்.

## பெண்கள் ஜாதக பல போதினி

முற்றிற்று

ஆ. செய்யுள் – 253.

சைவசமயிகள் யாவரும் நமதுசமய உண்மைகளை விபரமாகவும் தகுந்த ஆதாரங்களுடனும், அறிவதற்கு உரிய நூல் இதுவரை வெளிவரவில்லை என்பது யாவரும் அறிந்ததே. இக்குறையை நீக்குவதற்காக பலவருடங்களாக, அனேக வடமொழி, தமிழ் நூல்களையும் ஆராய்ந்து,

இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்

**கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள்**

அவர்களால் எழுதப்பெற்ற

# சைவத் திருக்கோவிற் கிரியை நெறி

என்னும் நூலில் கடவுள்களில் பிள்ளையார், சிவன், தெக்ஷணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், பைரவர், அம்மன், முருகன், போன்ற சகல தெய்வங்களின் வரலாறும், இலங்கையிலும் தென்பாரதத்திலும் விளங்கும் சைவத் திருக்கோவில்களில் நிகழும் தினசரி பூசைகள் யாவை? அவை எப்போது நடைபெறுதல் வேண்டும்? கோவில் கும்பாபிஷேகம், அபிஷேகம், பூசை ஆகியவை நடைபெறும்போது நடாத்தப்பெறும் கிரிகைகள் யாவை? கிரிகைகள் நடைபெறும்போது காண்பிக்கப்பெறும் தீபங்கள். மற்றும் பூசை உபகரணங்கள் யாவை? கொடிமரம் தேர் ஆகியவை எவ்வாறு அமைதல் வேண்டும்? மற்றும் வருஷப்பிறப்பு, நவராத்திரி, தீபாவளி, திருவெம்பாவை, அமாவாசை, பிரதோஷம், சதுர்த்தி, கார்த்திகை போன்ற விசேஷ தினங்களிலும் மற்றும் திருவிழாக்காலங்களிலும் எம்முறையில் கோவிலில் பூசை முறைகள் நடைபெறவேண்டும் ஆகியவைபோன்ற பலசமய உண்மைகளை விரிவாக எழுதியுள்ளார் பல அழகிய படங்களுடன் கூடிய இந்நூல் சைவப்பெருமக்கள் யாவரும் வாங்கி படித்து சமய உண்மைகளை அறியுமாறு மலிவுப்பதிப்பாக வெளி வந்துள்ளது.

**விலை ரூபா 5-00]** [தபாற் செலவு 75 சதம்.

(அட்வான்ஸ் இன்றிவரும் வி. பி. பி. ஆடர்கள் கவனிக்கப்படமாட்டாது.)

---

கலா நிலையம், 175, செட்டியார் தெரு, கொழும்பு

KALA NILAYAM, 175, SEA STREET, COLOMBO

உங்கள் வாழ்நாட்களில் வேலையில்லையென்று
மனதில் கவலை வேண்டாம்.

மாதம் பல்லாயிரக்கணக்கான ரூபாக்களைச்
சம்பாதிக்கக்கூடிய அரியபோதனைகள் அடங்கிய

# சுதேசி கைத்தொழில்

இதில் பலவிதமான சோப்புகள், மெழுகுவத்திகள், வச்சிரங்கள், சாக்குகள், வாணவேடிக்கை மருந்துகள், வார்னீஷ்கள், தீக்குச்சிகள், இங்குகள், சாயங்கள், வெள்ளி தங்கம், பொன் இவைகளுக்குக் கில்டு போடுதல், மாஜிக் இங்குகள், வர்ணதினுசுகள், பெப்ரமெண்ட் தினுசுகள், ஓமவாட்டர், பலவித பற்பொடி, கூந்தல்தைலங்கள், அத்தர், சென்ட் தினுசுகள், ஊதுவத்திகள், பலவித கறையெடுக்கும்முறை, சேவிங்சோப், இன்னும் வாசனைசோப் செய்யும்முறை, நரைமயிர்கறுக்கும் தைலம்செய்யும்முறை அத்தர், புனுகு, சாம்பிராணி செய்யும்முறைகள், பன்னீர் குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், ஸ்னோ, கிரீம், ஷர்பத், பிஸ்கத், ரொட்டி, கேக்முறைகள், ரப்பர் முத்திரை, இங்கு மைகள், முகவசீகரப் பவுடர், மருந்து தினுசுகள், பஸ்பம் தைலமுறைகள், லேகியம், எண்ணெய், சூரண முறைகள், பட்டாசுகள், மத்தாப்புகள், சுறுசுறு வத்திகள் செய்யும் முறை, இவைபோன்ற அனேகசெய்முறைகள் பிரபல அனுபவசாலிகளால் எழுதப்பட்டிருக்கின்றது.

**290 அரிய முறைகள் அடங்கியிருக்கின்றது.**

**விலை ரூபா 2—00]** [தபாற் செலவு 50 சதம்

# கதிர்காமசுவாமி தோத்திரக்கொத்து

இலங்கையில் பழம்பெரும் புராதன முருகனின் ஸ்தலமாகிய கதிர்காம முருகன்மீது உள்ள பன்னிரு தோத்திர நூல்கள் பல அழகியபடங்களுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

விலை ரூபா 1—50] [தபாற் செலவு 50 சதம்.

கலாநிலையம், 175, செட்டியார் தெரு, கொழும்பு.

KALA NILAYAM, 175, SEA STREET, COLOMBO.

# சூடாமணி

## உள்ளமுடையான்

இதில் நட்சத்திர நிகண்டு, இராசி நிகண்டு, கிரக நிகண்டு, யோகங்கள் கணிக்கும் விதி, திதி, ராசிப் புணர்ச்சு சக்கரம், முகூர்த்த விதானங்கள், விவாகம் செய்ய, காது குத்த, பூமிதரிசனம் செய்ய, எருவிட, விவசாய ஆரம்பம், விதை விதைக்க, கதிர் அறுக்க, தானியம் கொண்டுவர, தானியம் வாங்க, யாத்திரை செய்ய, மாடு, ஆடு முதலானவை வாங்க, விற்க, வீட்டிற்கு நிலம் எடுக்க, வீடு கட்ட, குடி புக, கிணறு வெட்ட; கிணற்றிற்குரிய இடம் வகுக்க, விவாகப் பொருத்தம் பார்க்க, சங்கிராந்தி பலன், ஜென்ம நட்சத்திர பலன், கிரகண பலன், கிரக பரிவேடக்குறி, பிறைக்குறி மணப்பொருத்தம், பஞ்சபட்சி பலன், பஞ்சபட்சி புணர்ச்சி சக்கரம், பேர் பொருத்தம். கட்டமுட்டி சிந்தனை, பூச்சல்லிய சக்கரம், பலனுடன், பூச்சல்லியமுட்டி கால சக்கர ஆண்டும், பலனும், சக்கரத்துடன் திசாபுத்தி அந்தர பலனும், கிரகங்கள் ஒன்பதுக்கும் உரிய கணிதம் ஆகியவைபோன்ற சுமார் 300 சோதிட சம்பந்தமான விஷயங்களைச் சோதிடர் உதவியின்றித் தாமே அறிந்து, தாமே பார்த்து பலன் அறியுமாறு கண்ணாடிபோல் பற்பல சோதிட கணித நுட்பங்களை மிகத்தெளிவாகக் கூறப்பெற்றிருக்கின்றது. இந்த ஒரே புஸ்தகமே சோதிட கணிதங்கட்கும், சோதிடத்தில் உள்ள மர்ம விஷயங்கள் யாவும் அறியுமாறும் இதில் அடங்கியுள்ளது.

**விலை ரூபா 3-50)** (தபாற்செலவு 50 சதம்)

கலா நிலையம், 175, செட்டியார் தெரு, கொழும்பு

KALA NILYAM, 175, SEA STREET, COLOMBO.

நீங்கள் ஒவ்வோர் காரியமும் செய்யுமுன்பு
நாம் செய்யும் காரியம் நன்மையாக முடியுமா என்பதை
அறிந்து செய்தால் நல்லது அல்லவா?

ஆதலால் ஒவ்வொருவரிடமும்

# நிமித்த சூடாமணியும்,

பிரச்சினை ஆரூடமென்னும்

# சகாதேவ சாஸ்திரமும்

என்னும் புஸ்தகம் அவசியம் கைவசமிருக்க வேண்டுமென்று ஏட்டுப் பிரதியிலிருந்து இந்நூல் அச்சிடப்பெற்றுள்ளது.

இந்நூலில் நாம் எண்ணிய காரியங்கள் தடையின்றி நடைபெறுமா? பிறர் உதவி கிடைக்குமா? என்பதும், களவுபோன பொருள் கிடைக்குமா? கடன் கேட்டால் கிடைக்குமா? கூட்டு வியாபாரம் செய்தால் நல்லதா? பிள்ளைகளைப் பள்ளிக்கூடமனுப்பினல் கல்வி வருமா? வீடு, மாடு, ஆடு, ஆபரணங்கள் வாங்குவதினல் யோகமுண்டா? சீட்டுப் பிடித்தால் நல்லதா? மனதில் எண்ணிய பெண் கிடைப்பாளா? விதை விதைத்தால் லாபம் உண்டாகுமா? ஆகியவை போன்ற 108 காரியங்கள் செய்யும்போது நன்மை அறியும் ஆரூடமும், நிமித்த சூடாமணியும், ஸ்ரீராம சக்காமும், சகாதேவ ஆரூட சக்கரமும் அடங்கிய புஸ்தகமும் கைவசமிருந்தால் உங்கள் அதிர்ஷ்ட பலாபலன்களை நீங்களே அறிந்துகொள்ளலாம்.

**விலை ரூபா 1-00]** [தபாற்செலவு 40 சதம்.

கலாநிலையம், 175, செட்டியார் தெரு, கொழும்பு

KALA NILAYAM, 175 SEA STEET, COLOMBO.

# தற்கால ஜோதிட கோசார பலன் நவக்கிரக மகாமந்திரம் சாந்தியுடன்.

இதில் உலகில் மானிடர்கள் நவக்கிரகங்கள் ஆட்சிக்கும், தண்டனைக்கும் உட்பட்டு பல துன்பங்களையும், ரோகங்களையும் அனுபவிக்கிறார்கள். எனினும் அந்தந்தக் கிரகங்களை மும்விதிப்படி பூஜித்து அவர்களை வேண்டி தண்டனையை நிவர்த்தி செய்துகொள்ளமுடியும் என்று பரமசிவன் பார்வதிதேவிக்கு உபதேசித்தருளிய 'நவக்கிரக மகாமந்திரம் சாந்தியுடன்" என்ற நூலை நாங்கள் சிறந்தமுறையில் ஒன்பது கிரகங்களுக்குத்தக்க சக்கரங்களுடனும், எல்லோரும் எளிதில் உணருமாறு அச்சிட்டிருக்கிறோம்.

மேலும் நவக்கிரகங்களின் சேஷ்டைகளுக்குரிய சாந்திசெய்ய பூசைக்கிரமங்களும், கிரக சுவைகள், கிரகதேவதைகள் ஆரூட பலாபலன், நட்டமுட்டி சிந்தனை, அசுபசகுனம், பிரயாணம் செய்யும் முறைகளும், ஹஸ்தரேகை பலாபலன்கள் தோத்திரமுறைகளும் அடங்கியுள்ளது. இதை ஒவ்வொருவரும் விதிப்படி அனுஷ்டித்து பயன்பெறுமாறு உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

**இதன் விலை ரூபா 1-50]** [தபாற் செலவு 50 சதம்

கலா நிலையம் 175, செட்டியார் தெரு, கொழும்பு.

௩௦.

கள்
ன்
ள்.
படி-
யைப்
ரம
ரிய
ற
கங்
நம்

நக்
க
ன்,
ம்
ன்
து.
து
டப்

கம்

பு.

நீங்கள் ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் அவரின் குணங்களையும், நடத்தையையும் அறிய விரும்புகின்றீர்களா?

ஸ்திரீ புருஷ

**சாமுத்திரிகாலக்ஷண சாஸ்திரம்**

என்னும் நூலில் ஒருவரின் கை, கால், நெற்றி, விழி; மூக்கு, விரல்கள், நகங்கள், குரல், ஆகியவைகளைக் கொண்டு ஆண், பெண் ஆகியவர்களின் குணம், நடவடிக்கை ஆகியவைகளை பிழையற அறிந்துகொள்ளலாம். ரேகைகளின் பலா பலனும் அடங்கியது.

விலை ரூபா 1-50] [வி. பி. பி. செலவு 50 சதம்

---

நீங்கள் உங்கட்கு நடக்கும் திசா புத்திகளின் பலன்களை சோதிடரின் உதவியின்றியே பார்த்து அறிந்து கொள்வதற்கு

சுகர் பெருநாடி என்னும்

**திசாபுத்தி அந்தர பலன்**

என்னும் நூலில் திசாபுத்தி, அந்தர சூட்சும பிராண பலன்களும், அகஸ்தியர் நவநீத நூல், ஆதான திசை வாம திசை உடுதிசை, உற்பன்ன திசை, மித்துருதிசை, மகாப்பிராயண திசை ஆகியவை கணிக்கவேண்டிய முறைகளும், அவற்றிற்குரிய பலன்களையும் விபரமாக பிறர் உதவியின்றி தாமே சுலபமாக அறிந்து கொள்ளுமாறு எழுதப்பெற்றது.

விலை ரூபா 2-00] [வி. பி. பி. செலவு 50 சதம்

**கலா நிலையம்,**
175, செட்டியார் தெரு,
கொழும்பு

ஸ்ரீ நிரஞ்ஜன — நல்லூர் — 1235 — 11 — 63.